1825

தேவி-கீ முணீசித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக

ஞானசாஸ்திரத்திரட்டு

ஆரம்பாகப் புஸ்தகம்.

A 697/2

இது

மதுரை வித்துவான்

த. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

பரிசோதிக்கப் பெற்றது.

மதுரை தமுமண்டபம் புத்தகஷாப்

இரண்டாம்.

குருஞானமிர்த சாகரம்

அவர்களாற் பூரணமாக

மதுரை கடைச்சுப்பிரமணிய

பிரதிஷ்டாபகரான சுவாமிகளின்

பரிசோதனைப்படியது.

1914.

Registered Copy Right.

கடவுள் துணை.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தநிபர்களுக்கும், புஸ்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த யோக ஞான சாஸ்திரத் திரட்டு என்னும்பேர்ப் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின முடிவிற் கண்டிருக்கிற ஓவ்வொரு மகான்களிடத்திலும் ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சகல சுதந்தரத்துடன் பெற்று, என் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுச் சாஸ்திரங் களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப் போதுமான திரவியத்தைச் செலவு செய்து என்னுல் (கெவர்ண்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர்செய்திருப் பதால் இச் சாஸ்திரங்களைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடா தென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொண்டேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷோப் புதுமண்டபம் மதுரை.

முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனால் உற்பத்தியாக்கப்பட்ட பலவுயிர் களிலும், தேவதைகளும்-அண்டஜமும்-உற்பிஜமும்-சாயுஜமாகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசி களிற் சிரேஷ்டமானது இம்மானிடப்பிறவியேயாம்; இதில் ஜனிக் கும் சிசுக்கள்-பாலர்-குமாரர்-எவ்வனர்-விருத்தர்களாகிய ஆண் பெண் னினங்களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காம மோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக் கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மய சொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலை ஏடுகளில் எழுதி, வீடுகளில் காலி மாலி பூசை யில் வைத்துப் பூஜித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷ யமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்பர் இ. ராம. குருசாமிக்கோனார் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏட்டுப் பிரதி கள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும், கனம் ந. ராம. கணபதி யாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருந்த ஓலைச் சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதினெண் சித் தர்கள் பாடல்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனி யும், எல்லும் ஒளியும் இருப்பது போல, என்பாற் பிரியா தெழில் நட்பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பா" இ. ராம. குரு சாமிக்கோனரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வகடாக்ஷத்தால் திருப்பரங்கிரியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ் வர சுவாமியவர்கள் தமது ஆச்சிரமத்திற் கையாண்டுவந்த பலசாஸ்

திரங்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத் தில் எழுதித்தொழுகிப் பார்க்கையில் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டு வரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுனைசு மோனைக ளேதுமில்லா திருந்தன. அவைகளைப் பூர்த்தி செய்யமேண்டி, இடபுஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும் ஒவ்வொரு சாஸ் திரங்களின் முடிவிற் கவ்டிருக்கிற நமது ஆத்மநண்பர்கள் ஒவ்வொரு வரிடத்திலும் ஒரு பிரதிக்கு காலு ரூலேயிட்டுப் பிரதிகளைப் பெற்று அவற்றுள் எழுதிருள்ள விசித்தப்பிரகாரம், அனேக மகான்களின் உத வியைக்கொண்டி என் சிறுஅறிவுக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய் தமைறி, இதற்கு ஆதாரிகி முனிசித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோக ஞான சாஸ்திரத் திரட்டு" எனத் திருநாமஞ் சூட்டிப் பணிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவ தற்காகப் பொருட் செலவும், நேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டி சதா துணைக்குருவியாயிருந்த மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரி யும், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்காரருமாகிய நமது நேயர் இ. ராம. குருசாமிச் சேர்வைகளது நன்றியும், காலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய எட்டைய நண்பர்களது நன்றியும் யான் என் றும் மற்க்கத்தகனவன்று.

இவ்விதம் பணிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய பெரிய சாஸ்திரங்கள் ஒரு புஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்தகத்தி லிலாதிருப்பதால், பணிரண்டு வாலியத்தையும் பார்ப்ப தவசியம். ஆகையால் ஒவ்வொருவருடை இதர்ன வாங்கிக் கையாண்டி வருவீர்க ளென நமபுகின்றனன்.

இங்ஙனம்,

தே. குப்புசாமி நாயுடு,

மதுரை.

இரண்டாவது புஸ்தகம்.

தேவசிரீ [illegible] திருவாய் மலர்ந்தருளிய.

யோக [illegible] சாஸ்திரத் திரட்டின்

அட்டவணை.

இலக்கம்	சாஸ்திரங்களின் பெயர்.		பக்கம்.
58	இராமதேவர்	அஷ்டாங்க யோகம் 50 ...	513
59	ஷை.	ஞானத்திறவுகோல் 16 ...	526
60	ஷை	சுத்திமுறை 50 ...	529
61	ஷை	மூப்புசூஸ்திரம் 31 ...	543
62	ஷை	பரிபாஷைவிளக்கம் 27 ...	551
63	ஷை	வயித்தியசூஸ்திரம் 83 ...	558
64	ஷை	ஞானம் 5 ...	580
65	ஷை	பூஜாவிதி 10 ...	582
66	ஷை	குருசூஸ்திரம் 16 ...	585
67	ஷை	தண்டகம் 110 ...	588
68	யாகோபு	வாதசூஸ்திரம் 57 ...	616
69	யோகசித்தர்	ஞானசூஸ்திரம் 17 ...	631
70	ஷை	யோகச்சித்தர்பாடல் 42 ...	636
71	வேதாந்தச்சித்தர்	ஞானசூஸ்திரம் 21 ...	640
72	ஷை	வேதாந்தச்சித்தர்பாடல் 32 ...	643
73	பிரமமுனி	ஞானம் 13 ...	648
74	ஷை	பிரமஞானம் 36 ...	652
75	ஷை	மூப்புதீட்சை 45 ...	662
76	சங்கமுனிவர்	விஷவயித்திய சூஸ்திரம் 16 ...	669
77	ஷை	விஷநூற் சுருக்கம் 8 ...	974
78	தன்வந்திரி	ஞானம் 12 ...	678
79	ஷை	ஞானசைதன்யம் 21 ...	681
80	ஷை	கலிக்கியானம் 32 ...	686
81	ஷை	ஞானவெண்பா 6 ...	691
82	ஷை	மூப்புசூஸ்திரம் 48 ...	693
83	ஷை	தண்டகம் 140 ...	704
84	சோரக்கர்	பிர்மஞான தெரிசனம் 17 ...	739
85	ஷை	கற்பசூஸ்திரம் 31 ...	744
86	ஷை	குருஜெயசீர் 10 ...	746
87	ஷை	வகாரசூஸ்திரம் 109 ...	751
88	திலோர்த்தமை	ஞானச்சுருக்கம் 26 ...	763

1697/2

உ

குருவேதுணை.

ஐம்பத்திதட்டாவ துஃ

இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய

அஷ்டாங்க யோகம் (நூ).

ஆதியிலே வாலைமனே மணிதான்கூவி
அழைத்தென்னை ஆதியந்த மறியச்சொன்னாள்
சோதியிலே கருவுருவை யுன்னிப்பாரு
சொல்லவொண்ணு வதிசயங்கள் தானேதோற்றும்
நீதியிலே சதானந்தி யென்னைப்பெற்றாள்
நீள்திசையி லுள்ளசித்தர் மெச்சிக்கொள்ள
வாதியென வந்தவர்க்குத் திறவுகோல்போல்
வசனித்தேன் பத்துமொரு எட்டும்மென்னே. (1)

நன்றும்மென் டாகியொன்றுங் கருவைத்தொட்டு
நானிருந்தேன் ஆதியந்தம் நீலக்கவேதான
ஒன்றுன ரூபமடா ஆர்க்குந்தாணு
உண்மையடா மவுனியவள் வாலைப்பெண்தான்
நின்றுனே நகாரமேல் மகாரங்கீழே
நிர்விகற்ப சமாதியென நின்றவாபி
சென்றுளே ஆதியந்த மறியவென்று
செகமயக்கத் திகைப்பூடுத் திலதம்பூண்டாள். (2)

பூண்டவள்தான் வீதியிலே நடனங்கொண்டாள்
புதுமையுள்ள சித்தாதபோ தனர்கள்கூடி
ஆண்டவளோ அல்லவென்றுள் வாமப்பெண்ணே
அருந்தவனை நிறுத்தவந்த அருமைப்பெண்ணே
தாண்டவத்திற் சிவனேவென்ற தாயேயென்று
தவமுனியுஞ் சிவமுனியுந் தானேகூடி
வேண்டுவதுக் கிவருனடைய நிதானங்கண்டால்
வேண்டலா மென்றுசொல்லி மயங்கினாரே. (3)

மயக்கமுற்று நிற்கையிலே நான்தான்மேவி
வந்தனடா அவளுடைய பாதங்காணத்
தியக்கமுற்ற சித்தர்களைப் பணிந்துபோற்றித்
தீர்க்கமுடன் நின்றனடா அவளைநோக்கி
ஜெயக்கமலக் கம்பதுனி மேலேதாவிச்
சென்றனங்கே சதாசிவத்தின் நிஷ்டைகூட்டி
நயக்கமல முகம்நோக்கிப் பார்க்கும்போது
நாதாந்த மணிமணியைக் கண்டேன்பாரே. (4)

கண்டவுடன் தொண்டுசெய்து நின்றேன்கோடி
காலமடா வெகுகோடி காலமட்டும்
நின்றனடா அப்பொழுது ஆத்தாளென்னை
நிமிஷத்தில் வாவவைழைத்து ராமாவென்று
பண்டுடைய தேவாவா வென்றுகூவிப்
பகர்ந்திட்டாள் பாலமுதம் பசியைத்தீர்த்துக்
கொண்டவள்தா னுபதேசம் நந்தியென்றுள்
கூரிட்ட ஆதியந்தங் குணம்பெற்றேனே. (5)

குணம்பெற்ற அதிசயங்கள் பாடிப்பாடிக்
குவித்தாலும் தலையாது கூர்ந்துபார்க்கில்
மணம்பெற்ற கருவெல்லாங் குவித்துக்கொண்டு
வாரினே னஞ்சாறு கருத்தானப்பா
தினம்பெற்ற திக்கருவை யெல்லாந்தள்ளி
திரமான நற்கருவை மாலையாக்கித்
தனம்பெற்ற பெட்டகம்போற் கொண்டேனப்பா
தாயான மணிமணியின் தவத்திருமேலே. (6)

தவமான அஷ்டகர்ம மெட்டிடட்டுக்கும்
தாயான மூலியொன்று சொல்லப்போகான்
உவமான வாலையடா ஒளிக்கவில்லை
உத்தமனே பேய்பிரட்டி வடவேர்வாங்கி
நவமான ஐங்காய மதின்மேற்பூசி
நாமெவ்வுட கும்பச் சிலையைநாட்டி
தவகாச மாகவா சனத்தின்மேலே
தயங்காதே பேசுதடி சகழம்பண்ணே. (7)

பண்ணவே சத்துருவும் வினையுங்கிட்டார்
பார்தனிலே துஷ்டருட பகையுங்கிட்டார்
கண்ணவே அன்பினுட வேலுங்கிட்டார்
கருவான பிரங்கி யிடியுங்கிட்டார்
வண்ணமுள்ள மிருகமுட னஷ்டாகம்
வாதாடும் பேய்கணங்கள் மற்றுமுள்ள
னண்ணவொண்ணுச் சத்துருக்க ளொன்றுமில்லை
யேகாந்த மதிணுமணியுன் னியல்புதானே. (8)

கானவனுய் நின்றதொரு மூலிதன்னைத்
தம்பனத்தாற் கும்பித்துக் கீழ்வேர்வாங்கிக்
கோனருளால் நாதவிந்து தெளிந்ததண்ணீர்
கூர்மையுள்ள முலைப்பாலுந் தேனுங்கூட்டிச்
சானைகல மானதொரு சாணைதன்னில்
தம்பனத்தால் தானுரைத்துத் திலதமிட்டால்
தோணுத தொன்றுமில்லை யெல்லாந்தான்றும்
கூந்தரம்போ லின்னமொரு கருவைக்கேளே. (9)

கருவான திலைகப்பூடு தன்னைவாங்கிக்
கருக்கிழுற் கருவுப்பிற் கருவுங்கூட்டிப்
பருவமாய்க் கோசமுடன் பீசங்கூட்டிப்
பரமருரு மையெனவே திலதம்போட்டால்
திருவான லெட்சுமிப்பெண் வாசமாகிச்
செகமல்லா மவள்வசன மேலதாகிக்
குருவான டெரியோரைத் தெரிசித்தோர்க்குக்
குருமையே யிதுவுமடா கூர்ந்துபாரே. (10)

பாரப்பா திரிகோண மகத்தாடிவிஞ்சை
பண்புடனே அதிணுடைய மார்க்கங்கேளு
ஆரப்பா அறிவார்கள் சித்தர்காண்பார்
அப்பவப் பொருளேயோ கனத்தாற்பற்றி
வீரப்பா செய்யாமற் றயிலம்வாங்கி
விபரமுடன் வழலைபுப்பை மேலேதூவி
கூரப்பா சதாசிவத்தைதத் தியானஞ்செய்து
கொடுமோஞ் சுத்தஜல மிதுவுமாச்சே. (11)

ஆச்சப்பா மகாரசத்தை யதிலேமொட்ட
அப்பனே பொங்கியது குளிகையாகும்
பேச்சப்பா அஷ்டசித்தும் ஆடிப்ஆடும்
பேரண்டஞ் சுத்திவரும் பேசப்போமோ
வாச்சுமித பாராபரத்தின் குளிகையொன்று
மைந்தனே அனுதினமும் வணக்கமுற்றால்
தாச்சியொன்று மில்லாரவி மதிபிலீயத்
தாயான மீனுமணியைத் தியானஞ்செய்யே. (12)

செய்யப்பா அவளுடைய தீர்க்கத்தாலே
செகம்விடுவாய் நின்றுகயி லாசந்தான்றும்
மெய்யப்பா சொல்லுகிறன் சுத்தஜலந்தன்னில்
மேன்மையுள்ள முற்கருவுந் தாக்கிப்பாரு
வையப்பா ஜலத்திலுப ரசங்கள்தன்னை
வாட்டிரவி முகங்கண்டால் மணிபோலாடும்
கையப்பா உதகமது மேலேமக்கள்
கருவுருவா மாயிரத்திற் கருச்சொன்னேனே. (13)

சொன்னேனைஞ் ஞாறில்பல திரட்டுமார்க்கம்
சுருக்கமுட னிருநூறில் யோகஞ்சொன்னேன்
என்னவென்ணு விதோதவகை நூறிற்சொன்னேன்
என்பதிலே வயித்தியத்தை யுனைத்துப்போட்டேன்
பன்னமைந்த பாலஷபதி னெட்டிற்சொன்னேன்
பக்குவமாய்ச் சோஷியத்தைப் பத்திற்சொன்னேன்
கன்னிநிறு சண்டனியின் கடாட்சத்தாலே
கருணையுள்ள தேவனென்று கரைகண்டேனே. (14)

கண்டதொரு கருவையெல்லா மொடுக்கிமைந்தா
கருணையுள்ள மீனுமணியின் கடாட்சத்தாலே
தொண்டரே யந்தவரைத் தொண்டுபண்ணி
சுந்தரம்போல் முப்பதிலே தொழிலைகாட்டி
அண்டரெல்லாங் கொண்டாட வெளியில்வந்தேன்
அப்போது வாராம தேவாவென்று
தெண்டனே கமண்டலமுங் கொண்டுபேசி
சின்மயத்தி னருளாலே திரம்பெற்றேனே. (15)

நிரம்பெற்ற தின்னமொரு கருவைவக்சேரு
தீர்க்கமுற் கருவும்பிற் கருவுங்கூட்டி
உரம்பெற்ற ரவிமதியு மொன்றுய்ச்சேர்த்து
உத்தமனே ரவச்சார மொன்றுய்க்கூட்டிக்
காரம்பெற்ற கல்வத்தில் மத்தித்தாக்கால்
கப்பளித்துக் கொப்பளிக்குங் கருணைதண்ணீர்
சிரம்பெற்ற கெங்கையடா ஜெயதீர்த்தன்னைச்
சிக்கெனவே குப்பிதனி லடைத்திடாயே. (16)

அடைத்ததொரு ஜெயநீரை மலமேற்குத்தி
அப்பனே அனல்காட்ட நீறிப்போகும்
படைத்ததொரு யிந்நீரை யிரும்பிற்றுக்கிப்
பக்குவமாய்க் குக்குடத்திற் பற்பமாகும்
திடத்துடனே அந்நீரைச் செம்பிற்பூசிச்
சிக்கெனவே காடையொரு புடத்தில்நீறும்
அடைக்கலம்போ லெனையீன்ற தேவிசொல்ல
அப்பனே யானறிந்து அருள்பெற்றேனே. (17)

பெற்றதொரு கருவொன்று சொல்லக்கேளு
பேசாதே அடைக்கலத்தின் முட்டைவாங்கி
உற்றதோ ரண்டத்தி லேட்டின்மேலே
உட்கருவைத் தான்தடவி யுலரவைத்து
கற்றதொரு மந்திரத்தைத் தியானஞ்செய்து
கருத்துடனே அடுப்பேத்தித் தீபமேத்தி
பத்தியதோர் மையெடுத்துப் பதனம்பண்ணிப்
பசுமையுள்ள கருத்தொட்டு மத்திப்பாயே. (18)

மத்தித்துக் குருபரனைத் தியானஞ்செய்து
மார்க்கமுடன் நெற்றிதனில் திலதம்போட்டுச்
சுத்தமுட னெதிர்நோக்கிப் பார்க்கும்போது
சுடரொளிபோற் பாதாளந் துலதாளேடம்
பெத்தநிதி யெல்லாங்கை வசமேபண்ணும்
பேசாதே தவமகிமை பேணிப்பாரு
அத்தனருள் பெற்றதொரு வாமப்பெண்தான்
அகலாது உன்னிடத்தி லருள்செய்வாளே. (19)

செய்யவே யின்னமொரு கருவைக்கேளு
செகத்துள்ள பிணிகளெல்லாந் தீர்வதற்குப்
பையமுற் கருவம்பிற் கருவங்கூட்டிப்
பக்குவமாய்க் காரமுடன் சாரஞ்சேர்த்துக்
கையுடைய கணபதியைத் தியானஞ்செய்து
கருவான சற்பூர விந்துநீரால்
ஐயனே கல்வத்திலாட்டிப்பார்க்க
அரகரா மெழுகுபத மாகும்பாரே. (20)

பாரப்பா இம்மெழுகைத் தேனிலாட்டிப்
பக்குவமாய் நோய்தனக்குப் பகுந்தாயானால்
ஊரப்பா விட்டோடும் பிணிகளெல்லாம்
உத்தமனே இம்மருந்து வுறுதிமெத்த
வாரப்பா மெழுகுதனில் நாதவிந்தை
வகையுடனே விட்டுமொரு திலதம்போட்டு
நேரப்பா நின்றபிணி நோலையப்பார்க்க
நிபிதைத்தி லாடிவிடும் நிசஞ்சொன்னேனே. (21)

நிசமாக யின்னுமொரு கருவைக்கேளு
நீள்நிசையி லுள்ளசித்தர் மெச்சிக்கொள்ள
வசமாக ஆவின்பால் லுருவிவாங்கி
வகையுடனே அண்டம்போற் சுத்திக்கொண்டு
பிசகாம லாலடகனை யதன்மேற்சுத்தி
பிரளாமல் வைத்திதின்மேல் ரவியைக்காட்டப்
பிசகொருநாள் வாராது உருகிநிற்கும்
பிரிபடாமல் முனைதித்துப் பதனம்பண்ணே. (22)

பதனமப்பா யிக்கருவைப் பதனம்பண்ணு
பாரிலுள்ள அதிசயங்க ளெல்லாந்தானும்
விதனமப்பா ஒன்றுமில்லை சிறியாணங்கை
யேலைநிழ லுலர்த்திகுழித் தயிலம்வாங்கிச்
சதமான கருவெடுத்துந் தயிலஞ்சேர்த்துத்
தம்பனத்தாற் முன்குனழத்துச் சிமிழில்வைத்து
நிசமான வசீகரத்தைதத் தியானஞ்செய்து
நின்றநிலை தானறிந்து திலதம்போடே. (23)

போட்டடா ரேசகபூ ரகும்பண்ணிப்
புனிதமுடன் கும்பகத்தில் நின்றுயாளல்
சோட்டடா ஏன்றுமில்லை யெல்லாந்தோ றும்
தொல்லுலகிற் கீழுழு லோகந்தோ றும்
பூட்டடா பூட்டெல்லா மீதுமேலசான்னேன்
புண்ணியருக் கெய்துமடா கருமிக்கில்லை
நாட்டடா திசைசக்கம்பம் நாட்டிப்பாரு
நடுவான பூரணத்தின் நன்மைதானே. (24)

நன்மையுள்ள மகாரசத்தின் சுத்திகேளு
நவகோடி சித்தர்மறு மெய்க்கமேவதான்
மென்மையுள்ள விந்துவுடன் நாதங்கூட்டி
விசையான வழலையுப்பை அதின்மேற்றானி
உண்மையுள்ள ஜலமாகும் வழலைதண்ணீர்
ஓங்கார மானஜலந் தன்னிலேதான்
தன்மையுள்ள மகாரசத்தை யுருக்கிச்சாய்க்கத்
தவளநிற மானதொரு மணிபோலாமே. (25)

மணியான மதேனுமணியை நாதத்தூட்டி
வரையான விசுத்திவரை நன்னிலாட்டிக்
கனியான கனியென்ற நாலாங்காலக்
கருவேற உருவேறக் கருதனுள்வைத்துத்
தனியான சமாதுதனி லிருந்துரோதத்தால்
தங்கமடா தேகமுமாய்த் தானேயாகிப்
பனியான பலிதாழிலுக் கிதுவேமுந்தி
பஞ்சசத்தி ரூபமெனப் பகராலாமே. (26)

பகரவே துருசினுட பற்பங்கேளு
புகுமையொளி பெற்றதொரு நாதமாகும்
சிகரவொளி பெற்றதொரு விந்துதன்னைச்
சிவசிவா ரெண்டுடனே ஒன்றுகூட்டி
அகலாத அண்டநீர் தன்னிலாட்டி
அப்பனே ரசிதாண நீறிப்போகும்
இகபரசா தனம்பெற்ற பற்பந்தன்னை
பீடமில்லாத் தனைதகரிலே போடுபோடே. (27)

போட்டவுடன் கசிந்துவெகு தண்ணீராகும்
பொல்லாத பால்களிமல போட்டாயானால்
காட்டமுடன் திரையகற்றிச் சுத்தநீராம்
நன்மையுள்ள செயநீரைப் பதனம்பண்ணி
வாட்டமில்லாச் சரக்குகளைத் தோய்த்துவாட்ட
வகையுடனே கட்டியது மணிபோலாகும்
தாட்டிகமாய்ச் சொன்னனடா துருசுப்போக்கு
தாயான மனோமணிதன் தவத்தினாலே. (28)

தவமான கொங்கணவன் போலேசித்தன்
தாரணியி லில்லையடா தவக்குடோரி
சிவமான செபதபங்க ளவனைப்போலே
சீக்கிரத்திற் றெளிந்தவர்க ளாருமில்லை
நவமான கிரகநிலை தன்னில்நின்று
நாலுலெட்சங் கோடிவரை சித்துமாடி
பவமான நத்தியொளி கண்டதாலே
பட்சணியை யிம்பதுக்குட் பாடினேனே. (29)

பாடினேன் பட்சணிக ளெல்லாம்பார்த்துப்
பண்பான குருயாவும் பார்த்துத்தேர்ந்தேன்
நாடினேன் கொங்கணர்பட் சணியைப்போல
நாட்டினேன் பட்சணியின் குருவையெல்லாம்
தேடினேன் நடுவாம்பூ ரணைத்தினாலே
சிவசிவா சொல்வேன்பட் சணியின்மார்க்கம்
கூடினேன் குகைவாசல் தன்னில்நின்று
கும்பிட்டேன் பட்சணியின் குணம்பெற்றேனே. (30)

குணம்பெற்ற பட்சணியை வாமம்வைத்துக்
குண்டலியாந் தெட்சணியை வலத்தில்வைத்து
இணம்பெற்ற மாதரசைத் தியானஞ்செய்ய
யீரேழு லோகமதி லின்பமான
தனம்பெற்ற அதிசயங்க ளெல்லாந்தோற்றும்
தானவனும் நின்றதொரு தவமேதோற்றும்
மனம்பெற்ற யீராறு தலமுந்தோற்றும்
வஞ்சகங்கள் சத்துருவும் வசியமாமே. (31)

வசியமுள்ள பட்சணியை வலத்தில்வைத்து
வகாரமுள்ள தெட்சணியை யிடத்தில்வைத்துப்
பசியழுதப் பால்புகட்டும் லோகமாதா
பாதமலர் தானெடுத்துச் சிரசில்வைத்துக்
கசியமன முருகிடவே தியானஞ்செய்யக்
காயசித்தி யோகசித்தி வாதமெய்தும்
உசிதமுள்ள பட்சணியைக் கண்டகாலம்
உதவியருள் தெட்சணியை யுத்துப்பாரே. (32)

உத்துப்பார் பட்சணிதெட் சணிதானென்பார்
ஓகோகோ அதிஷ்டையுடைய கருவைக்காணும்
பெத்ததொரு பட்சணியின் கருவைக்கண்டாற்
பிசகாது வாதசித்தி யோகந்தானும்
அத்தனருள் பெற்றவர்க்கே யெய்துமெய்தும்
அகரா பட்சணியின் கருவைக்கேளு
சுத்தமுள்ள கொங்கணவர் மறைப்பாய்ச்சொன்னார்
சொல்லுகிறேன் வெளிதோணச் சொல்லுவேனே. (33)

சொல்லவே யாதியந்தப் பதிவைப்பாரு
துலங்குமடா அப்பொருள்தான் விஷ்ணைவிஷ்ணை
வல்லவர்கள் தானறிந்து பதிவைப்பார்த்து
வசீகரத்தால் மோகனதம் பனமேசெய்து
அல்லலது தானகற்றி யேகமூலி
யாசரித்து வடவேரை அன்பாய்ப்பதித்து
கல்லகுண முடையவரு மில்லல்லாவை
காட்டிரு னஞ்சிதழாய்ப் பத்துநோம்பே. (34)

நோம்பான மூப்பதுநாள் நோம்புமார்க்கம்
நுண்ணிமையா லறியார்கள் புவியின்மீது
பாம்பான அஞ்சுதலை நாகமையா
படமெடுக்கும் விசையறிந்து பதிவைப்பாரு
தாம்பான சலதானைக் குத்துக்கல்லைத்
தகர்க்குமடா அந்நாகஞ் சீறிக்கொத்தும்
நீம்பாமற் கிடக்குமஞ்சு தலையின்நாகம்
நேராக ஐலைஞ்சா யிருபத்தஞ்சே. (35)

அஞ்சான ரெண்டுபத்து அஞ்சுங்கூட்டி
அம்மம்மா மூப்பதுகாள் நோம்புமாச்சு
நெஞ்சான அஞ்சுதலை பத்துநோம்பில்
நின்றுடு மில்லல்லா யிறசூலாகி
அஞ்சாகிப் பூவாகிப் பிஞ்சுமாகி
அகாரமுதல் உகாரம்வரை நாலுங்காணத்
தஞ்சாத பூமலர்போற் கொடிதான்கட்டித்
தடுக்கான அசனுசனு மாண்டார்பாரே. (36)

மாண்டவர்கள் குறியறியார் மஸ்தான்சாய்பு
மக்கத்திற் கொடிக்கட்டி வாழ்ந்தாரப்பா
ஆண்டவர்க ளதிற்கோடி காலம்வாழ்ந்து
அரும்பொருளை யறியாமற் சூலமேவித்
தூண்டாத விளக்கொளியைக் கண்டுமேவித்
தொழுதனடா யிருகையாற் செவிவாய்மூடி
பூண்டனடா பூமியிலே பாய்ந்தேனப்பா
பொற்குறியைக் கண்டுநான் ஆஹவென்றேனே. (37)

ஹவென்ற சொற்கேட்டு நபிமாரெல்லாம்
உற்றகுண் டலியசைத்துத் தீன்தினென்று
ஆவெனற நபிமார்க ளென்னைப்பார்த்து
அசனுசனும் வேறல்ல நீநானென்றார்
மாவென்ற மொட்டினையொன் றீய்ந்துகல்ல
மக்கத்திற் போயிருங்க ளென்றுசொன்னார்
ஈவென்ற சொல்லேது ஆப்ஹவென்று
யிருந்தனடா கோடிவரை யிறசூலென்றே. (38)

சூலான பிண்டமதை வாங்கிமைந்தா
துடியான வழலியுப்பை அதன்மேற்றூக்கி
நாலான நாற்பதுகாள் சமாதிவைக்க
நற்குழம்பாய்ப் பின்னுமது மெழுகுமாகும்
தேலான அம்மெழுகைக் குன்றியுண்ணைத்
திறமாக மண்டலத்திற் சட்டைதள்ளும்
தோலான தேகமப்பா யிருகிநல்ல
சோதியுள்ள அருணைனைப்போற் றோன்றுந்தானே. (39)

தானவனுய் நின்றதொரு பெழுகுதன்னைத்
தம்பனத்தால் காதவிந்து தன்னுலடட்டிக்
கோனருளாற் சிமிழ்தனிலே பதனம்பண்ணிக்
கொடிதான நோய்களுக்குக் குன்றியிவாய்
ஊனமெனும் ஊரைவிட்டுப் பிணிகளெல்லாம்
ஓடிவிடும் அவனிருக்கு மூரைவிட்டுத்
தேனமுதப் பட்சணியின் கருவிலுலே
சிவசிவா அஷ்டகர்மந் திரம்பெற்றேனே. (40)

திரம்பெற்ற பட்சணியே தெய்வந்தெய்வம்
சகத்திலே வேறுமொரு தெய்வமுண்டோ
வரம்பெற்ற தெட்சணியே காமலூடி
மதியுடன்தா னிருத்திப்பட் சணியைப்பாரு
திரம்பெற்ற அழுதமடா மீவாளாததாள்
சென்றுங்கே சதாசிவத்தின் நிஷ்டைகூடிக்
கரம்பெற்ற கருவான காலமூன்றும்
கண்டுமதி னதிசயத்தைக் கருதலாமே. (41)

கருதவே யின்னமொரு கருவைவக்கேகரு
கற்புடைய மனேமணியின் கருணையாலே
உருகவே யாதியந்த நிலையைப்பார்த்து
உருவான கருவுருவாம் மதனப்பூடு
தருகரே சகத்தாற்பூ ரணத்தைப்பற்றித்
தாயான மனேமணியைக் கருத்திலில்லைவத்துந்
திருகாமல் நின்றநிலே தன்னில்நின்று
சிவசிவா தம்பனைத்தால் வடமேவங்வாங்கே. (42)

வாங்கியே அவ்வேலைக் கண்டமாக
வாளரத்தால் வெட்டிசிறு கலசஞ்சேர்த்துப்
பாங்குடனே நவச்சாரம் பூரம்வெள்ளே
பாஷாணம் வீரமொடு ரசகற்பூரம்
தீங்கில்லாக் கெந்தியுடன் வழலேயுப்பு
தீர்க்கமுள்ள வெடியுப்புப் பூரீர்கூட்டிச்
சாங்கமாய் வலைகுக்குவொரு பலமேவாங்கித்
தப்பாமற் கலசமதிற் றண்ணீர்சேரே. (43)

சேர்த்துடனே மேற்சட்டி கொண்டுமூடி
தீர்க்கமுடன் சீலைசெய்து தமர்தானிட்டுக்
காத்தெடுக்க மானதோர் நிலத்தில்வெட்டிக்
கலசமொன்று பதியவைத்து அதின்மேற்பானை
பாத்துடனே மட்சுலசம் நிற்கவேதான்
பக்குவமாய்த் தான்கவசச் சீலைசெய்து
சாத்தடா மணற்பானை யரைமட்டிட்டு
தப்பாம லெருவடிக்கிப் புடந்தான்போடே. (44)

போட்டபுடம் ஆவிட்டுப் பதனமாகப்
புண்ணியனே தானெடுப்பாய் தயிலந்தன்னைப்
பாட்டதிகஞ் சொல்லவில்லை அப்பாகேளு
பக்குவமாய்க் குப்பிதனி லடைத்துக்கொண்டு
தாட்டிகமாய் மதினைமணியைத் தியானஞ்செய்து
தவறுமற் றயிலத்தைத் திலதம்போட்டால்
நாட்டதிக மானபயி ருயிர்களெல்லாம்
நாதனென வணங்கியுன் வசமாம்பாரே. (45)

பாரப்பா யின்னுமொரு கருவைக்கேளு
பக்குவமாய்ப் பீங்கானிற் றயிலம்வார்த்து
காரப்பா மதினைமணியைக் கருத்தில்வைத்துக்
கருணையுள்ள அரிதாரக் கட்டிவாங்கி
சேரப்பா வீரமொடு லிங்கம்கெந்தி
நிசனவாகத் தயிலமதில் வீரியப்பா
ஆரப்பா உனக்கீடு வுலகிலில்லை
அகலில்லைத்துப் புடமிடச்சொன் னாரமாச்சே. (46)

ஆச்சப்டா சொன்னாரத் தொழிலைக்கேளு
ஆச்சரியம் மலையும்பொன் னுகும்பாரு
பேச்சப்பா ஒன்றுமில்லை குன்றியுண்ணை
பிலத்துதடா ஆக்கையதற் கழிவுமில்லை
மூச்சப்பா ஓடாது முன்பின்னுக
மூதண்ட மொட்டிவரும் முழிக்குமுன்னே
காச்சப்பா யிரும்புதனைக் காச்சிக்கொண்டு
கருணையுள்ள தயிலமதை மேலேவாரே. (47)

வாத்திடவே யுருகியது சத்தாய்ப்போகும்
மக்களே அயச்சத்தைச் செம்பிற்றாக்கிப்
பாத்திடவே வுருகியது பசும்பொன்னாகும்
பக்குவமாய்த் தகடடித்துத் தயிலம்பூசிச்
சாத்தடங்கும் நிலத்தனிலே புடத்தைப்போடு
கனகமணிச் சுந்தரா மாகுமப்பா
பூத்தடங்கும் மதிதனிலே பத்துக்கொன்று
பூட்டிநேற் பதிறைறு மாத்துபாமே. (48)

ஆமப்பா யின்னுமொரு சேதிகேளு
ஆயிமணி மணிபாத மன்பில்லைவத்து
நாமப்பா சொல்லுகிறேறும் நன்றுய்க்கேளு
நாலுபலம் பகாரசத்தை வாங்கிவந்து
காமப்பால் கானற்பால் ரெண்டுங்கூட்டிக்
கருணையுள்ள தயிலமதிற் கொஞ்சம்விட்டுச்
சாமப்பா மகாரசத்தை யுருக்கிச்சாய்க்கத்
தவளநிற மானதொரு மணிபோலாமே. (49)

பணியான நவமணியைத் தகடாய்த்தட்டி
வளமான தயிலமதை மேலேபூசிப்
பணியான அகலில்லைவத்துப் புடத்தைப்போடு
பரமகுரு சுந்தரா மாகும்பாரு
கணியான கனிபோற்சுத் தாரம்வாங்கிக்
கமலமலர்ச் சிமிழ்தனிலே பதனம்பண்ணி
வணிகரமாய் மதிதனிலே தாக்கிப்பாரு
மக்களே ஆயிரத்தி லெட்டுமோத்தே. (50

எட்டுரெண்டும் அறிந்தவர்க்கே யெய்துமெய்தும்
இல்லாட்டா லிந்நூல்தான் கிட்டாகிட்டா
துஷ்டருட னெந்நாளுங் கூடவேண்டாம்
துடியாக வொருவரையும் பேசவேண்டாம்
இஷ்டமுட னிந்நூல்தா னெம்பத்தொன்று
ஏகமாய் மவுனமுட னிருந்துகொண்டு
அஷ்டாங்க யோகமதைத் தினமும்பாரு
அருளான மசீமுமணிதான் காப்பாள்முற்றே. (51)

இராமதேவர் அஷ்டாங்கயோகம் நூல்,

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஐம்பத்தொன்பதாவது:

ஞானதீபவுகோல் யசூ.

தானென்ற சூதன்றனுஞ் சங்கரன் ரூபமாச்சு
வானென்ற ரூபந் தானும் மகத்தான சூத மாச்சு
கானென்ற நீருமொன்றுய்க் கலந்ததோர் வாயுவென்னக்
கோனென்ற சூதந்தன்னைக் கூறவுங் கூடாதென்னே. (1)

கூடாத சூதந் தன்னைக் குருவிட்டுக் கட்டிச் சென்பார்
போடாதீ தங்க மென்ன போடுவ தென்ன வென்பார்
வாடாதீ வாதந் தானுமகத்தான யெளிதெ யென்பார்
தாடான சுவருக் குள்ளே தனிக்குட்டிச் சுவரு தானே. (2)

சுவாகி யிருந்தா னெதிற் செய்தொழில் மறைப்ப தாகும்
சுவராகிக் சுழுனை செத்துக் கட்டின ழுனாதா னென்பார்
எவராகி யிருந்தா லென்ன யேற்கையாய்ச் சூதங் கட்டார்
தவராத யோகி யோகி தனிச்சூதங் கட்டுவாரே. (3)

கட்டினற் பொன்னுமுண்டு கட்டட்டாற் பொன்னுமில்லை
கொட்டினற் றேளை யாச்சு கொட்டாட்டாற் பிள்ளைப் பூச்சி
எட்டினல் ரசத்தைப் பாரு யெட்டாட்டாற் றுழலிலப்பாரு
கெட்டினற் கினிருந்தே னென்று கெடுகாதே மூடா கேளு. (4)

கேளிந்தச் சூதக் கட்டுக் கிடையாதே போச்சுதென்று
பாரூரீ டாசாணத்தைப் பார்த்தூரீ மயங்கா தப்பா
வேளேயே யெரித்த யீசன் விளம்பினார் தேவிக் கன்று
கோளுரீ வந்த பேருக் கொடுரசம் வாதந் தானே. (5)

தானென்ற சூதந் தானே சக்கிதா னந்தமாச்சு
தானென்று சூதந் தானே தயங்காது போதமாச்சு

தானென்ற சூதந் தானே சமரசப் பிர்ம மாச்சு
தானென்ற சூதன் சித்து தன்னுக்கு ஞண்டபாரே. (6)

பானென்ற சூதங் கட்டப் பகர்ந்திட்டேன் முன்னே பாலும்
வானென்ற பேழு சிங்கி வகையெல்லாஞ் சொன்னேன் சொன்னேன்
தானென்ற சிறுபெண் சொல்லச் சாதித்துப் பாகங் கண்டேன்
தேனென்ற வாத சித்தி சித்திக்கு மிந்நால் பாரே. (7)

பாருநீ சூதஞ் செத்தாற் பனிச்சென்று பொன்று மாகும்
பாருநீ சூதஞ் செத்தாற் பாவியே உடம்பு பொன்னும்
பாருநீ சூதஞ் செத்தாற் பாபரை முன்னே நிற்பாள்
பாருநீ சூதஞ் செத்தாற் பார்க்கலாங் கெவுனங் கேளே. (8)

கேளுநீ சூதஞ் சாகக் கெடியான யிணங்கன் சொல்வேன்
மாளுநீ கார சாரம் மகத்தான சுண்ணங் கொல்லும்
கூருநீ லோக மெல்லாங் கடிதான சூதங் கொல்லும்
தேருநீ பாஷா ணத்தைச் செயசுண்ணங் கொல்லுந்தானே. (9)

தானென்ற வுபர சங்கள் தனியான சுண்ணங் கொல்லும்
வானென்ற வுதகங் கொல்லும் வாங்கிய வஸ்து கொல்லும்
கானென்ற வழலை தாலுங் கடியதோர் மூலி கொல்லும்
தேனென்ற மொழியா ளெங்கள் சிவகாமி சொன்னவாறே. (10)

வாறுகேள் சூதங் கட்ட வகையெல்லாஞ் சொன்னே னப்பா
வேறுகேள் பூரணத்தின்வித்தான சிங்கி தொட்டுக்
கூறுகேள் சரக்குக் கெல்லாம் குலாவியே யிரட்டி வாட்டத்
தாறுகேள் வெவ்வே றுகத் தனிதனி வேறை தாமே. (11)

ஆமினிச் சொல்லக் கேளு அடங்கலுந் தொட்டு வாட்டக்
காமினி யுருக்கிப் போட்டுக் கடுஞ்சத்து மிதுவ தாகும்
போமினி தூர வேதை பூட்டவே யறிந்தா யானால்
தாமினி சூதத் தூட்டித் தனித்தனி விடுவிச்சேறே. (12)

ஏறவே வல்லா ருகில் யெட்டெட்டு மாட லாகும்
ஏறவே வல்லா ருகில் யெடுத்திடுங் ஙவன வீதி
ஏறவே வல்லா ருகில் யெடுதிடும் போதத் துள்ளே
ஏறவே வல்லோன் சிந்தன் இறப்பிறப் பொழிந்து போமே. (13)

போமென்ற யீசன் சொல்லப் புகழாதே தேவி கேட்டு
ஆமென்ற சந்தோ ஷத்தி லடிமைக்குச் சொன்ன ளெப்பா
தாமென்ற சித்த மெல்லாந் தனக்குமே அடிமை யாச்சு
வாமென்ற வாமத் துள்ளே வளமாகப் பூசை பண்ணே. (14)

பூசையை மறந்துபோனற் போட்டதோர் சூதம்போகும்
பூசையை மறந்துபோனற் புகழுதாய்ச் சித்தி போகும்
பூசையை மறந்துபோனற் போகாது காதந் தானும்
பூசையை மறந்துபோனற் புருவமை யத்தைக்காணுர். (15)

காணுது ஒன்று தானுங் கண்கெட்டாப் போலே நிற்பான்
தோணுது சொருபி யந்தச் சூரபமு மொளித்துப் போகும்
பூணுது மனது வொன்றிற் போதத்திற் பூரணட்டாது
ஊணுது ஊரணட்டாது ஒருதொழிற் கூடாதென்றே. (16)

இராமதேவர் ஞானத்திறவுகோல் யசூ,

மூற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் க. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

அறுபதாவது:

இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய

சுத்தி முறை நூல்.

முந்நாறும இந்நாலம் விதோதம்நாறில்
மேலான வித்யைதனட்குத் தயிலங்கானவி
பந்நாலைறஞ் நூறுபல திபட்திக்குந்தான்
பாலகமென இம்முறைகான் டிடமெனாதி
வந்நாறிற் பன்னிடாழி பதினைஞ்போம்பு
மகத்தான அஷ்டசித்தும் வியோபாடமாபர்
கொந்நாறும் முந்நூற்று முப்பான்மேலே
குறைவுவராச் சுருக்கமான்று கூறத்தகுமோ. (1)

கூறுகிறேறும் சுந்தரமே சொல்லக்கேளு
கோடான கோடிநூ லிதுக்கொவ்வாது
ஆறுகிறேறும் இதற்கதிக்த அஞ்சுநூலும்
ஆகார பூலைசெய்து அடக்கம்பண்ணு
வாறுகிறேறும் மூன்றேறிம் மொழியைக்கண்டு
வடமொழிக்குக் குருமொழிதான் மேலாமென்றார்
பாறுகிறேறும் பதினைஞ்போர் பாடுறுக்கள்
பலவிதமாய்க் கால்தலைவால் உடல்காணுமே. (2)

காணுதே போகவல்லோ மேல்கீழ்கொண்டு
காசினியோ ரலையகன திரட்டாய்ப்பேபாட்டார்
ஆனுதே சுந்தரமே மவனப்பூட்டை
அகதரியர்மே லாணையடா மருமம்விட்டேன்
மூனுதே முக்கருமுப் பூவும்விண்ப்டன்
முந்நூற்றின் முப்பொருளே யுண்மையாக
வானுதே வழலையென்றால் விழலையல்ல
வாதிகளே நீதியுடன் சேதிசேமோ. (3)

சேதியென்ற லஞ்சியப்பா சொல்லக்கேளு
சிற்பரைப்பெண் கற்பரையாள் செய்கையாலே
நாதியென்றல் வேணதழுறை பாதைகண்டு
நான்மறைகள் வேதத்தோ டாறுங்கண்டு
பாதியென்றல் முந்நூறின் பாகங்கண்டு
பாலித்தோம் முகிதலுடன் முத்துங்கண்டு
ஆதியென்ற லஷ்டகர்மக் கருவுங்கண்டு
ஆனமைப்புக் கண்டறிந்து அருளினேனே. (4)

அருளினே மகத்தீச ருபதேசத்தால்
ஆறுபி ரத்தாறு சதத்துச்சொச்சம்
சருளினேனும் சகலநூற் கதிகமாகச்
சரம்பொழிந்தாற் போலேயல்லோ சாற்றக்கேளு
சொருளினேனும் சொல்லுமொழி நூல்கட்கெல்லாம்
சுருக்கியே சொச்சமதாய்ச் சூட்சஞ்சொல்வோம்
வெருளினேனும் விஷபூமி சுண்ணைக்கல்லு
விளம்புகினேனும் விஷசுத்தி விதமாய்க்கேளே. (5)

விதமான பதமறிசுந் தரமேமைமந்தா
வேதாந்த சாஸ்திரமுந் நூறுபீடம்
மதமான முந்நூற்றி முப்பான்சுத்தி
மறையாம லிம்பதுக்கு நுரையாய்ச்சொல்வோம்
பதமான பதினெண்பேர் நூல்கட்கெல்லாம்
பாகமதா மண்டசுத்தி முறைதப்பாமற்
சுதமான முறைவாதம் முந்நூறோடு
சொச்சமொழி யுணரவே முத்துங்கேளே. (6)

முத்தான முந்நூற்றி முப்பதுந்தான்
முந்நூற்றில் முக்கருவும் உணர்ந்தோமப்பா
சுத்தான சொச்சமப்பா புலத்தியாதர்
சொன்னமொழி யெம்பதுக்குட் சோதித்தோம்நாம்
அத்தான பத்தரப்பா சித்தர்மூலம்
அறைகிறே னெம்பதுக்குள் அடவெல்லாந்தான்
பத்தான பதனம்வெகு பதனமாகப்
பராபரன்மே லாணைப்படி பதனம்பண்ணே. (7)

பன்னுமொழி யென்னசொல்வே மின்னங்கே ளுரு
பதினெண்போர் மறைத்தமொழி பகரக்கேளுரு
அன்னுமொழி வண்ணமங்கு வாலப்பெண்தான்
அவள்சொன்னுள் சொற்பனத்தில் யானுங்கண்டேன்
மூன்னுமொழி முப்பொருளைப் புலத்யகாதர்
மூவருப தேசமனது புணர்த்தார்கேளுரு
தென்னுமொழி தெளிவதற்குத் தேவிவாலை
செய்பாக மிதையளித்தாள் தெளிந்தேன்பாரே.

தெளிந்தோர்கள இம்மொழியை நன்றுப்பார்த்துத்
தேசத்தில் வெளிவிடா தடக்கமாக
வளிந்தோர்கள் வாழுக்கற் பூதீபம்
மவுனத்திற் பூசைசெய்து வைத்துக்கொண்டு
எளிந்தோர்கள் இந்நூலிடம் பதையுங்கண்டோர்
ஏறுவார் வரையாறுக் கப்பாற்றூலும்
அளிந்தோர்கள் ஐம்பதையும் வெளிவிட்டோர்கள்
அரன்வாக்கு அண்டயிடித் தலவர்காமே. (9)

அலைவார்க ளிந்தநூல் வெளிவிட்டோர்க்கு
அரன்சொன்ன சாபம்வந்து அப்போசாடும்
பலைவார்கள் முன்னசிவார் மசிவாரப்பா
பதினெண்போர் வெகுசாபம் பாலிப்பார்காண்
கலைவார்கள் கடந்தேறு மாட்டாரப்பா
கண்டுசொன்னேனும் மவுனஅண்டக் கருவேகேளு
மூலைவார்கள் முந்நூற்றெண் பதுவாய்ச்சேர்த்து
மொழிதவரு சொல்லுகிறே முணர்ந்தவாறே. (10)

வாருனை வாமியுட கருவேகண்டு
வசனிப்போ மிந்தலிம்பத் தஞ்சுக்குள்ளே
யேருன யென்பாடற் கெல்லாம்மைந்தா
எடுத்துரைப்போம் மகாசுத்தி யிதுபோலுண்டோ
தேருன தேன்மொழியாள் வசியமாகத்
தென்பொதிகைச் சாரலிலே அனந்தங்கோடி
காருன கருவூரி லனந்தங்கோடி
கண்டுறிந்தோ மென்றறியார் கருவைக்கேளே. (11)

கோடா யென்மகனே மவுனயோகி
கிருபையுடன் சொல்லுகிறேன் கேளுமைந்தா
தேடா தெட்சணமாம் பொதிகைச்சார்பிற்
றெளிவாக வெகுகோடி யுகங்களப்பா
காடா தவமிருந்து தாயைக்கண்டு
கற்பனையின் வாக்கதனிற் றவரில்லாமல்
ஆடா அநேகநாள் கோடிகாலமே
அப்பனே தவசிருந்து கருக்கண்டேனே. (12)

கண்டேனே அண்டமெனும் பிண்டத்தாயைக்
காமப்பெண் வாமியுட கருவினிலே
கொண்டேனே அண்டமென்ற பிண்டத்தாலே
கோடான கோடியுயி ரொன்றினிலே
எண்டேனே யெவ்வுயிரவ் வுயிராய்ச்சொல்வோம்
ஏகவுப நிடமகிமை யென்னற்சொல்ல
மூண்டேனே மொழிதவரு னைதம்பதுக்குள்
மூதண்டக் கருக்குருவை உணர்வதாமே. (13)

கருவான கருவதனிற் றெவிவாலே
கன்னிபிர சன்னமதா யென்முன்நின்று
பருவான பரஞ்சோதி பரத்தண்டத்தின்
பருவமெல்லா மெனக்களித்து ராமாவென்றால்
சுருவான சுந்தரமே அழுதவாழ்வே
சூட்சறிவு சுருக்கமதாய் சூட்டக்சுருள
அருவான அய்யாவே சும்பமேமறி
அகண்டவரை யகண்டவரை காணுவாயே. (14)

காணுவாய் தூறையாறில் வரைநாள்கொண்டு
காமகரு சோமசுத்தி வாமப்பாலால்
ஆணுவாய் வைப்புமுதற் பத்துங்கொண்டு
அமுதபனி நீரதனில் யானைப்பாலில்
மாணுவாய் மஸ்தினியின் மவுனஅண்டம்
மதனப்பால் கொண்டுநீ மதியிற்கேளு
ஏணுவாய் யெட்டிரண்டும் பத்துக்குத்தான்
இந்தமுறை மவுனசுத்தி யெழிலாய்ச்செய்யே. (15)

செய்யெனவே வாமப்பெண் மொழிசெயகண்டி
சிற்பரையின் தற்பரைப்பெண் மகத்துவத்தாற்
பையெனவே பராபரியின் கிருபைபாலே
பாடுகிறேன் சுந்தரமே பத்துக்குருந்தான்
கையெனவே சித்தர்பதி னெண்மேற்மெச்சக்
கைபாகஞ் செய்பாகங் கருவாய்ச்சொல்வோம்
மெய்யெனவே யிப்பொருளைப் பார்த்தபேர்கள்
மேலான சித்திபெற்று வாழ்வீர்தாமே. (16)

ஆமென்ற பராபரம்வா ழுழுதபிர்மம்
ஆராலுந் திறக்கொண்ணு தகண்டப்பூட்டைத்
தேமென்ற தென்பொதிகை மலையில்வாழும்
தேவரருட் கிருபையிறற் புலத்தியகாதர்
வாமென்ற தலமுறைக ளிரண்டோடொன்று
மாகவித்து மூன்றல்லோ ராமர்யோகம்
வமென்ற யூகதவ முனியேயப்பா
எண்மொழியிற் தைதம்பதுக்கு ளிடங்காண்பாயே. (17)

காண்பாயே யிடமடத்தி லிருக்குமாவே
கருரவியின் மதியினுட கனிதாவே
மாண்பாயே அகண்டமஸ் தினியின்கற்பம்
மனிதனையே உடல்விஷக்கல் மகிமையாலே
பாண்பாயே பரவிஷக்கல் உடற்கல்சுத்தி
பராபரன்றன் பூர்வக்கல் சமாதிக்கல்லின்
ஆண்பாயே ஆதியந்தம் வாதிக்காக
அஸ்தினியி னுடல்விஷக்கல் லறிவைக்கேளே. (18)

அறிவான குருசொரூப மிருந்ததாலே
அமைப்பதுவும் விவேகபுத்தி யதனற்கேளு
வறிவான வழலைசுத்தி அமுதசுத்தி
வையகண்டப் பரைசுத்தி யதுக்கல்லாந்தான்
மறிவான மகாவிஷக்கல் லமுதவாக்கு
வசனித்தே முண்மையப்பா மாட்டுறேன்கேள்
தெறிவான குருபூமி நிலக்கற்பாரை
தேசத்தி லதிகமப்பா சண்ணைக்கல்லே. (19)

கல்லான கற்கொண்டு சொல்லக்கேளு
கழுநீராற் கழுவியே அழுதப்பாலிற்
பல்லான பாவண்ட முதற்றுன் வைப்பிற்
பத்தண்டங் கொண்டுவந்து பீங்கான்றன்னில்
ஒல்லான உடைத்துமே கல்தான்காய்ச்சி
ஓகோகோ சுண்ணைக்கல் லழுதத்திட்டு
மல்லான அழுதநீர் தெளிவாஞ்சுத்தி
மகத்தான சுத்தியைநாம் மாட்டக்கேளே. (20)

மாட்டக்கேள் நிலச்சுண்ணத் தாம்பூலக்கல்
வகையான கல்லதனைப் பலம்ரெண்டாக
வட்டக்கே ளக்கல்லைக் குடிக்கும்நீரில்
ஏழுதரம் கழுவியதை யெடுத்துக்கொண்டு
காட்டக்கேள் கல்வத்திற் கற்கொண்டிட்டுக்
காமரதி அழுதபனி அப்பால்விட்டு
நாட்டக்கேள் ஆட்டுபவாய் மூன்றுசாமம்
நளினமதாய் மெழுகுபத மாகுங்கேளே. (21)

கேளடா ஆட்டியே வழித்துக்கொண்டு
கேசரவி குலகசெய்து மதியில்வைப்பாய்
வேளடா நிழல்தனிலே யெட்டும்ரெண்டும்
விபரமதா யொன்பதுட சாமங்காய்ந்தால்
பாளடா போகாது குகைதான்கேளு
பதனமதாய்ப் பொட்டியிலே வைத்துஅப்பால்
ஆளடா அஸ்தினிபி னுடற்கல்லப்பா
அதினுடைய சுத்தியைநா மறையக்கேளே. (22)

அறையக்கேள் விஷக்கல்லின் பையைக்கொண்டு
ஆரணியி லூர்தனிலே அலம்பிநீதான்
பிறையக்கேள் கத்திகொண்டு நடுவேகீறி
போன கல்லுதனை யெடுத்துக்கொண்டு
மறையக்கேள் மலப்பனிநீ ரதனிற்கேளு
மாணிக்க மணிதனையே கழுவிக்கொண்டு
மூறையக்கேள் முன்சொன்ன அழுதங்கொண்டு
முறையான நிம்பழுச்சா ரதனிற்பாசே. (23)

பாரப்பா பனிரீரிற் பழுச்சார்னிட்டுப்
பருவமாய்ச் சரியிடையாய்ப் பரமாய்க்கண்டு
வேரப்பா விஷக்கல்தா னெடுத்துக்கொண்டு
விபரமதா யப்பாலி லொன்றேசாமம்
காரப்பா ரவிசாம மதியிற்சாமம்
நன்றுக நாலொஞ்சு யிரண்டேசாமம்
ஆரப்பா ஆஞ்சுநாளுக் கிதுவேவசுத்தி
ஆனபின்பு ஆறுநா ளறையக்கேளே. (24)

அறையக்கே ளின்னமொன்று சொல்வேனமைத்தா
ஆதியப்பா முன்சொன்ன குகைதான்கொண்டு
விறையக்கே ளிக்கல்தா னுடற்கல்லப்பா
விபரமதாய்க் குகைதனிலே விஷக்கல்லிட்டு
மெறையக்கேள் குகைமெழுகாற் சுத்திக்கட்டி
மேலான சீலைசெய்து ரவியிற்சாமம
செறையக்கே ளொருசாமம் ரவியிற்காய்ந்தால்
செயமாகுங் குகையெடுத்துச் செயலாய்த்தானே. (25)

தானென பூவரசம் பட்டைகொண்டு
தயவாக வதனிலே கரியாய்ச்சுட்டு
தானென புத்துமண் ணுலேயப்பா
தருத்திகொண்டு பருத்திவா யதனுல்மூடி
பூனை பூவரசங் கரிகொண்டிட்டுப்
புகழாகக் குகையெடுத்துக் கரிக்குள்வைத்து
ஆனை கனகாச்சல் காளமேகம்
அப்பனே தருத்திகொண்டு சாடுவாயே. (26)

சாடுவாய் நாலொன்று மூன்றேசாமம்
சாடினபின் னெடுத்துஅதைச் சாற்றக்கேளு
கூடுவாய் குகையெடுத்துப் பார்த்தாயானுற்
குருஅழுத வாக்கதுவால் விஷக்கல்சுத்தி
ஆடுவாய் குகையெடுத்து உடைத்துப்பாரு
அதிலாடுமே விஷமதனை ஆர்தான்சொன்னா
வடுவாய் எந்நாவாற் சொல்லப்போமோ
யெமனிதப்பா சகலலுக்கும் நமனிதானே. (27)

ஆமேதா னுடற்கல்லு சுத்தியாச்சு
அப்பனே சமாதிக்கல் லென்றுபேரு
நாமேதா னிக்கல்லு வர்ணம்மெத்த
நாம்சொன்மேணும் சந்திரன்போல் விலாசங்காணும்
சோமேதான் சுத்தஜல அழுதங்கொண்டு
சொல்தவறுக் கல்வமதில் மணியேபோட்டு
பாமேதான் பனிநீரை விட்டுஊட்டு
பாலகனே மூன்றுநாள் விடாமலாட்டே. (28)

ஆட்டுவாய் சாமத்துக் கோர்தான்விதம்
அப்பனே சுத்தஜல மதனில்விட்டுச்
சாட்டுவாய் மெழுகுபத மாலைத்தைச்
சமத்தாக வேவழித்து யெடுத்துக்கொண்டு
பேட்டுவாய் பில்லைசெய்து ரவியுலர்த்திப்
பேராக வெயில்தனிலே சாமங்காய்ந்தால்
நாட்டுவாய் பாணையோ டதனிலப்டா
நற்சதுர மாகவல்லோ யிரண்டோடாமே. (29)

ஆமேதா னடியோட்டிற் பில்லைவைத்து
அப்பனே மேலோடு அடைவாய்மூடி
மூமேமூன் குனைமெழுகிற் சீலைசெய்து
முன்னவரை நமஸ்காரித்து ரவியிலப்பா
காமேதான் ரவியிற்சித் திரையாம்காளிற்
கண்மணியே சாமமிட்டுக் காய்ந்தபின்பு
நாமேதா னிக்கருணை யெடுத்துக்கொண்டு
நளினமதாய் முன்சொன்ன துருத்தியாமே. (30)

துருத்தியென்ற பூவரசங் காிதான்கொண்டு
தோணைகயின மானபயி லாணிப்போற்றிப்
பருத்தியென்ற பராபரியைத் தியானஞ்செய்து
பாடுபட்ட தொழில்களெல்லாம் பலிதமாக
நெருத்தியென்ற சகலதுக்கிச் சுண்ணைந்தாபே
நீரின்று பாகமதாய் சீராய்ச்சொல்லும்
கருத்தியென்ற கைகடாகம் கலக்குமற்றான
கடைந்தேறக் கிருபைவைத்துக் காருகாரே. (31)

காரகக் கரிக்குள்ளிக் கருவைவைத்துக்
கார்மேகம் புகையெழும்பத் திருத்திவெண்டி
வீரகச் சாடப்பா சாமந்தாறும்
விஷச்சுண்ண மகிமையப்பா வென்னசொல்வேன்
வாரான பில்லையத்தா லேட்டைத்தட்டி
வண்ணமையதாய் நீயெடுத்துப் பார்த்தாபாரு
தோரான பில்லையது தேவமாயை
தேவியென்ற வாலையரு கிருப்பான்பாரே. (32)

பாரடா வென்மகனே இன்னங்கேளு
பாபரிதன் கிருபையிறற் பலித்தசித்தி
கூடடா சுத்தஜல மதின்மேலப்பா
தூவியே தெளித்துமரை நிமிஷம்வைத்தால்
மாரடா மலருமப்பா உடற்கண்சுண்ணம்
மாதாவைப் பூசைசெய்து வைத்துக்கொள்ளு
ஆரடா யிப்படியார் சொல்லப்போறார்
ஆச்சுதப்பா விஷச்சுண்ண மப்பாற்கேளே. (33)

கேளப்பா சுந்தரமிச் சுண்ணங்கொண்டு
கிருடைகா தாக்கள்முறைக் கெல்லாமுந்தான்
சாளப்பா சற்குருவில் விஷம்பட்டாக்கால்
சதாகோடி சித்துவிளை யாடுஞ்சுண்ணம்
ஆளப்பா ஐம்பதுக்குள் விஷக்கல்சுத்தி
அருளிதனை மண்டசுத்தி அடவாய்க்கேளு
வளப்பா யென்பாடல் முந்நூறுக்கு
இந்தமுறை யில்லாலே ளிதமாய்ப்போமே. (34)

வளிதமென் றெண்ணுதே மகனேகேளு
எடுத்துரைப்போம் மகாசுத்தி யிதுபோலுண்டோ
காவிதமென் றெண்ணுதே யாதியண்டம்
கருவான சுத்தியப்பா சொல்லக்கேளு
ஆனிதமென் றெண்ணுதே முன்னோர்சொன்ன
அஸ்தினியி னண்டசுத்தி வசனிப்போமிங்காம்
பானிதமென் றெண்ணுதே பத்துக்குந்தான்
பாடுகிறேன் முதற்சாதிப் பருவம்பாரே. (35)

பாரப்பா அஸ்தினியின் பருவம்பார்த்துப்
பாடினேன் நிகண்டப்பா ஐஞ்ஞூறுக்குள்
காரப்பா கற்பமுறை கண்முய்ச்சொன்னேன்
கைபாகந் தவறுமற் கண்டுபார்த்து
ஆரப்பா அஸ்தினிக்குக் கற்பமூட்டி
அதன்பிறகு வைப்புமுத லண்டங்கொண்டு
மூரப்பா முன்தெளிந்த சுண்ணங்கல்நீர்
முறையாக அதையெடுத்துச் சொல்லக்கேளே. (36)

சொல்லக்கேள் சுந்தரமே ராமன்பாடல்
சொல்தவறு வாக்கியமைமம் பதுவேபோதும்
மல்லக்கேள் மகாநூல்முந் நூறுபீடம்
வாக்கறச்சொல் லில்லையப்பா மகத்தாம்சத்தி
னல்லக்கேள் விஷச்சுண்ண மழுதத்தூட்டி
விராகனிடை தப்பாமல் விபரமாகப்
பல்லக்கேள் நிம்பழுச்சார் வடித்துக்கொண்டு
பனிநீரிற் சரியிடையாய்ப் பாச்சிடாயே. (37)

பாச்சடா யென்மகனே சாமந்தாணும்
பாகமதாய்ச் சென்றபின்பு தெளிந்தேபோகும்
வச்சப்பா பாண்டங்கொண் டிருத்திக்கொண்டு
னென்மகனே முதல்வைப்பு யெண்டதைக்
காச்சடா கணபதியைத் தியானஞ்செய்து
கல்லான நிலச்சுண்ணக் குகைதான்கொண்டு
ஆச்சடா கல்வத்திற் குகையைப்போட்டு
அரைத்ததூள் வடியிட்டு அழுதத்தூட்டே; (38)

ஊட்டியே சாமஞ்சென் றாரித்தாலல்
ஓகோகோ அதையெடுத்துப் பாருமைந்தா
பாட்டியே பனிநீர்போற் றெளிந்தேபோகும்
பாலகனே அதையெடுத்துப் பாண்டங்கொண்டு
ஆட்டியே வடித்திட்டா லழுதச்சுத்தி
ஆச்சுதப்பா அவ்வழுதங் கொண்டப்பாலே
நாட்டியே யிப்படியார் சொல்லப்போறார்
நாம்சொன்னோம் சுந்தரமே நவிலக்கேளே. (39)

கேளாத மவுனமப்பா சொல்லக்கேளு
கிருபையென்ற வுஸ்நினிபி லண்டமாதி
மூளாத முதல்வைப்பு பதக்குந்தான்
முன்னோர்கள் சிருஷ்டிலுல் முறையாச்சொல்லோம்
ஆளாத அண்டங்கா யாதியண்டம்
ஆருக்கும் இம்முறையை வெளிவிடாதே
பாளாத பாளப்பா வெளிவிட்டாக்காற்
டாழ்நரகிற் முன்விழுந்து பாழ்போவாரே. (40)

வாரான வாதிகளே அலையவேண்டாம்
லைப்புமுதற் காயகண்டம் வலுவாய்க்கொண்டு
ஆரான அஞ்சுமாக் கண்டப்பா
ஆகவிது பதினொன்று மடவாய்க்கொண்டு
காரான காய்கொண்டு கழிதீரப்பா
கருவான அங்நீரிற் கழுவிப்போட்டுச்
சூரான சுத்தஜல மமுதசுத்தி
சோதித்த பனிநீரி லண்டம்போடே. (41)

போடப்பா அண்டமதை அமுதத்தூட்டிப்
புகழாகச் சாணைக்கை யதன்மேல்மூடி
நாடப்பா கனாவியிற் பாண்டங்கொண்டு
நளினமத்தா யோர்நாழி விதங்சாய்ந்தால்
சாடப்பா சானையைப்போற் பொங்கும்பாரு
சார்வான அண்டத்தின் மேலோசிக்கும்
ஆடப்பா அண்டத்தின் கோட்டைவாசல்
அமுதசுத்த ஜலமதுவாற் நிறம்பதாச்சே. (42)

ஆச்சடா யென்மகனே அண்டக்காய்தான்
அதினுடைய கசிவெல்லாம் அமுதம்வாங்கும்
வச்சடா எண்ணெய்யது வேர்வைபோல
இங்குமப்பா பாண்டத்தி லிரவாய்ச்சொன்னேன்
காச்சடா காயாதி அண்டக்கல்தான்
கருவான அகண்டமதை யெடுத்துப்பாரு
பேச்சடா சொல்லவில்லை பிண்ணைக்கீசர்
பேசினை யைஞ்ஞூறின் னூற்கொவ்வாதே. (43)

ஓவ்வாத நாலிரண்டு நாறபீடம்
ஓகோகோ மூப்பத்தி மூன்றுக்குள்ளே
வவ்வாத வழலைமூப்பூ ஒன்றுக்குள்ளே
வசனித்தோம் சதாகோடி முறைகளெல்லாம்
அவ்வாத ஐம்பதப்பா சொச்சமிந்நூல்
அண்டக்கற் சுத்திகனை அறிவாய்ச்சொன்னேனும்
பவ்வாத சாதியப்பா பத்துக்குந்தான்
பாகமாய்ச் சுத்திசெய்தாற் பலிதமாமே. (44)

ஆமேதா னண்டசுத்தி கூட்சாகூட்சம்
அருளிதனை மெண்மகனே அப்பாற்சேரு
மாமேதான் மாணைக்கர் பதினெண்பேரும்
மயங்கினரிம்முறைதா னகப்படாமல்
வாமேதான் வாலியென்ற தேவிவாடி
வசனித்தாள் கனவுதனில் வளமாய்க்கண்டேன்
வமேதா னென்னுடைய தாயார்சொன்னாள்
இந்தமுறை யான்கண்டு மியம்பினேனே. (45)

இயம்பினதோ ரண்டசுத்தி யாலேமைந்தா
இகம்பரமும் பரசுத்தி யிதினாலாச்சு
வயம்பினதோர் வாதசுத்தி செய்யாவிட்டால்
வட்டுடனே சிட்டமதாய் வலுவாய்ப்போகும்
பயம்பினதோர் வைப்புப்பத் தண்டத்துக்கும்
பாலகனே யிச்சுத்தி யொன்றதாலே
அயம்பினதோர் ஆயிரத்தெட் டண்டத்தாலும்
ஆச்சரிய மிச்சுத்தி அடவதாச்சே. (46)

அடவான அண்டமதைச் சுத்திசெய்து
ஆடப்பா அறுபத்து நாலுக்குந்தான்
எடவான யெட்டெட்டு மிதனுற்சித்தி
எம்பத்தொன் றைம்பத்தொன் றிரவாச்சித்தி
மடவான மாயையெல்லா மிதனுற்சித்தி
மாணைக்கள் தேறுகின்ற வழலைசித்தி
வெடவான விஷவுடற்கல் காயாதிக்கல்
வேதாந்த சுத்திமுறை யிரண்டாலாச்சே. (47)

ஆச்சுதே சுத்திமுறை ஆத்தாள்சொன்ன
அழுதவாக் கதிலுலே யெல்லாஞ்சுத்தி
வாச்சுதிங் கைம்பதுக்குட் கோடாகோடி
வருஷித்த நூல்களெல்லா மிதுக்கொவ்வாது
ஏச்சுதே இந்நூலம் பதைபுங்கண்டு
எடுத்தமுறை தப்பாதென் மகனேசெய்தால்
தாச்சுதே தாச்சிவரா தோர்காலுந்தான்
சாயுச்ய பதம்பெற்றுத் தான்வாழ்வீரே. (48)

வாழுவென்றால் காலம்நீ டூழிகாலம்
வளமான யோகதிரி சனமாய்வாழ்வீர்
ழுழுவென்றால் முந்நூற்றி யெண்பதுக்குள்
முடிந்துதப்பா வழுலுமுறை முன்னோர்சொன்ன
தாழுவென்றால் தாள்பூட்டு யிருந்ததாலே
தாக்கான தொழில்களெல்லாம் போச்சுபோச்சு
ஆழுவென்றால் ஆயியுட அனுக்ரகத்தால்
அண்டத்தாப் பாள்பூட்டி யுயிர்விட்டேனே. (49)

உயிரான உயிரப்பா விஷக்கற்சுத்தி
ஓகோகோ காயசுத்தி அமுதசுத்தி
நயிரான சுத்தியப்பா சொன்னேப்சொன்னேம்
நாடதிலே யிந்நூலம் பலதையும்மைந்தா
வெயிரான வெளிவிடா தடக்கப்பண்ணு
வெகுபதனம் வெகுபதனம் விஷக்கல்வாக்கு
அயிரான ஆயியுட கிரியையாலே
அளித்தமொழி யையம்பதுந்தா னடக்கம்பண்ணே. (50)

பண்ணப்பா சுந்தரமே வழுலப்போக்கு
பாடலுள் ளடக்கமதாய்ப் பரிவாய்ச்சொன்னேன்
எண்ணப்பா யெந்நூல் கைவிட்டாலும்
இந்நூல்தா னெம்பதையுங் கைவிடாதே
அண்ணைப்பா ஆயியுட விஷவாக்குத்தான்
அண்டயிடி விழுந்துயெழு நாகிற்போவாய்
நண்ணைப்பா நாயகியாள் விவேகங்கண்டு
நாம்சொன்னேம் ராமனப்பா நன்றுப்முத்தே. (51)

முத்தான மூவுலகு மூன்றதாலே
முந்நூற்றி யெண்பதுந்தான் முகிதல்கண்டு
பத்தான பதினெண்போர் பாடலுக்குப்
பலமதிக மென்னுடைமூந் நூறுபீடம்
மத்தான மஸ்தகிரி ஆயிரந்தான்
மகத்தான முந்நூறை மத்தாக்கொண்டு
அத்தான தண்டகத்தைத் தாளாய்ப்பூட்டி
அமுதமதாய்க் கடையுமைம் பதுவும்முற்றே. (52)

இராமதேவர் சுத்திமுறை நூல்,

முற்றிற்று.

மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம் மு. கிருஷ்ணபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருதேவதுதிகள்.

அபிராமதேவர் திருவாய் மலர்ந்தருளிய

மூப்பு சூஸ்திரம் 100.

ஆதிகுரு வானதொரு பிரமக்கன்னை
அலுதினமும் நெஞ்சில்வைத்து அருளைநோக்கிச்
சோதிவெளிக் கப்பாலே துலங்குஞ்சத்தி
தூணையெனவே கருமானச் சுருக்கஞ்சொல்ல
நீதியுள்ள வாலைமேரு மணிதான்வசுது
நிலைத்தபொருட் கருவணைப்பை நிலத்துள்ளோர்க்குச்
சேதனையாய்ச் சொல்லுவையோ ராமாவென்று
சொல்லிமனக் கசடகற்றி புனைத்தாள்பாரே. (1)

பாரப்பா அவளருடைய கடாக்ஷத்தாலே
பாடினேன் ரெண்டுபத்தும் பத்துங்கூட்டி
நேரப்பா மூப்பதென்ற பொருளைக்காணார்
நேரறிந்த சிவயோகிக் கிந்நூல்வேணும்
காரப்பா சதாசிவத்தைக் கருத்தில்வைத்துக்
கருவான உப்பெடுத்துக் கலசத்திட்டு
வாரப்பா சுத்தஜலம் படிதானெனன்று
வளமான காரமது பலமும்ரெண்டே. (2)

பலமான காற்பலத்தான் தூரம்போடி
பக்குவமாய்க் கரைத்ததனை உப்பிலாத்தி
நிலமான அடுப்பேத்தித் தீயைமூட்டி
நினைவாகத் தானெரித்துப் பதத்தில்வாங்கக்
குலமான உப்பதுதான் சுத்தியாச்சு
கொடிதான சுண்ணமடா கூறப்போமோ
தலமான தலமறிந்து தியானஞ்செய்தால்
சதாகோடி வேலைதுமுகங் காணலாமே. (3)

ஆமப்பா சுத்திசெய்த உப்புநாலு
அதிற்பாதி வெடியுப்பு அதிலுமப்பாதி
நாமப்பா சொல்லுகிறேரும் பூரந்தானும்
நலமாக அதிற்பாதி சினங்கூட்டிக்
காமப்பால் விட்டாட்டிக் கல்வத்திட்டு
கனலெழும்ப ஒருசாமம் நன்றுயாட்டிச்
சோமப்பா லொருதுள்ளி அதனில்விட்டுச்
சுருக்காக உருட்டியதை வட்டுப்பண்ணே. (4)

பண்ணியதோர் வட்டக்கா ரோட்டில்வைத்துப்
பக்குவாய் மேலோடு பதியழுடி
ஒண்ணைமதீபா காமல்மண் சீலைசெய்து
ஒருமுழுத்திற் குழிவெட்டி யெருவைப்போட்டுத்
தண்ணையா யெருமேலே மூப்பூவைத்துத்
தயவாக அதின்மேலே யெருவைக்கொட்டிக்
கண்மையேஸ் பரிதனக்குப் பூசைசெய்து
கருணையுடன் தனல்மூட்டிக் காருகாரே. (5)

காரப்பா சதாசிவத்தைத் தியானஞ்செய்து
கருத்துறவே தனலாறி யெடுத்துப்பாரு
ஓரப்பா அறிவார்கள் மூப்பூச்சுண்ணம்
அப்பனே கடுங்கார மானசுண்ணம்
வீரப்பா செய்தோரை அடக்குஞ்சுண்ணம்
வேதாந்தப் பெரியோரைக் காக்குஞ்சுண்ணம்
சாரப்பா மேருவைத்தான் தகர்க்குஞ்சுண்ணம்
சதாகாலம் மூப்பூவைத் தொழுதிடாயே. (6)

தொழுதிடவே யின்னமொரு கருவைக்கேளு
சுகமான வித்துயுட நாதங்கூட்டிப்
பழுதில்லாக் குருவில்பணை விடைதான்போட்டுப்
பார்த்திருக்கத் தெளிந்ததுவும் பசுமையாகும்
செழுமையுள்ள செயநீரைப் பதனம்பண்ணிச்
சீக்கில்லாச் சாதிலிங்கக் கட்டிவாங்கிக்
குழம்பையுடன் சுருக்கிடவே கட்டிப்போகும்
கூசாமல் வேதைதழுகவ் கூர்ந்துபாரே. (7)

கூர்ந்துபார் ரெகுராம தேவர் மூலக்
கொண்டாடி பின்னமொரு சுருவைக்கே தெரு
சார்ந்துபார் மூற் சுருவில் விராகமொண் றும
சரியான விரமுடன் பூரம்பெண்டும்
கோர்ந்துபார் பணவிடைதான் புலுகுஞ்சேர்த்து
நீணவாகக் கருத்தோட்டி மத்திந்தப்பா
பாந்தமாய்ந் தருசுக்குக் கவசஞ்செய்து
பக்குவமாய் நிழலுலர்த்திப் பதனம்பண்ணே. (8)

பண்ணியபோர் கவசமதைப் புடந்திற்போடப்
பக்குவமாய் நீறியது சுண்ணமாகும்
எண்ணவிவாண்டு அதிசயங்க ளிதிலெற்காலும்
என்மெக்கள் தருசிலுட மீவகம்மீவகம்
புண்ணியமே செய்தவர்க்கு யிந்நூல்நிட்டம்
பொல்லாத சண்டாளர்க் கீயம்வண்டாம்
வண்ணியுட பீசமெனச் சொல்லலாகும்
வரிசையுடன் தருசிலுட சுண்ணந்தானே. (9)

தருசுடசுண் ணத்தைதபண விடையெடுத்துத்
துடியான சூதமொரு கழஞ்சுபோடப்
பருசுடனே படபடத்து அடங்கிச்சாகும்
பதமாகத் தானெடுத்து மனிதான்செய்து
வரிசையுள்ள செயநீரிற் போட்டுவைத்தால்
வாங்குமடா சாரணைதா னதிகங்கோடி
தெரிசனையாய்ச் சொன்னபொரு ளடக்கம்பண்ணைச்
செகமெல்லாஞ் சென்றுவாத் திறஞ்சொன்னேனே. (10)

திறமான தருசிலுட சுண்ணத்தன்னிற்
சிவசிவா பணவிடைதா னெடுத்துக்கொண்டு
உறமாமூற் குருவிலவ் விடையெடுத்து
உடன்சேரு புலுதமவ் விடைதான்கூட்டிக்
கரமான வகைதனிலே மத்திந்தேதான்
குருவான வீரத்திற் றடவிருல்ல
திறமான தீபமதில் வாட்டிறுக்காற்
செயவீர ராஜனுமே கட்டும்பாரே. (11)

பாரப்பா வெள்ளீயங் கூடையுருக்கிப்
பாச்சடா வீரனைத்தான் பத்துக்கொன்று
சேரப்பா யேமராசம் மாண்டுபோகும்
சிவசிவா கயிலாச மேறைக்காணத்
தூரப்பா துரும்பதுதான் தூணுமென்று
சொல்லடங்காப் பொருளெனவே சுருக்கியேதான்
சாரப்பா யிதிலுலே பார்த்துக்கொண்டு
சதாகோடி சித்துவிளை யாடுவாயே. (12)

ஆடவே யின்னமொரு கருவைக்கேளு
அரனெனக்கு உபதேச மன்பாய்ச்சொன்னார்
தேடியதோர் காரமுடன் சாரம்ரெண்டும்
தினவே மத்தித்துச் செப்பக்கேளு
நாடவே குருவில்பண விடைதான்போட்டு
நன்முக மத்திக்கச் செயநீராகும்
தேடவே அச்சலத்தில் நாகஞ்சாய்க்கச்
சீரங்கிக் கட்டுமடா திறஞ்சொன்னேனே. (13)

சொன்னதொரு நாகமதிற் சாரதீரைச்
சுருக்கிட்டுப் பரிநாலுக் கொன்றேறியீந்து
வுன்னமுள்ள செம்பதனி லீய்ந்தாயாலல்
மக்களே பத்தனைதான் தப்பாதுண்மை
கண்ணிறைந்த கயிலாச மேருவைத்தான்
காட்டடா பதினுறுக் கொன்றுதீதான்
மண்ணிறைந்த பிருதிவியின் கடாட்சத்தாலே
மக்களே பதினுறு மாத்துக்காணே. (14)

காணப்பா யின்னமொரு கருவைக்கேளு
காசினியில் வில்லாதே கருவைப்பாரு
வீணப்பா யில்லையடா தலைப்பேர்தன்னை
விபரமுடன் சமூலமதை வாங்கிவந்து
வாணப்பா கல்லுரலி விடித்துக்கொண்டு
வாயகல மானதொரு பாண்டத்திட்டு
சீணப்பா கெந்தகமுஞ் சாரம்ரெண்டும்
சிறப்பாக மீரஞ்சு பலமும்வாங்கே. (15)

வாங்கியதைப் பொடித்துநன்றாய்ப் பாண்டத்திட்டு
வகையுடனே ரெண்டுமொன்றாய் ரேகித்தேதான்
பாங்குபெற ஆனைக்கண் சட்டிவாங்கிப்
பருவமுடன் தார்தனிலே நமர்தான்போட்டுத்
தீங்கில்லாப் பாண்டமதின் மேலேமூடி
தியானித்து மண்சீலை சிறக்கச்செய்து
சாங்கமாய்க் குழிவெட்டிச் சமாதுவைப்பாய்
சட்டிநமர் தான்தெரிய மூடுமூடே. (16)

மூடியே முன்னவனைப் பணிந்துபோற்றி
மூக்காலுஞ் சுத்திவந்து முன்னேநின்று
நாடியே தூபமொடு தீபங்காட்டி
நாரணனேயே கௌமாரி நாதாந்தத்தி
வாடிமனந் தளராமல் யென்னைக்காக்க
வாசமுள்ள பூமலராய் வாவாவென்று
தேடியே செபித்திடுவாய் பதினாறுக்குள்
தேவியே காட்சரியாள் வருவாள்பாரே. (17)

வந்தவள்தான் தமர்வாசற் குள்ளேசென்று
வரிசையுடன் போய்வருவா ளப்போதானும்
கந்தமலர்க் குழலுமையாள் கடாட்சத்தாலே
கருணையுடன் மலராறிற் கருத்தான்சென்று
சிந்தையுள்ள பதினாறு நாளைக்குள்ளே
செனித்ததொரு பூமலர்கள் தமர்மேல்புக்கும்
வந்தவிதந் தானறிந்து பூவைவாங்கி
வரிசையுள்ள காசியுட மேறிற்போடே. (18)

போட்டவுடன் மண்சீலை யேழுஞ்செய்து
புதுமையுள்ள நெல்லரிக்கும் பானைதன்னில்
தாட்டிகமாய் நெல்குழைந்து அதின்மேல்மேரு
தயவாக வைத்ததின்மேற் சட்டிமூடி
நாட்டமுட னெடுப்பேற்றி யவிக்கும்போது
நலமாக நெல்வெந்து பதத்திற்பாரு
வாட்டமில்லாச் சற்குருவைத் தியானித்தேதான்
வாசமுள்ள மேருவைத்தா னெடுத்துக்கொள்ளே. (19)

எடுத்துமெள்ளப் பார்க்கவேதான் மேருக்குள்ளே
இருக்குமடா மதியமுக மென்னசொல்வேன்
எடுத்ததொரு அழுதமதில் வீரம்பூரம்
என்மகனே யிருகழஞ்சி யொடித்துப்போடத்
தொடுத்ததொரு அழுதமது செயதீராகும்
தூருவழுள்ள மேருவைநீ பதனம்பண்ணிப்
படைத்ததொரு அழுதசஞ் சீவியென்று
பராபரனைத் தொழுதுபண தறிவில்நில்லே. (20

அறிவான கருவிலொன்று சொல்லக்கேளு
அப்பனே அரிதாரக் கட்டுதன்னைக்
குறியான அழுதமதிற் பிரட்டிக்கொண்டு
கொடிதான வெயிலில்வைக்கக் கட்டிதீராம்
விறிவான சவ்வீரக் கட்டுதன்னை
விரவியே வினக்கொளியில் வாட்டிவைக்கப்
பொறியாக நீறுமடா பொய்யோயில்லை
புலையரிடம் யிந்நூலைப் புகலவேண்டாம். (21)

புகலவே டாசாணக் கட்டுவாங்கிப்
புளுவைபுள்ள அழுதமதிற் போட்டுக்கொண்டு
அகலமுள்ள செப்பகலிற் புடத்தைப்போடு
அப்பனே பொருமியது வெண்ணீருகும்
செகமுழுது மாட்டிவைக்குங் கெந்திதன்னைச்
செப்பகலி லிட்டுமே செயதீர்விட்டுப்
பகலவன்றன் முகத்தில்வைத்துப் பார்த்திருந்தால்
பார்க்குமுன்னே பொங்கியது மெழுகுமாச்சே. (22)

ஆச்சப்பா வெள்ளிதனைக் கிண்ணம்பண்ணி
அதுக்குள்ளே சூதமைத அரைமட்டிட்டுப்
பேச்சப்பா ஒன்றுமில்லை செயதீர்விட்டுப்
பெரியதொரு தணலில்வைக்கப் பிரண்டுபோகும்
காச்சப்பா யிருப்புதனைச் செயதீர்குத்திக்
கருகலேவ காச்சிவிட்டாற் செம்புபோலாம்
பாச்சப்பா பரித்தகட்டிற் செயதீர்குத்திப்
பக்குவமாய்ப் புடம்போடக் குருவுமாச்சே. (23)

குருவான குருவிவ்பண விடையெடுத்துக்
கொடிதான செயநீரவ் விடைதான்கூட்டிப்
பருவமுடன் றெண்டினமு மொன்முப்சேர்த்துப்
பத்தியுடன் தானுருட்டிப் பதனமாகத்
திருவான பதிநோக்கித் நின்முயாலுல்
சிவசிவா கயிலாச தேகமாகி
அருள்பெருகிப் புவிமீதிற் குருவாய்நின்று
ஆனைத்துயிர்க்கும் வல்லவன்நீ யாகுவாயே. (24)

வல்லபமா யின்னமொரு கருவைக்கேளு
வாசகரு வாய்ப்பட்டைப் பலமும்பத்து
தெள்ளிமையா யிடித்தனிற் காரசாரம்
சேரடா பூமூட றெண்முப்சேர்த்து
நல்லதொரு பாண்டத்தி லிட்டுமூடி
நலமான குழித்துயிலம் வாங்கியேதான்
அல்லல்செயும் நோய்க்குபண விடைசொருத்தால்
ஆனகுளிர் சுரநேகவ மகன்முபோமே. (25)

கண்டுபா ரின்னமொரு கருவைக்கேளு
கருத்துடனே கருவறிந்து கருவைவப்பத்தி
நின்முபார் சத்தியடி மூலம்வாங்கி
நினைவாகக் குளித்துயில மிரக்கியேதான்
அண்டமதிற் செனித்தமொரு தயிலத்தன்னில்
அப்பனே கோசமுடன் பீசங்கூட்டிச்
சென்முபார் உனதுகரு மூன்முங்கூட்டிச்
சிவசிவா தயிலத்தில் மத்திப்பாயே. (26)

மத்தித்துக் குருபாதத் தியானஞ்செய்து
மனதுடனே ரேசகபூ ரகமும்பண்ணிப்
புத்தியுடன் கும்பித்துத நிலதம்பாடப்
பூமிதனி லுள்ளபொருள் புகழாய்க்காணும்
பத்தியுள்ள பஞ்சீசாதி தன்னீக்கண்டால்
பாமகுரு நீயெனவே வணங்கிப்போற்றி
வத்திக்குங் குருபானச் சுருக்கந்தன்னை
வகையறிந்து கருவறிந்து வணங்கிப்பாரே. (27)

பாரப்பா யின்னமொரு கருவைக்கேளு
பத்தியுடன் கேட்டதிறற் பலிக்குஞ்சித்தி
காரப்பா கன்னியுட நாதம்வாங்கிக்
கருவான குருவில்பண விடையெடுத்துச்
சேரப்பா நாதமதிற் கூட்டும்போது
திரையகற்றி நீரதுவுஞ் செயநீராகும்
வாரப்பா யின்னீரைச் சாணைதன்னில்
வாசமுள்ள மலாக்காயின் கட்டைதனையுரையே. (28)

உரைத்ததொரு சந்தனத்தைதத் திலதம்போட்டு
உடம்பெல்லாந் தான்பூசி யுமையவளைப்போற்றித்
தரைக்குள்மன்ன ரணகளத்திற் செல்லும்போது
தருகாத குண்டுமுத லம்பையெல்லாம்
மரைக்குமடா சந்தனத்தின் வாசஞ்சென்று
மணங்குளிரக் கண்டவர்கள் வசியமாவார்
உரைக்குமொழி தவறாதுள் ளடக்கிநின்றால்
உயிர்கள்முதற் பயிர்வரைக்கும் வசியமாமே. (29)

வரிசையுட னிந்நூலு மைம்பத்தொன்றும்
வகையுடனே துகைபார்க்க யெண்பத்தொன்றும்
உரிசையுள்ள அமுதமென வுன்னிப்பார்த்தால்
உண்மையுள்ள அஷ்டகர்மஞ் சித்தியாகும்
பரிசுடைய பூரணத்தை வணங்கிப்போற்றிப்
பலகாலுங் கேசரத்தில் மனத்தைவைத்து
அருமையுட னமுதநிலை கண்ணைப்போற்றி
அருள்பெருகுங் குருவினடி அன்பாய்முத்தே. (30)

மூத்தமினைதப் பார்க்கையிலே மவுனமாக
மூடருடன் பேசாதே வாதாடாதே
சுத்தமுள்ள பெரியோர்க்குத் தொண்டுபண்ணு
துவாதசாந் தத்தில்மனந் துலங்கிநில்லு
சித்தமே சிவன்செயல்தா னப்பாசொன்னேன்
திரிகோண முள்ளசத்தி யறிவாம்பாரு
உத்தமபொரு ளீதல்லா தொன்றுமில்லை
ஊடாடும் வாசியைநீ வணங்கமுற்றே. (31)

இராமதேவர் முப்புசூஸ்திரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அறுபத்திரண்டாவது:

இராமதேவர் திருவாய் மலர்ந்தருளிய

பரிபாஷை விளக்கம் உஎ.

அண்டபிண்டம் நிறைக்குண் டலியின்பாதம்
அருள்பெருகுங் கணபதியி னருளேகாப்பு
மண்டலங்கள் மூன்றுரவி மதியாய்நின்ற
மதியிரவி யொளியினுட கமலம்போற்றிக்
குண்டலிதான் மூண்டபுலத் தியர்தன்பாதம்
குருமொழிதா னுயிரத்தின் பீடம்போற்றிக்
கண்டபொருள் பாஷைபரி பாஷைபீடம்
கருக்குருவாங் கணபதியின் பாதங்காப்பே. (1)

கமலமென்ற அழுதசெய ராமன்பாடல்
கணக்கில்லா நூல்களெல்லாங் கருத்தாய்க்கண்டு
அமலமென்ற ஆறுயி ரத்துச்சொச்சம்
அரகரா சுருக்கமதாய்ச் சுருக்கியானும்
வமலமென்ற பதினெண்டோர் மறைத்ததெல்லாம்
மாட்டுகிறேனும் பாஷைபதி னெட்டதாக
கமலமென்ற கவபீடம் பரப்பிர்மந்தான்
காதாந்தச் சுருக்கமதாய் கவிலுவேமே. (2)

கவிலுவேமம் புலத்தியர்தன் கடாட்சத்தாலே
காழுரைத்த பாஷையெல்லாம் கனிணமாக
அவிலுவேமம் ஆதியந்தம் போகசித்தி
அருளுகிறேனும் குருவழுத அனுக்ரகத்தால்
கவிலுவோங் கருக்குருவாய் மன்தோர்க்தோர்க்கு
கதிரொளியாஞ் சுழிமுனையிற் கண்டகாட்சி
மவிலுவேமம் மாறுதி அதுவேயாதி
வசனித்தா ரீசன்போர் வகுத்தோமம்நாமே. (3)

வகுத்தபொரு ளெதென்றுற் பதினெண்போர்கள்
வசனித்த நூல்தோறு மறைந்தார்சித்தர்
ருகுத்தபொருள் நாம்சொன்னேம் ராமர்வாக்கு
நனினமுதாய்ப் பாலைபதி னெட்டதாக
அகுத்தபொருள் அனைவோரும் மகிழுவேதான்
அருளுஞ்சிறும் சிவயோக மதிதவித்தை
பகுத்தபொருள் வேதாந்தப் பரப்பிர்ம்மந்தான்
பாடினே மதிதசித்து பண்போர்கேளே. (4)

கேளப்பா தவமுனிபே முன்னோர்சொன்ன
கெணிதமென்ற யோகசித்தி அதுவேமுத்தி
வாளப்பா வஸ்துவுட சித்திகண்டு
வாதமென்ற கருக்குருவை வளமாய்க்காணு
நாளப்பா யோகசித்தி யாகுவேனும்
நாதாந்த வாதசித்தி பெறுவேவேனும்
மூளப்பா மோக்ஷமுனக் கதுவேவேனும்
மூதண்ட ஞானசித்தி முத்திதானே. (5)

மேலே மணிபூரகம்
விட்டுணுக் குற்றவிடம்
காலா தீதத்துக்கும்
கர்த்த ரவர்தாமே. (18)

பாரு மனுகதத்தில்
பார்வதி காதரங்கே
சேருங் தலமிதென்று
தெரிசித்துக் கொள்வாயே. (19)

கண்டடம் விசுத்தியப்லோ
கஞ்சம் பதினாறு
அண்டபிண் டங்களெல்லாம்
ஆஞ்ஞையுமே கேசனுக்கே. (20)

இரண்டு கண்ணாடியே கினியே
இருக்கும் மாயைசாயை
திரண்ட சிக்கு கயிறால் கினியே
தேறித் தெளிந்துகொள்ளே. (21)

ஆயிரத் தெட்டுதழில் கினியே
அமர்ந்த சதாசிவத்தை
நேயமதாக வேதான் கினியே
நிதப்பணிந் தேற்றிக்கொள்ளே. (22)

ஈசேதார் குணமாச்சு கினியே
இரண்டாங் குணந்தானையும்
ழேசேதார் மொழியனவே கினியே
மூற்றிலு மெண்ணுணைவே. (23)

சாதனம் நாலுவகை கினியே
சிற்று நிதானமதாய்
போத மிருதியினால் கினியே
புத்தியென் றேவுணர்வாய். (24)

சமாதி யாறுகுணம் கினியே
சாமானிய மலவே
உமாம கேசனுக்கே கினியே
உற்றதென் றேதெளிவாய் (25)

உற்ற சமந்தானும் கினியே
ஒன்றினைவைக் கும்பின்னும்
மற்றும் தமகுணத்தை கினியே
மாற்று மரிதலவே. (26)

விடால் சகித்தல்தானை கினியே
மேன்மையய தாகக்கொண்டி
தொடர்ச் மதானம் கினியே
தொந்தும் நமக்காமே (27)

நிச்சைக யெப்பொருட்டும் கினியே
நியம மாகுமெய்த்து

வேதாந்தச் சித்தர்பாடல் கூ உ.

பாத்தைதத் தானைடைய கினியே
பற்றொன்று மில்லைகண்டாய் (28)

பத்தினைய விட்டுவிட்டுத் கினியே
பாவனை யைக்கடந்து
அத்துவி தானந்தத்தைதக்
அனுபவித் துய்வாயே. கினியே (29)

பெண்ணைசை பொன்னைசை கினியே
பூமியின் மீதாசை
மண்ணைசை யெண்ணைதே
வாசியுன் னலறியே. கினியே (30)

தேகந் தேதிரென்று கினியே
தேகம்பொய் தேதிமெய்யே
மோகாந்தம் விட்டாக்கற் கினியே (31)
றுத்தி யடைவாயே

பாவ அபாவமற்று கினியே
பாத்தினுடன் பொருந்திச்
சுவானுப வந்தனிலே கினியே (32)
சொக்கிநீ வாழ்வாயே.

வேதாந்தச் சித்தர்பாடல் கூஉ,

முற்றிற்று

மதுரை மேலமாசி வீதியிலிருக்கும் ஆர். அரிபகாயகம் பிள்ளை அவர்களிட மிருந்து வாங்கிய வட்டப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

குருவேதுணை.

எழுபத்தி மூன்றுவது :

பீரமமுனி திருவாய்மலர்ந்தருளிய

ஞானம்பிரு.

பூரணமாய் நின்றதொரு பொருளேநோக்கிப்
பொய்யன்றி மெய்யுணர்ந்த பெரியோர்பாதம்
காரணமா யெங்காளுங் கருத்திலாய்ந்து
கதிர்முனையி லாடிநிற்குங் கடவுளாணை
காரணனும் நான்முகனு மறியாரென்றும்
கால்லேத மோதுகின்ற ஞாயந்தன்னைச்
சீரணமாய்ப் போகாம லெட்டுகாலும்
சேர்ந்துவொரு சுழியேறத் தெரியுந்தானே. (1)

தெரியவெண்ணு லெளிதல்ல வாய்ப்பேச்சல்லச்
செகஜாலக் கூத்துதல்லாஞ் செல்லலாகா
பிரியவென்ரு லீட்புலீன யறுத்துச்சாடிப்
பேதமையெல் லாமகற்றிப் பெரியோர்பாதம்
அறியவென்ரு லெங்ஙானைப் படியோகாணென்
ரூறிரண்டு சமயமெல்லா மகலத்தள்ளு
ரூறியவென்ரூற் சொல்லுகிறேன் குறிப்புள்ளோர்க்குக்
குன்றுமகா மேருநடு நிலைத்திடுரே. (2)

நிலைத்துமனங் கடைத்தேறு மச்சமில்லை
நேரறிந்த பெரியோர்தான் நிலைத்துநின்ரூர்
உலைத்துவிட்ட பிஞ்ஞிய விடையத்துள்ளே
உள்ளுருவடைந்து போகாதோர் வழியேசெல்லும்
மலைத்திடலா காமனது செவ்வையாரூல்
மதிவாசற் ரூன்றிறக்கும் வருமோபோதம்
தலைத்துருவி நடுவீதி செல்லச்செல்லத்
தூண்டாத சுடற்காலுந் தூட்சமாமே. (3)

சூட்சமதி லாண்டவரு ளெளியோன்சொன்ன
சொற்பேத மில்லாத தூலாயிலேக
மாச்சல்மனஞ் செய்கின்ற மாந்தோரோடே
மருவாதே குஷியாதே வாதாடாதே
பூச்சலென்ன வொன்றுமில்லை லோகத்துள்ளே
பூண்டுநீ திரியாதே புலம்பிடாதே
நீச்சமதில் வாசியெனு மோட்சம்பூண்டு
நோரான யெல்லைவழி சேர்ந்துயேறே. (4)

எறவென்றால் வெகுகடின மேறிட்டாது
யிழுக்கான மலக்காடு வழுக்கல்மெத்தக்
கூறவென்ற லெள்ளளவுந் தப்போயில்லைக்
குறியறிந்து கொண்டவர்க்கு லெகுவாய்க்காணும்
தேறவென்றுற் றறியறிய வழியுந்தோணும்
சிவரூப மருளாகக் கண்ணிற்காணும்
நேரவென்று சிரசுதனிலே விளக்குங்காணும்
சேர்ந்தாக்கா லருட்பொருளாய் நிலைக்குந்தானே. (5)

தானென்ற சூழிமுனையை யருளாற்கண்டோர்
சாதிகுலம் வரம்பற்றுத் தானேதானாய்
ஊனென்ற சுவைபோக மொளித்துவிட்டு
யுயர்பரவுங் காணம்போ யொடுங்கின்று
தானென்ற சொல்லற்று அறிவுமுற்று
நான்மறைக்கு மெட்டாத பொருளோடொற்று
வானென்ற மதிப்பாலுத் திறந்துகொண்டு
வாழ்ந்திருப்பா ரெந்நாளு மாயார்தானே. (6)

மாயாம யிருக்குவென்றால் மதிப்பால்வேணும்
மற்றமற்ற முறைலெல்லா மருவுண்டாகும்
ஆயாய்ந் வேதாந்த நூல்கடன்னை
அறிந்துணர்ந்து பிம்மசூழி யேறுயேறு
காயான கற்பங்க ளனந்தங்கோடி
காட்டிலுர் நூல்தோறுங் கறைபோயில்லை
வாயாலே வாய்ச்சுடர்த்துப் பேசுமாந்தர்
வருவதுவும் போவதுவும் வகைகாணுதே. (7)

காணுமவிருந்தினற் பலந்தானென்ன
கர்மவினைக் கீடாகக் கணக்குதாச்சு
தோணுமற் போனதென்ன மாந்தனையா
துடக்கான விசப்பாம்பைச் சுடாதகாலே
தூணுமவிருந்துகொண்டு மாயந்தள்ளிப்
புருவநடுத் தமர்வழியே பூண்டுதேறு
காணுமலோடுந்தீ வினைகளெல்லாம்
கல்வினையுந் தீவினையும் காசமாச்சே. (8)

காசமுற்ற மால்மாயை வீருபோச்சு
கலமுற்ற பானமுனைக் காச்சுவாச்சு
காசமுற்றக் கண்ணுலே மனமாய்ப்பார்த்துக்
கதிர்முனையி லருட்காணுங் காணுங்காணும்
பாசமுற்றக் கருவிதொண்ணூற் றுறுபேரும்
பாழ்ஞடரில் மாண்டுபோம் பாருபாரு
நேசம்நின் றறிவாலே நின்றுகொண்டு
நெறிநின்றோர் சொல்முறையை கேர்ந்துகூடே. (9)

கூடென்று முன்னுரைத்தார் பெரியோனையா
கோடியிலே யொருவருண்டு கூடினோர்கள்
பாடென்று விடாதேதீ பற்றிப்பாரு
பழவினைகள் கோடியுந்தான் பறந்துபோகும்
காடென்று யெங்கேநீ காட்டங்கண்டு
நடுவான தமர்வாசற் கப்பாற்செல்லும்
தேடென்றெங் கேரமரு ளாசைபூண்டு
சேர்ந்தவர்க்குக் குருவாசை செலுத்துங்காணே. (10)

காணப்பா விட்டகுறை வந்தாலெய்தும்
காரணமாய்ச் சற்குருவைக் கண்டாற்கிட்டும்
வீணப்பா மற்றொன்றிற் றெரியப்போகா
மெய்யறிவாய் நின்றோர்கள் விளம்பினோர்கள்
தோணப்பா தோணுமனஞ் செவ்வையாலுற்
சுடர்போலே காணுவது சூட்சாசூட்சம்
கோணப்பா கோணுமல் நின்றுபாரு
கும்பமகா மேருவுச்சி வழிசெல்வாயே. (11)


வழியோடே நின்றுணர்ந்து பழுக்கமாகி
மதிவாசல் ராகுவென்னுங் கேதுக்கப்பாற்
சுழியான மேல்வாசல் நில்லிக்குள்ளே
தூண்டாத சுடர்க்காலைத் தூண்டிக்கொண்டால்
அழியாத பதமுமுண்டா மழுதமுண்டாம்
அப்பவல்லோ வானந்த லகிரிதூக்கும்
விழியான கண்மயக்க மெல்லாம்போச்சு
வேதாந்த மெய்ப்பொருளோ டுறவதாச்சே. (12)

உறவான பிரிவதில்லை யுகந்தான்கோடி
ஒருபொருளாய் நிறந்தாமா யுணர்ந்தோர்க்கெல்லாம்
துறவான துறவுக்கு யிதுவேமார்க்கம்
சொற்பெரிய வேதாந்தஞ் சூட்டுமுறைதானட்கள்
மறவாம லிருந்துகொண்டு மதியைத்தாண்டி
மாசற்ற வனுபூதி வந்துகொள்ளுஞ்
இரவேது பகலேது யெல்லியேது
யேகநிரா மயச்சுடரா யிருக்கலாச்சே. (13)

பிரமமுனி ஞானம் யிரண்டாம்.

சுபம்.

மதுரை பாஸ்திரக்கடை வியாபாரம், ரா. ரா. ம. கணபதியா பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருவே துணை.

எழுபத்தி நான்காவது:

பிரமமுனி திருவாய்மலர்ந்தருளிய

பிரம ஞானம் நூறு.

நன்றுனை வெளியொளியே பாதங்காப்பு
வுலகமெல்லாம் நிறைந்தபரா பரையேகாப்பு
வன்றுனை வகாரமதி னின்றுர்காப்பு
வாதியந்த மில்லாத பரனேகாப்பு
நன்றுனை நாதவொளி யானசித்தர்
நளினமலர்ப் பாதமெங் நாளுங்காப்பு
வென்றுடும் பூரணமே தாயேகாப்பு
வேதாந்தஞ் சித்தாந்தங் காப்பதாமே. (1)

ஆமென்ற வப்புவிலே தேய்வுதோன்றி
யதிதமென்ற தேயுவிலே வாய்வுதோன்றி
தேமென்ற வாயுவிலே யுந்திதோன்றித்
திடமான பிருதிவியும் வாயுவாச்சுக்
காமென்ற பஞ்சகர்த்தாள் பஞ்சபூதங்
கனமாகக் கூடியல்லோ வுலகமாச்சுத்
தாமென்ற வாணவத்தைப் போக்கினைமந்தா
சாதகமா யைங்தையுந்தா னென்றதாக்கே. (2)

நன்றுக விருக்கவென்றுல் வாசிபாரு
வுத்தமனே பிராணையக் கருவைப்பார்த்து
நன்றுனை மந்திரங்க ளொன்றுமில்லை
நாட்டியதோர் சந்திரகலே தேயப்பாரு
நின்றுநின் குறிகளெல்லாம் நிலைக்கப்பாரு
நிலையான ரேசகமுங் கும்பகந்தான்
நன்றுன பூரகமுந் தாரகந்தான்
நலராமற் சாற்றுகிற வரினைதேளே. (3)

கேளப்பா முக்கோணஞ் சுளியுமாச்சு
கெடியான வைங்கோண மறுகோணாந்தான்
காளப்பா வெண்கோண நவகோணாந்தான்
கலமான பிராணயங் கடினமெத்தச்
சூளப்பா யிப்படியே சுற்றியாடுந்
சுகமாகக் குருமொழியாற் றவறிடாமல்
மீளப்பா மவுனியென்ற ஜடனேசித்தி
வேதாந்தி யாணைக்கா விரண்டுபத்தே. (4)

பத்தாசைசக் குள்ளிருப்பா ஜலகில்ஞானி
பாங்காய்நீ மனத்தைநீபர வெளியில்வைப்பாய்
சித்தான சித்தெல்லா முலகிலாடிச்
சிவசிவா வென்றிருப்பார் தெளிந்தஞானி
முத்தான முத்தர்தினந் தோறுமப்பா
முனையான பிராணயம் வழியிற்செல்வார்
கொத்தான தசதீட்சை வந்தோர்க்கப்பா
குருவருளே கண்டவழி யேறுவாயே. (5)

வறுவார் புரவியென்ற வாசிபீஞ்சி
லேகாந்த வழிதனிலே சவாரிவிட்டுச்
சாருவா ரகண்டத்திற் றாலம்விட்டுச்
சொற்பெரிய பிராணய வேணிகொண்டு
வாருவா ராயாசந் தெளிந்துநிற்பார்
வல்வினையுந் தீவினையும் விட்டமேலோர்
கூறுவார் பூரணமே யென்றெங்காளும்
குறியான பூரகத்திற் கூடுகூடே. (6)

கூடுகட்டிக் குடியிருந்த கூடுதாக்குக்
கூடழிந்து போகாமல் வாசிகண்டு
பாடுபட்டுத் தேடியல்லோ பொருளைக்கண்டு
பரவெளியி லிருந்துமெள்ள வாழவேணும்
மாடுமக்கள் பெண்டாசை வைத்தாலென்ன
மாயையென்று வுலகத்திற் பற்றிவாழும்
ஓடுதனிற் புளிப்போலே யொட்டிக்கொண்டு
வுலகத்தோ டொத்திருந்து வோங்கிப்பாரே. (7)

பார்தனிலே சுழற்றினின்றுன் பாணுரூரன்
பாங்கான முசுகுந்த னிக்ச்சுத்தான்றுன்
நேருடைய கன்னனென்றும் நளன்றுனென்றும்
நிலையான ராவணன்றுள சூரனென்றும்
பேருடைய பஞ்சபாண் டவர்களென்றும்
பெருமையுள்ள சோழனென்றும் சேரனென்றுங்
காரணியில் வாழ்ந்தவர்க ளார்தானின்றூர்
தண்ணீரிற் குமிழினையப்போற் றகுமையாச்சே. (8)

ஆச்சிந்தப் படியப்பா வுலகவாழ்க்கை
யம்புவியில் மாயையது மெத்தவுண்டு
நீச்சிந்த மாயையைத்தான் சொல்லவென்றுல்
நெடுதான பனையோலை கொள்ளாதப்பா
பேச்சென்ற பிராணையக் கருவைக்கண்டு
பெருமையுடன் முக்கோணத் திருந்தவேறு
வாச்சுதடா மவுனமுந்தான் தீட்சைபத்தும்
வாகாகச் சாதித்தால் ஞானமாச்சே. (9)

ஞானமென்றுந் சித்தென்று மிரண்டினித்தை
நலமான சித்தப்பாக் கடிவமைத்த
மோனமென்ற யட்சரத்தை யறிந்தாயானுல்
மூன்றெழுத்து மைந்திலே கலிந்துவீழும்
பானமென்ற வமுதத்தை புண்டாயாறும்
டாதழுமல் ஞானமது சித்தியாச்சு
கானமென்ற கெவுனமது வேணுமென்றும்
கனமான தம்பனமாங் குளிகைசெய்யே. (10)

செய்யயிலே பூசரந்தான் பலமோபத்தத்
திரமாக வீரண்டெழுத்து மூன்னைநாக்கு
பையயிலே பிராணைய மறுகோணத்தான்
பாங்கான வுருவதுதான் லட்சமாகும்
வெய்யதொரு சாரணைதா னன்றுய்த்தீர்ந்து
வேகமென்ற வோரெழுத்தை முகட்டிற்றுக்கும்
வையமெல்லா முன்னுள்ளே கட்டிநிற்கும்
வாய்திறக்க வொட்டாது வழிசெல்வாமே. (11)

வாமென்ற சூளிகையைநீ சொல்லக்கேளு
வகையான கெவுனமதுக் கடுத்தகூறு
நேமமென்ற லக்சரந்தா னஞ்சுமாச்சு
நிலையாக வில்லட்சமுரு வேற்றிப்போடு
சேமமென்ற றீங்கார மிரண்டுங்கூட்டிச்
செகசால வாட்டமெல்லா மாட்டித்திரு
காமமென்ற பரவெளிமே லொட்டியாடும்
காட்டுக்கு ளின்னூலை நவின்றிடாதே. (12)

நவிலாதே மாணுக்கா சுலபமாக
நவகோணச் சூட்சமொன்று சொல்லக்கேளு
சிவலோகம் போய்வருமே செய்தியப்பா
சித்தர்களைக் காட்டிவிடும் வுருவமெல்லாஞ்
சுவமான போர்களுக்குச் சித்தியாகுஞ்
சுரணியிலே மேருவினிற் பூசைசெய்தால்
அவமாகப் போகாது ஆக்தாள்பூசை
யமாவாசை பூரணைக்குஞ் செய்துநோக்கே. (13)

நோக்கப்பா கும்பசுத்திற் கடிகைவைத்து
நுண்ணிடையாய்க் காசிறுதற் பொதினைமட்டுங்
தாக்கப்பாப் பூசுத்தில் வாங்குவாங்கு
சுயவான ரேசகத்தில் வங்குசிங்கு
நோக்கப்பாப் புரவியின்மே லேறவென்றால்
நொடிக்குள்ளே மூன்றெழுத்தை நிலைக்கப்பாரு
தேக்கப்பா விரண்டெழுத்தை மேலேவைத்துத்
தெளிவான வோங்காரங் கொண்டுவேறே. (14)

வேறுவார் சதுரகிரி பொதினைமீதி
லென்னசொல்வேன் சித்தருட வாட்டமாட்டம்
கூறியதோர் குகையனைவுங் கொள்ளாதப்பா
குறிந்துநின்ற வாமத்திற் கூட்டிநிற்பார்
தேறியதோர் வாசியிலே யேறிநிற்பார்
சிவலோகம் போய்வருவார் கூடணத்திக்குள்ளே
பாறியே கைலாசம் வைகுண்டாடுந்தான்
பாங்கான வெழுதுகட லுலாந்து செல்லுவாரே. (15)

செல்வதற்கு மாணக்கா சொல்லக்கேளு
சிவமான குருபதத்தை யடித்துக்காரு
வல்வதற்குக் கடைக்காண்ட ரூலிப்பாரு
வடவாக வாசிதனைத் தினமும்பாரு
பல்வகையாம் பதினெண்போர் ரூலிப்பாரு
பாங்கான சூளிகையுடக் கருவுங்காணும்
மல்வளங்கள் பெருகியதோர் கொங்கணையா
வைத்தாரே கடைக்காண்டம் வகையாய்த்தானே. (16)

தானென்ற வாணுவத்தைத் தள்ளிப்போடு
தவருமற் குருபதத்தைத் தரித்துக்காரு
ஊனென்ற வாதத்துக் காசைவைத்தால்
வுலுத்தனென்று தள்ளியுன்னை யிகழ்ந்துகிற்பார்
வானென்ற வகண்டவெளி காணுமட்டும்
வாதமென்ற பேச்சைநீ மறந்துபோடு
தேனென்ற சக்கரத்தி னெழுத்தைக்கண்டாற்
றெருவிலே விடக்குமப்பா வாதம்பாரே. (17)

பாரிலே வாதமது சொல்லுமென்பான்
பண்பான பூசகத்தைக் காட்டுமென்பான்
போரிலே யெழுத்தையெண்ணிக் கொள்வான்பாரு
போரில்லா ரிஷியென்றால் வாய்பேசாதே
சீரிலே யிருந்தாக்காற் சூளிகைசொல்லு
தெருவையிலே நின்றாக்கால் ஞானியாகும்
நாரிலே விட்டகுறை யாரறிவார்மந்தா
சொற்பொரிய சூளிகைமுதற் கவனமாமே. (18)

ஆமப்பா வுலகிற்சண் டாளருண்டு
ஆங்கழுயும் பேசிடுவான் கோளுரைத்துசொல்வான்
ஓமப்பா வுலவருடன் பேசவேண்டாம்
வுறவாடி வாதமது வுற்றுக்கேட்பான்
காமப்பா வாதத்தைச் சொன்னாயாற்றற்
றருணன்பன் றவஞ்சொல்லாம் வீணாய்ப்போகும்
காமப்பா வகண்டத்தை முழுதுங்காட்டி
ஞானமென்ற வாதத்தை நாட்டுவாயே. (19)

காட்டுவது யாருக்கு மாணிக்காளே
நற்சீட ணுணக்கால் வாக்குச்சொல்லு
காட்டுகின்ற தசதீட்சை சொன்னபின்பு
ணைகழுனையாய் வாதத்தின் தீட்சைசொல்லு
போட்டிபண்ணிக் கிரிக்கிப்பான் பாவிபாவி
புலையனுக்குத் தீட்சைநீ யுணர்த்திடாதே
வாட்டமில்லாக் குறியோர்க்கு வாதஞ்சொல்லு
வஞ்சகர்க்கு வாதமதை மறைத்திடாயே. (20)

மறையாதே போணுக்காற் ரோஷந்தோஷம்
மடையனுக்குச் சொல்லிவிட்டாற் பாழாய்ப்போகுஞ்
கறையான கண்டரிடம் வாதமப்பா
கண்டிதத்தே செய்யாதே கலங்கிப்போகும்
நிறையாக மணந்தோர்ந்து நிலையைக்கண்டு
நின்றுசித் தடைந்ததொரு முத்தருக்கும்
முறையோடே தசதீட்சை பெற்றபோர்க்கு
முகுத்ததொரு வாதத்தை மீட்டுவாயே. (21)

மீண்டதொரு ணைவீரம் பலந்தாணென்று
வீரனை வெள்ளையுமோ பலந்தாணென்று
வாண்டதொரு வரிதாரம் பலந்தாணென்று
வழுகான கெந்தியது பலந்தாணென்று
வீண்டதொரு கொச்சிவெள்ளைப் பலந்தாணென்று
விணைவான மணிலையும் பலந்தாணென்று
பூண்டதொரு துருசதுவும் பலந்தாணென்று
புகழான வினைங்கணைரு பலந்தாண்போடே. (22)

போட்டஞ்சு சுண்ணைசெய நீராலாட்டி
புகழாக வில்லைதட்டி ரவியிற்போடு
காட்டெருவி லஞ்சுனைவத்துப் புடமூன்றிரு
கதிரவன்போற் சொந்தாரங் கண்டெள்ளாது
தேட்டமுட னஞ்சுசுண்ணக் கவசத்தாலே
செம்மையுட னவச்சார நீராலப்பே
வாட்டமில்லா சொந்தாரம் வெள்ளிதன்னில்
வகையாக காறாற்றுக் கொன்றேறசாத்து (23)

சாத்தப்பா வழிசுட்டுக் கொண்டிரு
தவறுமற் சிறுபெண்தான் மெத்தநன்று
போத்தியதோர் நாகமது நாலுக்கொன்று
டுகழாக முண்குருவிற் கலந்துதாக்கு
ரூத்திரத்தைச் சொல்லிவிட்டேன் மாணுக்காகேள்
சொற்பெரிய அட்சரத்தைக் கண்டுஆட்டு
வாய்த்ததொரு வாதமதிவ் வளமேவசெய்யில்
லவலைகயிலே கஞ்சாவில் வைத்தலாமே. (24)

வைத்தகிலே வாதத்தி னெழுத்தையூணு
வாகாக வாடிவிடு மண்டாண்டங்
கைத்தலத்தி லிந்தமுறை தெரிந்தமேலோர்
காட்டார்கள் ராஜகுரு மறைப்பார்பாரு
மெய்த்தகுரு மொழிதவரிச் சொன்னயோலை
மேவிவந்த வித்தையெல்லாம் விழலாய்ப்போகுஞ்
சித்திரம்போல் மனதினிலே குருவைவணைவத்துத்
திரமான வாதவித்தை யாடுவாறே. (25)

வாரூன சமாதியிலே யிருக்கும்போது
வகையான ரசகத்தை நெஞ்சிற்ருக்குக்
கூரூன கும்பகத்தை யுந்திக்குள்ளே
குறிப்பாகப் புனைத்துவிடு வுயிர்போகாது
தேரூன பூரகத்தைக் கழற்றிப்போடு
சகமெல்லா மாண்டாலு மசைத்திடாது
தாரூன தாரகத்தை நாட்டத்துள்ளே
தறுகாமல் வைத்திருந்து சமாதிதீரே. (26)

தீரடா வுந்தியிலே ஓங்காரந்தான்
திரமான கண்டத்தில் வேகாக்காலப்
பாரடா நாட்டத்திற் சாகாச்சென்னி
பரமான வெளிவீட்டில் அகாரமாச்சு
சேரடா குண்டலிக்குள் உகாரந்தானுந்
சிவசிவா யுகமட்டுஞ் சமாதிக்குள்ளே
ஆடலா டிவ்வளவுங் குகையைவிட்டு
யாதியென்ற பொருளுலையப்பா தறிந்துபாரே. (27)

பாரிலே திருடருண்டு சன்னருண்டு
பாசாங்கு பண்ணுனியவர் வாதங்கண்டு
நேரிலே நீதங்கே னிக்கைபார்த்து
நீலியான மேல்நீடி சட்டிவாழ்வார்
தாரிலே யவர்குறிலையப் பார்த்துக்கொண்டு
தாரணியில் விர்ளாதே தவறுண்டோடிபோந்து
சார்பிலே வாதமென்ற பேச்சைசக்கண்டாற்
றவறுமை லென்வாயில் மண்ணேபோடே. (29)

போட்டவர்க்குத் தீட்சைமுன்பு சொல்லிப்பின்பு
புகட்டிவிடு மனமுறைத்த சீடருரைவல்
காட்டிகமா யறிவின்மதி கண்டபின்பு
தருகாமற் றுபரமு மிருப்புக்காட்டி
காட்டிலே வினங்கியோதார் தலபூக்காட்டி
கலமான கயிலேழுத லண்டங்காட்டி
வாட்டமில்லா வுலகமெல்லாந் தன்னுற்காட்டி
வாகான வாசியுட வினைகாட்டேடே. (29)

காட்டிலே பொதினைக்கு மேற்கேசேரு
கணமான கனகமலைச் சித்தர்வாழ்வு
காட்டிலே தசதீட்சை செய்தபின்பு
நலமான பொதினையிலே செல்லன்று
காட்டிகமாய்க் கனகமலைச் சித்தபட்டா
தயவான காயசித்தி கற்பமீய்வார்
மேட்டிமையாய்க் குளிகையது மேவணதீப்வார்
வெகுசூதிவு தீட்சைசகண்டி மலையிலேறு. (30)

எறுமுன்னே வாலைகற்ப மதனைக்கொள்ளு
வியல்பான மலைபதிலே செல்லாதப்பா
கூறுகின்ற குவலயத்தில் வாலைகற்பம்
கொண்டபின்பு மலையேயறி வாழுமேலுங்
தேறுகின்ற வுலகத்திற் பெரியோருண்டு
சிலைபோலே யலர்மனது வரமேவுகாரு
மீறுகின்ற வாசியதுக் கர்த்தம்மொண்டும்
விள்ளாதே யலர்மனத்தை விடாதேகாதே. (31)

காக்கையிலே நெற்றியில்முத் திரையைப்பாரு
கனமான யிடக்காத்திற் சங்குசக்ரம்
மூர்க்கமுட னிரண்டுந்தா னிருந்தாற்காரு
முயற்சியுட னென்றிருந்தால் முத்தியில்லை
தீர்க்கமுட னறிகையிலோ யொன்றுரைக்கண்டாற்
சித்தியில்லை யென்றுசொல்லித் தெளிந்துகாணு
ஆர்க்கமுள்ள சித்தருக்கு யிரண்டுங்காணும்
அம்புவியில் மானிடர்க்கு வொன்றுபாரே. (32)

பார்பெரிய உபயகுறி யிரண்டுங்கண்டு
பதருமற் பணிரெண்டு வருஷங்காரு
சீர்பெரிய நெற்றியொன்று கண்டாயாற்றற்
சித்தனல்ல வுலகமென்று தெளிந்துநோக்கு
கோர்பெரிய குறிகளிலே திரத்தைக்கண்டு
நிலையான பிர்மமுனி யென்றேசொல்லிப்
போர்பெரிய சித்தாப்பாப் பேருமிட்டுப்
பிரமமுனி யென்றழைத்தார் பெரியோர்தாமே. (33)

தானென்ற சித்தருடப் பேரைச்சொல்லிச்
சாதகமாய்ப் பிழைத்திடுவா ருலகிற்கோடி
வேனென்ற வவர்மனத்திற் குறைவந்தாக்கால்
வெந்துவிடு மண்டமெல்லா மறிந்துகொள்ளு
ஓனென்ற வுலகத்தை வாய்மூடாற்றான்
வுலைமூடி கிடையாது வுலகமாயை
ஆனென்ற மனதுரிமை கொண்டாயாலால்
அப்பனே நீயுமொரு சித்தனுச்சே. (34)

ஆச்சிந்த தாலுக்கு யிணையுமில்லை
யப்பனே யிலைதப்பழித்தாற் பாவியாவான்
ஓச்சிந்தச் சித்தருக்கு தாலென்றாலோ
வொருகோடி யோசனையுந் தண்டஞ்செய்வான்
பேச்சிந்தச் சித்தருடப் பேர்சொன்னாலும்
பிறந்தாலு மவர்களுக்குப் பேருண்டாகும்
வச்சிந்த வுலகதனை வாங்கிக்கொண்டா
லியல்பான தவஞ்செய்தும் பலியாவாதே. (35)

வாழுவ ஸ்ருதநூல முபபதகாறும
வகையோடே படித்தவர்கள் சித்தராவர்
நேரான தீட்சைவிதி முருவாற்கண்டு
நேரறிந்தோ முலகத்தில் ராசயோகி
கூரானப் பிராணையக் கருவிலேலே
குருடருக்கும் ஞானமது கூடும்பாரு
வாரானப் பதினெண்போர் சித்தர்பாத
மனுதினமும் போற்றியிந்த நாலுமுற்றே. (36)

பிரமமுனி ஞானம் 500.

முற்றிற்று.

மதுரை பாத்திரக்கடை வியாபாரம் க. ரா. ம. கணபதியாபிள்ளை பவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் ஆச்சிடலானது.



ஸ்ரீ

சுமனஸ் ராஜீனா.

எழுபதினாயிரத்தாவது:

பிரமமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

முப்பு திட்டை சதகம்.



வெண்பா.

ஆதியோ டந்தமில்லா வானந்த வெள்ளமெனும்
சோதியாம் பூரணத்தைச் சொல்லக்கேள்—ஆதித்தன்
மண்டலத்தில் வாசி வளரு மமேசனடி
குண்டலியின் ரூள்பரவுங் கொள். (1)

கோலமுடன் யோகக் குறிப்பறிய சந்திரனிற்
பாலெனிற மாகும் பருவங்கள்—சீலமுடன்
அண்ணமனை கண்ணீர்கால் அப்பனே மண்டலங்கள்
திண்ணையிடை யிற்பாயுந் சீர். (2)

சீரா யறுமாதம் சென்றுண்ணைத் தானதுவும்
வாராமல் வாசி வணங்குமே—தாரான
வாய்வு வொடுங்க மனமொடுங்கப் போதமிகும்
வாதசுவக் காரணித்தை வைப்பு. (3)

வைப்பான பங்குனி சித்திரை மாதத்தில்
உப்பாய் வளர்ந்த உனருப்பாம்—தப்பாமல்
பூவெடுப்பாய் காலுபடி போடுசுத்த மீரைட்டில்
மாவெடுப்பாய் சுத்தியது வாம். (4)

இதுபூமி னெண்படிக் கீப்வா யழுனி
யதிற்றெளிந்து மேகட்டு மப்பா—மதியான
சுன்னை மனைப்படியிற் சுத்தஜலம் காலுபடி
திண்ணையுடன் நீத்திற் தெளி. (5)

தெளிவான ரெண்டுமே சேரிருத் தொன்றுகில்
வழியான பாலரயுப்பு மாறி—பழியா
திருந்த சலத்தி விடுதீ படியொன்றே
திருந்தவே காச்சிவத்தி தீ. (6)

தீயிற் குருக்குச் சிவந்து மெழுகுபத
மாயில்வீ ரப்வெள்ளீ யாஞ் சூடன்—றுய்வலைகக்கு
ஓர்ஆ சிலைடதா னுரைத்த வழலீலக்குச்
சாருஞ் சரக்கெல்லாந் தான். (7)

தாணன வில்வில்லீ தாக்கு ரவிமுகத்தில்
மானே திசநாள் வலுவாகும்—வனமுள்ள
இந்தசவுக் காரமெவரு முலையார்கள்
வந்த குருவின் மொழி. (8)

வழியாம் வழலீல மகத்தான காரம்
தெளிவாகு செலங்குத்திச் செல்லி—வெளியான
ஐங்குகையில் வைத்து அருளாற் புடமெரியத்
தங்கம் விளைந்தகுருத் தான். (9)

குருவாம் வழலீலயிலே கூரான வீரன்
திருவான கல்லுப்புத் தீரும்—மருவ
ஒருமாதங் காய்ந்தபின்பு உத்தஞ்சு சுண்ணம்
தருசாரங் கூட்டியரைத் தப்பு. (10)

அப்பில் விளையுப்பு அப்பனே பொற்புடத்திற்
தப்பாமற் கூட்டாச்சு தானிதுவும்—செப்பக்கேள்
நாயுருவி சாம்பலிலே நன்றுகப் பின்பொருக்கால்
ஆவிபுட் மொன்றிடுவை யால். (11)

ஒன்றிடவே உப்பதுதான் ஓகோகோ யென்சொல்வேன்
அன்றிக் குடகரியி லாடுமே—வென்றியுள
சித்த ரசமணியோ செம்பொன் வயிரமிதோ
முத்தமணி தானே முதல். (12)

முதற்தரத்தி னுப்புமணி முன்வாதக் கைவைப்பு
மதற்தா மணிகாரம் வைத்தால்—மிதத்தசுண்ணம்

அஞ்சு மயறத்தழுத்தி யாறு புடம்போட
மஞ்சுலவு மல்லிகைப்பூ வாம். (13)

பூத்தவுப்பாற் கோடிவித்தை பூட்டலாஞ் சாரணையும்
சேர்த்துக் குளிகையிட்டுச் செல்லலாம்—ஏற்றமுள்ள
வாதமடங் காத்திதாழிலு மாத்தா யிரத்தெட்டு
வேதையிட லாந்த யிலமே. (14)

தயிலத்திற் பட்ட சரக்கு மூபசாங்கள்
கயிலாசத் தாட்டுமெழு காகும்—ஓயிலாய்க்
களங்கு மொருகோடி கட்டிகளோ கோடி
வளங்கமொரு கோடிபற்ப மாம். (15)

தயிலவேணை.

பற்பங் குருக்கோடி பாஷாணந் தொட்டாட்ட
அற்பமல்ல ஆதிமுத லாம்வெள்ளி—சிற்பரைபான்
யீன்ற தயில மியம்பக்கேள் சொல்லுகிறேன்
பேன்ற கடுக்கா யெடு. (16)

எடுப்பாய்நற் செங்கடுக்காய் பீரைந்து தானே
அடுப்பா யிடித்துத்தூ ளாக்கி—வடுப்பாய்
அழுநியிட்டுச சாம மறைக்கால் வழுலை
திமிரியிட்டு வில்லுதணச் செய். (17)

செய்துபின்பு சொல்லக்கேள் செங்கடுக்காய் மூலமதைக்
கொய்தேநற் பட்டைடத்தூள் கொட்டதிலே—வெய்த
தெசபலமாங் கெந்தகத்தூள் சேர்த்தே யிடிப்பாய்
அணையாங் கருநாணி யாம். (18)

நாவி யொருபலங்காண் நாட்டியரை முன்னீரால்
மேவியே காசதுபோல் வில்லைசெய்—யாவியே
பூதலத்தி லித்தயிலம் பொற்பாக வேவாங்கி
மாதயில மென்றிதணை வை. (19)

வைத்ததயி லத்தாலே வாழ்ரசத்தைக் கட்டியே
மத்திதுப் பூச வலுவீரம்—எத்திக்கும்

செம்பொன் மணியாகுஞ் செங்கடுக்காய் வேதையிது
அம்புவிக்கு னோராட கம். (20)

ஆடக மாந்தயில மண்பாய்ச் சாரக்குகட்டு
வாடத் துவைத்திடவே மாளுங்கான்—ஆட
மெழுகாகும் பட்டவிடம் வேதைதச மாந்தாம்
பழுதா மிரதாரம் பார். (21)

தாரம் மெழுகாகும் தனிச்செம்பு பொன்னாகும்
வீரம் மெழுகாகும் வெள்ளியிலே—சாரம்
தசமாற்றும் பாஷாணச் சார்வினக்கில் வாட்டில்
அசையாத செம்புவெள்ளி யாம். (22)

ஆமே தசமாத்தா யாடலாம் வெள்ளியப்பா
போமேபொன் மேருவதிற் பூட்டலாம்—தாமே
புதிதயில பாஷாணம் பூஷாவை லோகம்
மதியிற் பதினெறு மாத்து. (23)

வெண்ணதன்றித் தயிலவேதை.

மாத்தடா குன்றியுடன் மால்தேவி கெந்தகந்தான்
சாத்துவாய் வீறமுடன் பூரம்—சேர்த்தும்
பலம்பத்துத் தாமொன்று பார்நாவி யொன்று
நிலவழலைச் சுண்ணமொன்று நேர். (24)

நேத்தியுள குன்றிதன்ன நேராக வேயுடைத்து
ஊத்து மழுரிதனி லூறவிட்டு—வாத்துரவே
சென்ற லிதுவெல்லாம் சேர்த்தாட்டி வில்லைசெய
வென்றூர் முருங்கைப்பூ வே. (25)

பூச்சாற்றி னுலே புகழுந் தயிலமிதாம்
வாச்சதொரு வீரனைத்தான் மாட்டதிலே—காச்சலுற
வாட்டமுழுக் கட்டாகும் மாயும் வெடியுப்பிற்
கூட்டியுரை யுந்திசத்துக் கோர். (26)

திசத்துக்கோர் வீரனென்று சேர்ப்பாய் தயிலம்
திசத்துக்கு வென்றிடுசெந் தூரம்—பசப்யான
வேகாத் தலைநீரும் விட்டாரசந் தங்கழுதல்
சாகுபற்பம் வேதைச் சாக்கு. (27)

வேதைத்ச் சரக்கதண்ண விட்டால் மெழுகேகது
பாதகஞ்சொ னாரமது பற்றுமோ—தாதையிந்தப்
பற்பம்போ டாட்டாற் பலிக்குமோ வாதமடப்பா
நிற்பனைபப் பூசைபண்ணித் தேர். 29

தேர்ந்த தயிலமொன்று செப்பக்கேள் காட்டுள்ளி
யார்ந்தபலம் பத்துக்கு அப்பனே—சார்ந்தெரு
கெந்தி சரிகூட்டிக் கேசப் பொடிநாலு
லந்தமால் தேஷியொன்று மாம். (29)

மாய லழலியொன்று மாட்டி யரையமூரி
பாயவிட்டு ஊட்டியே பார்வில்லை—நேயமுள்ள
கெந்தித் தயில மெழுகாம் மலைநிலைக்குத்
தந்தம்போற் கட்டுமே தாக்கு. (30)

தாக்கு மலைநிலையைத் தங்கபற்ப மேகூட்டிப்
பார்க்கப் படுசெம்பே பார்பரியாம்—ஏக்கம்
பிடிப்பானே ணப்பாசீ பேசாக் கருணை
விடுபோர்க் ளோவெளியில் மேவு (31)

வெளியாக் தயிலமிது வேதை பொருகோடி
பழியாக் தயிலத்தைப் பாச்ச—வொளியான
மால்தேனி கட்டில் வலுவீரன் மாண்டிடுவான்
காலறுத்துப் போட்டேன் கரு. (32)

கருவழலை செய்தவனே சித்தனெனல்,
கருவழலை செய்து கரையேறும் வாதிமகன்
பெருவாழ்வு சித்தனெனப் பேசு—மரிதான
ஞானமெலாந் தங்கும் நமனேது நாட்டரசம்
தானதியுங் கருத்திதுவே தான். (33)

பாஷாண வேதை.

காரிசாலைச் சாற்றூற் கடுகை வரையாய்
மூருங்கையிலை மூவேழ் பலமும்—திரும்ப
வழலையொன்று கூட்டி மகத்தாந் தயிலம்
அளவுக்குப் பாஷாண மாம். (34)

ஆமப்பா வெள்ளை யரைதயுங் கொடகரியிற்
சோமத் தயிலஞ் சுருக்கிடவே—காமித்துப்

பாசாண வேஷ்த பதிமூன் கவலோகம்
வீசாதே வெள்ளி பதுவே. (35)

முருங்கைத் தயிலத்தில் வீரம்.

வெள்ளி முருங்கை விரைத்தயிலங் கண்ணுலே
வள்ளலெனும் வீரத்தை மாட்டியரை—கொள்ளியென்ற
பிள்ளாக்குஞ் சொல்லாதே பேராய் ரவித்தகட்டில்
மெள்ளவே பூசி விடு. (36)

வெள்ளிப் பற்பம்.

வெள்ளியுட பற்பம் விருப்பமுடன் சொல்லக்கேள்
கள்ளியுப்பு தாளிழுப்பு கற்சுண்ணம்—வெள்ளையுப்பு
நீருஞ் சமனிடையாய் நேர்வகைக்குக் காற்கழுஞ்சி
மீரு மரிதார மே. (37)

தார மொருகழுஞ்சி தாக்குபடிச் சாற்றுலே
சேர வரைத்துத் திரட்டியே—பாரமுடன்
வங்கமென்ற வெள்ளியம் மாருங் கலசமிட்டி
இங்கிதமாய்ப் போடுபுட மே. (38)

புடத்தினிலே வங்கம் புரண்டுபொடி யாகும்
தடித்துவெடி யுப்பிற் சரியாய்—நடத்தி
அரைப்பாய்ப் பழச்சாற்று லப்பா திரைக்கொன்று
விரைப்பாய் வழுலையுதன் மேல். (39)

மேலான வில்லைசெய்து மீட்டிப் புடம்போட்டு
மாலான சுண்ணமாம் வங்கமே—சீலான
வீரம் திரைக்கொன்று விட்டாட்டிச் சாற்றுலே
காரவெள்ளி யாந்தகட்டிற் காண். (40)

காணக் கலசமிட்டுக் கட்டிப் புடம்போடு
வீணல்ல சுண்ணமாம் வெள்ளிதான்—தேணவே
வெள்ளித் தொழிலுக்கு வேதைக் குருவித்துவாம்
உள்ளபடி சொன்னே னுணர். (41)

வாதத்துக்கு முக்கிய கவனிப்பு.

உணருங் குருவிட்டால் ஓகோகோ வெள்ளை
பிணமாகும் வாதிமகன் பேச்சே—குணமான
வெள்ளிக் குருவோடு வேந்தனெனும் வீரமிடு
துள்ளிவிடும் வெள்ளித் தொழில். (42)

தொழிலான பொன்னுக்குச் சொன்ன குருவேனும்
கூறியா வழிலக் கருவே—வெளியாகச்
சொன்னேன் முறைப்பாடு சொல்வதொன்று மில்லையே
கன்னைக்கோ லாம்வழிலி கான். (43)


காணப்பா ஜீந்நூற்றைக் கண்டு கருவழிலி
பூணப்பா பொன்வெள்ளி பூட்டலாம்—வீணல்ல
சொன்னை னதிலெடுத்துத் தோணுமிக்க அஞ்சுபத்தும்
பொன்னேபொன் னீரே பொருள். (44)

பொருள்காண வேகந்தி பூட்டினர் வாதசித்தி
அருள்காண வாசிசித்தி யப்பா—மருவ
சிவக்யான தீட்சைசித்தி செப்பினேன் ஞானம்
பலக்குறைகள் நீக்கியே பார். (45)

பிரமமூனி மூப்புநீட்சை சரு.

மூன்றாம்.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெருவிலிருக்கும் வித்வான், மூ. குழந்தைவேலுப்பின்னை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடுவரை.




உ.

குருவேதனை.

எழுபத்தாருவது:

சங்கமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

விஷவைத்திய சூஸ்திரம்.



ஆதிபரா பரையினிரு பாதம்போற்றி
அண்டான பூரணத்தி னருளேபோற்றி
நீதியாய் நாதாக்கள் பாதம்போற்றி
நிரஞ்சனமாஞ் சுகாதீதப் பொருளேபோற்றி
சோதியாய் நின்றிலங்குஞ் சுடரேபோற்றி
சொற்பெரிய மூலகண பதியேபோற்றிப்
பாதியாய் மதியணிந்த குருவைப்போற்றிப்
பாடினேன் விசவைத்யம் பாடினேனே. (1)

பாடினேன் விசவைத்தியம் பெருநூலெல்லாம்
பண்பாகப் பார்த்ததனைச் சுருக்கியேதான்
நாடியே சூஸ்திரமாம் பதினேறுக்குள்
நாட்டினேன் சுலபமதா யொளித்தார்சித்தர்
தேடியே யவர்கள்பதம் பணிந்துவாங்கித்
தேசத்தில் நல்லோர்க்கு யீப்ந்தேனப்பா
சாடியே சங்கமுனி விசநூலென்றுல்
தாண்டுமே கடல்கடக்கச் சுற்பந்தானே. (2)

தானென வென்னூல்போல் வெளியாயாருஞ்
சாற்றவில்லை சாற்றவில்லை சார்ந்துபாரு
கோனென தெருசாம தேவர்சொன்ன
குருநூலைப் பொருள்மறைத்துக் கூறிப்போட்டார்
தேனென கும்பமுனி ஐயர்நூலிற்
றெளிருயதை வெகுகடின மாருந்தானே
வானென சித்தர்கள்தன் பாடலெல்லாம்
வாகாகத்தானச் சொல்லவில்லை மறைத்தார்பாரே. (3)

பாதேநீ யின்னுரையில் வெளியாய்ச்சொன்னேன்
படியாத மூடருக்கும் பண்பாய்த்தோணுஞ்
சேதேநீ குழந்தைகளுந் தெளிவாய்க்காண்பார்
சிறப்பாக யின்னுரலைப் பதனமாக
பேதேநீ வைத்துக்கொள் தருவதானால்
பெரியோர்கள் கேட்டாக்கால் கொடுத்துவாங்கு
கூதேநீ யிந்தவித மொருவர்தானுங்
கூறுத விந்தையினு கூர்ந்துகாணே. (4)

காணவென்றுற் காணாரிது சட்டைநாதர்
கருக்கிடை சூஸ்திரத்தில் மறைத்துச்சொன்னார்
காணவே பிசவனைக்குத் தேரையாரும்
காட்டினா ரன்பதுக்குள் நயமாய்ப்பாரு
தோணவே சித்தர்சொன்ன தூலுக்கெல்லாஞ்
சோதியென்ற தீபமது சுலபமெத்த
பூணவே நான்வெளியாய்ச் சொல்லிப்போட்டேன்
புத்தியுள்ள பின்னோகளே புகலக்கேளே. (5

புகலுகிறேன் விசமிதொரு பலந்தான்வாங்கி
புதுவையுடன் வாளழமேற் றோடுபோக்கி
இகலுகிறேன் பச்சைக் கிரட்டிகூட்டி
யிலுப்பையுட புண்ணாக்கைப் பொடியாய்ப்பண்ணி
லகலுவே ணப்பொடியை மைந்தாநீகேள்
வடிகட்டி நாலுபலம் நிருத்துக்கொண்டு
அகலுகிறேன் முன்மருந்தோ டொக்கச்சேர்த்து
அம்மியிலிட் டிப்பொடியை மையாய்த்தாணே. (6)

மையாக வரைத்தொரு பொடியையெல்லாம்
வாரியொரு சிரட்டைதனில் வைத்துக்கொண்டு
மெய்யாக யிரண்டு கள்ளிப்பாலை
விட்டுநீ கிண்டிவாய்க் குழம்புபோலே
ஐயாகேள் நாழிகையா றைந்துதானு
மப்படனே மூடியதை நினைவில்வைத்து
செய்யாலே தானெடுத்து மைந்தாநீயுந்
திறந்துபார் புட்டுப்போல் தோய்ந்துபோமே. (7)

தோய்ந்தபுட்டிப் போலிருந்த பருவங்கண்டு
சுகமான நிசமான யிலைச்சார்வாங்கி
ஆய்ந்தபெருஞ் சிரட்டைதனில் வைத்துக்கொண்டு
அப்பனே முன்பருந்தைத் தானுப்பன்னாய்
தூய்ந்துமே போகாமல் நிதானமாக
வருட்டியந்தச் சார்துலைவைத்துப் சுளகிற்போடு
காய்ந்தகதிர் கன்னிலைவைத்தால்மோசங்
கனிவாக நிழலுலத்திப் பதனம்பண்ணே. (8)

பண்ணியதைப் பேய்ச்சுரையின் குடிக்கைதன்னில்
பக்குவமா யடைக்கன்று அதுவில்லாட்டால்
புண்ணியனே பனைபோலக் கொட்டான்தன்னில்
புதுமையுட னடைத்தினிமேற் புகலக்கேளு
கண்ணியே காஷிசெய்யான தேழுப்பீச்சும்
காட்டுகிற பெருவிசஞ்சில் விசங்கட்கெல்லாங்
கண்ணியென்ற இளவெண்ணீர் கன்னிலைதான்
சற்குழம்பைத் தான்களைத் தீருவாயே. (9)

சுருவாய் மருந்தையின வெண்ணீரில்தான
னிப்படியே கனைத்துவுள்ளுருக் கேத்திப்பாரு
காய்கவே மண்ணடைகொண்ட விசத்தையெல்லாங்
கடிவாயி லிரக்குமப்பா பேதிகாணும்
ஓய்கவே பேதியுமே அஞ்சுதரமாலல்
உப்பகற்றிப் பச்சரிசிக் கஞ்சியுண்ணைநிற்கும்
பாய்கவே குழம்புகொண்ட நாழிமுப்பான்
பச்சரிக் கஞ்சியுண்பா யறிந்துதானே. (10)

தானென்ற மலுகாரில் வயிறனத்தல்கண்டால்த்
தண்மையுடன் பச்சரிசிச் சோற்வடித்து
மானென்ற சுடுசோத்தில் வெள்ளாட்டின்பால்
வரிசையுடன் விட்டருந்த வயிறனத்தல்தீரும்
தேனென்ற திம்முறைதா னருந்சொல்லார்
தெளிவாகச் சொல்லிவிட்டேன் சூஸ்திரத்தன்னில்
கோனென்ற ராசர்மெச்சும் விசகுடோரிக்
குழம்புகண்டாற் சற்பமெல்லாங் குடிபோம் பாரே. (11)

பாரடா பெருச்சாளி பெலிவிசங்கள்
பறக்குமடா யிந்தவகை யறிந்தபாரு
சாரடா விஷங்களெல்லாஞ் சாந்தமாகத்
தன்மையுடன் மந்திரமொன்று சாற்றக்கேளு
சேரடா வயற்றோளுங் காலுமாகத்
தியானித்துப் பாத்திடவே தீருந்தீரும்
ஊரடா யெனைப்போலே சொல்லப்போறூர்
அப்பனே தெரியாட்டா லறியக்கேளே.

அறியுகிற வகையென்ன வென்றுபாரும்
அப்பனே சொல்லுகிறேன் பெரியோர்தானும்
வெறியான கட்குடிக்கும் போதிலேதான்
விள்ளுவா ரவர்கள்பதம் விரும்பிநன்றாய்க்
குறியான ஆண்டுபனி ரெண்டுங்காத்தால்
குணமறிந்து மந்திரத்தை யுபதேசிப்பார்
தெரியாத புத்தியிலுல் வெளிசொல்லாதே
தெளிவாகக் கண்டறிவாய் திரஞ்சொன்னேனே


சொன்னதொரு மந்திரத்தைக் கடிவாய்தன்னிற்
சூட்டியே யனைத்தா லழுத்திப்பாரு
னன்னசொல்வேன் விசங்களிறற் செத்தபேரு
மெழுந்திருப்பா ரிந்தவித்தை அதிதமப்பா
மின்னியே மற்றமற்ற வித்தையெல்லாம்
விசவித்தைக் கொவ்வாது மெய்யிதாகுந்
தன்னிலைமையாய்ப் பார்த்தவர்க்கு யெல்லாஞ்சித்தி
தானேயறியாற் கொண்றுமில்லை யெல்லாம்வீனே.

வீனென்று நினையாதே மந்திரஞ்சூட்சம்
விள்ளாதே விசகுடோனிக் குழம்பைமைந்தா
கானென்ற ஆடனே மாட்டுக்கெல்லாஞ்
கரைத்தினவெண் ணீரிரண்டோன் றியத்தீரும்
தானென்ற திம்முறைதா னிரிற்சொன்னேன்
தானிலைமையுட னைட்டிலுமோ டிகழ்ந்துசொன்னேன்
பேரென்ற விசனைவத்தியம் புண்ணியமாரும்
பெருமையுண்டு குருமையுண்டு பேணிப்பாரே.

பார்க்கவே பலநாளும் நன்றுரப்பாரு
பாடியதோர் கருமனைப்பும் வெளியாய்த்தோணும்
மார்க்கமுடன் மானிடர்கள் பிழைக்கவேண்டி
மாட்டினேன் வெளிதிறந்து மைந்தாமைந்தா
ஆர்க்குமிதைச் சொல்லாதே அறிவுகூர்ந்து
அப்பனே புணர்வோடு வுற்றுப்பாரு
காக்கவே விசனவைத்தியம் பதினாறுக்குள்
காட்டினேன் கருக்கிலடசூஸ் திரந்தான்முற்றே. (16)

சங்கமுனிவர் விஷ்ணுவைத்தியம் ஸ்ரீ முற்றிற்று.

மதுரை பாத்திரக்கடை வியாபாரம், ரு. ரா. ம. கண்டபதியர் பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



குடாரன் றுணை.

எழுபத்தேழாவது:

சங்கமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

விஷ நூல் சுருக்கம் அ.

அகண்டபரா பரையினிரு பாதம்போற்றி
அடைகிறேன் விசனவத்தியச் சுருக்கந்தன்னைப்
புகன்றிட்ட நூறினிலும் பதினாற்கண்ணில்
பொருளெல்லாம் வெளிதோணப் புனைதப்பில்லாமல்
உகந்திட்டச் சுருக்கமெட்டில் நன்றாய்ச்சொன்னேன்
ஓதோதோ யிதையறிந்து ஓளித்தார்சித்தர்
மகிழ்ந்தவரைப் பதட்பணிந்து நூலைவாங்கி
மானிலத்தில் நல்லோர்க்கு வளங்கினேனே. (1)

வளங்கினேன் மணிமந்திர வூளகதந்தள்
வாகாக வெளிதோண மறைப்பில்லாமல்
களங்கமறச் சொல்லிவிட்டே னிந்நூலைக்
காட்டினுல் நல்லோர்க்குக் காட்டவேண்டும்
வினங்கவே யெனைப்போலே யாருஞ்சொல்லார்
மேதினியிற் சங்கமுனி விசநூலென்றுல்
உளங்கலங்கி மதிமயங்கிச் சற்பமெல்லா
மோடியெழு கடற்கப்பா லொளிக்குந்தானே. (2)

தானென்ற பச்சையொரு பலந்தான்வாங்கித்
தன்மையுள்ள வாளமதைக் கிரட்டிகூட்டித்
தேனென்ற பிண்ணைக்கு அதற்குரட்டி
சேர்த்துரீ கல்வத்திற் றிரமாயாட்டிப்
போனென்ற சிரட்டைதனில் வாரிலெவத்துப்
புகள்மூறுகிப் பால்நிறைய விட்டுமைந்தா
காணென்ற வூளையின் கட்டுகொண்டு
கலக்கியே வூளம்பாகக் கிண்டுவாயே. (3)

கண்டியே சுடுகைகுழப் பதாகமட்டுங்
கணியாமல் நிழலில்லைத் தப்பாற்பாரு.
உண்டியே பிட்டுப்போ லுலைந்திருக்கும்
உடனேதீ முறைமயக்கிச் சாறுவாங்கி
கண்டுசிறு சுண்டைக்காய்ப் பிரமாணம்தீ
கையாறு வுரட்டியந்தச் சாந்திற்றேய்த்து
யிண்டுபோ காதபடி நிழலிலிட்டு
யிசையமூட வுலர்ந்தபின்பு பேசக்கேளே. (4)

பேச்சென்ன பேய்ச்சுரையின் குடுக்கைதன்னில்
பெருமையுட னடைத்துவிசந் தீண்டினோர்க்கு
ஆச்சென்று ஒருசிறங்கை யிளவெண்ணீரில்
அப்பனே ஒருவுருண்டைக் கரைத்துத்தாக்கு
வாச்சென்ற கடிவாயில் விசமிரங்கி
வயறிரச்ச வுண்டாகிப் பேதிகாணும்
பாச்சென்ற ஆகாரமதுக் குப்பில்லாமற்
பச்சரிசிக் கஞ்சியுண்ண நீற்குந்தானே. (5)

நிற்குமடா வயறனத்தல் மறுநாட்கண்டால்
நீகுடிப்பாய் வெள்ளாட்டின் பாலினமைந்தா
தக்கமிகுந் சகலவிட மிதிலடங்குந்
தாணியில் மாடாடு தனக்குமாகுங்
கற்கவே மந்திரத்தைச் சொல்லக்கேளு
கனிக்துழுன்னே தண்ணீரு மனவுஞ்சேரு
சற்குருவா மண்ணைருப்பு பின்னேகூட்டு
தாணுறுநாந் தெட்டோடாதத் தணியுங்கேளே. (6)

கேளடாச் சதாசிவனுற் பதியில்வாழுங்
கெடியான பூரணத்தைக் கடிவாய்தன்னில்
வேளடா தடவிடவே விசங்களெல்லாம்
வெகுசுருக்கா யிறங்குமடா விரும்பிப்பாரு
தேளடா விசமைவத்திய மெண்ணெப்போலே
சித்தர்கள்தான் சொல்லார்கள் தெளிவிதாகும்
ஆளடா யின்னூலை வெளியிற்போட்டால்
ஆகாது மைந்தாபா ரினைவுசொன்னேனே. (7)

சொன்னதொரு பதினெண்ணாயிரம்பாரு
சலபமாஞ் சுருக்கமிந்த யெட்டும்பாரு
பண்ணுமே பலனாயும் பரிந்துபாரு
பார்த்திட்டாற் கருக்களெல்லாம் வெளியாய்த்தோணும்
னன்னூல்குத் தேனையர்நூ லன்பதுந்தா
னிணையல்லாற் பின்னென்று மிதற்கொவ்வாது
மூன்னூறு மறிந்துசெய்தால் சித்திசங்க
மூனியுனைத்த விசலைவத்தியச் சுருக்கமுற்றே. (8)

சங்கமுனி விஞ்ஞூல் சுருக்கம் மு.

முற்றிற்று.

மதுரை பாத்திரக்கடை, வியாபாரம் க. ரா. ம. கணபதியா பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ் திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

எழுபத்தெட்டாவது:

தன்வந்திரிதிருவாய்மலர்ந்தருளிய

ஞானம்பெ.

கலையடங்கி அறிவறிந்த பெரியோர்பாதந்
கண்ணுடிக் குள்ளிருந்த அசைவின்பாதம்
மலரெடுத்து நிலையறிந்த ரிஷிகள்பாதம்
மதிகடந்த அயன்பரத்தி னருளின்பாதம்
சூலைசாய்ந்த வட்டத்தின் முனையின்பாதம்
குணமூன்று மொத்துநின்ற குருவின்பாதம்
நிலையொடுங்கி அருளுருவர்ந்த பிரமன்பாதம்
நினைறந்தமலர் நிர்வாணி கணேசன்காப்பு. (1)

அருப்பான ரவிமதியின் சத்திவாங்கிச்
சுத்தமுற்ற கல்வத்தி லாட்டிஊட்டி
மருப்பான மூன்றெழுத்தி லுருக்கிச்சாய்க்க
மயங்காதே தெடுங்காயந் தங்கம்போலாம்
கெருப்பான அறைதிரந்து புடத்தைப்போடு
நிலைச்சுதடா பளிங்குபோல் நிறமேயாகும்
நுனிப்பாக அணுவளவு மேலேகொள்ளு
கோனில்லை கமனில்லை அருளிற்சேர்வாம். (2)

அருளான வகையென்ன கருவைக்கேளு
அயன்மாலு மறியாத ஆசேவுள்ளே
பொருளாமொன் றிருக்கிறதுன் னறிவுலே
புரிந்தவகை தெரிந்துரைக்க நாவேயில்லை
இருளன்றி யிருந்தவரே ஞானியாவர்
இந்தவகை யொருவருக்குஞ் சொல்வாரில்லை
மருளன்றி வாழ்ந்திவர்கள் லோகப்பேர்கள்
மயக்கமற்றோர் நிலையில்லின்றுற் சித்திதானே. (3)

சித்திரத்தாற் சிவன்வேறே யிருக்கிறதே
தேகத்தில் ஓடவிட்டாற் சிவன்வேறப்பா
முத்திபெற வேண்டிமுத லெழுத்தைமாட்டு
மோசமில்லை யொவ்வொன்றின் மூனையிற்சேர்க்கும்
சத்தியமாய்ச் சொல்லுகிறே னிந்தநூலைத்
தன்மையுடன் கால்வழியே தேக்கிப்பாரு
வெத்திகொண்டு நிற்குமடா மணிபோலாடி
மேல்வாசல் சேர்க்குமது நிச்சயம்பத்தே. (4)

பத்தியே நீயறிந்து சாபமிட்டாற்
பாழாகும் அண்டரண்டந் தீயாய்வேகும்
முத்தியென்ற கம்பத்தி னடியிற்றாங்கும்
மூனிவொளியப் பேச்சில்லை முழுதுமப்பா
நத்தியே நாசிக்குள் ளுறைந்தடங்கும்
நற்குகைக்குள் மணியாகு மெவர்தான்கண்டோர்
அத்தியே யிப்படித்தான் பார்த்தீரானால்
அழைப்பாரே சித்தரெல்லாங் குகைக்குத்தானே. (5)

குகைதனிலே தவங்கள்செய் திருந்தாயானால்
கோடியுகம் பிர்மத்தோ டிருக்கலாகும்
தகைசபையில் நீயொடுங்கிச் சித்தமாடித்
தன்வந்திரி மகனென்று பேரும்வாங்கித்
குகைதனிலே உன்தேகம் வலுத்துப்போச்சு
தோற்றுத பிர்மத்தின் செயல்தன்னிலே
சகமதிலே சிவயோக மார்க்கப்போக்கைச்
செப்பினேன் இதுவழியே சேரலாமே. (6)

சேரலாம் மூலமென்ற நாடிதொட்டுச்
சித்தரியு முள்ளெழுத்தாற் றெளிந்துவோதி
ஏரலாம் ஊசிக்கண் துவாரமாக
பிறப்பேது பிறப்பேது அடங்கிப்போகும்
மாரலாங் கீழ்மேலும் நடனமாடி
மனக்கண்ணி விருப்பிடந்தான் பொதிகையுச்சி
நேரலாங் குருவினுட உபதேசத்தாற்
சிதம்பரமாம் ரகசியத்தில் ஓடுக்கங்காணே. (7)

காணுவது குருவினுட கருவைக்கேளு
கடையெழுத்துந் தலையெழுத்தும் அரிதுமப்பா
ஊணுவது குருவுக்கு அங்கிபூட்டி
உடலில்நடு மையமடா வாசிவீடு
ஆணுமது பெண்ணுமது ரெண்டுமொன்றுப்
படங்கிநின்ற இடமல்லோ தங்கமாகும்
வீணுமது சொல்லவில்லை யிந்தஞானம்
வேதாந்தக் கொம்புசுழி வெளிஷிட்டேனே. (8)

வெளிஷிட்டு முப்பாழ்சென் றப்பாலேறி
விண்ணான பயிர்செய்து வீசாயனைவத்தால்
ஒளிஷிட்ட ஓமென்ற எழுத்திலேலை
உற்றதுணை யொருவரில்லை உண்மையாகக்
கழிஷிட்ட காலதனில் ஓடுங்குமாகிற்
கண்ணுடிப் பிர்மத்திற் கலந்துபோகும்
சுழிஷிட்ட வெழுத்ததிலை முத்தியேறும்
சொரூபநிலை யிலாதவிடங் குடியதாமே. (9)

குடியிருந்த அந்தரத்தில் ஊமையப்பா
குருவெங்கே பிர்மமெங்கே ஒன்றுமில்லை
தொடிவந்தாற் கொள்ளும்போ தருள்தானெங்கே
தோற்றாத விடந்தனிலே யாருமில்லை
அடியினிலே காத்திருந்தா லருள்வந்தெய்தும்
அப்பவல்லோ அகத்தீசர் மகனென்பார்கள்
முடிவறிந்து சித்தருடன் வாதுபேசி
மூவஞ்சு வரைகடந்து தெரிசித்தார்கள். (10)

தெரிசித்தா லிந்தநூற் பனிரண்டப்பா
தெளிவான ஆறுடனே அஞ்சிற்காணும்
வரிஷித்து வந்தவுட னெழுதஞ்சிந்தும்
வரையடங்கி நின்றவரே மவுனியாவர்
அரிசித்தர் சிவதிருமுதலாய்க் குளிகையிட்டு
அடுக்காகச் சராசரங்கள் சுத்தியாடிப்
பரிசுத்த மானவிடங் தன்னைக்கண்டு
பாழ்மனையிற் குடியிருந்து பருவம்பாரே. (11)

பாரப்பா ரவிமதியின் சித்துச்சொன்னேன்
பரிவான மூன்றெழுத்தின் கருவுஞ்சொன்னேன்
சேரப்பா அட்சரங்கள் தனியாய்ச்சொன்னேன்
தெளிவான உண்மையுட னெடுக்கஞ்சொன்னேன்
காரப்பா ஞானத்தின் காலேச்சொன்னேன்
கைலாசப் பிரமரக சியமுஞ்சொன்னேன்
சாரப்பா கருவியெல்லாம் நீரூய்ப்போகும்
சாரமான ஞானம்பன் னிரண்டுமுற்றே. (12)

தன்வந்திரி ஞானம் முடிந்தது.

மதுரை பாத்திரக்கடை வியாபாரம், ரு. ரா. ம. கணபதியா பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசால் திரம் அச்சிடலானது.



கூடாரன் றுவினை.

எழுபத்திரண்டாவது:

தன்வந்திரி திருவாய்மலர்ந்தருளிய

தன்னைதீதீயம் உ.

திருவாகி வருவாகி யருமாமாகிச்
திக்காகிச் சிக்கறுத்த வல்லுவாகி
அருளாகி யானந்த தெடமாகி
அண்டபிண்டத்தோற்ற நாடகமாகிப்
பொருளாகி யிடைபிங்கலையுமாகிப்
பூரணாதி நிறுத்யாதி பீடமாகிக்
குருவாகி பதினெட்டுக் கரணமாகிக்
குலவுகின்ற பரம்பொருளின் பாதங்காப்பே. (1)

பாதமலர் போற்றிசெய்து தொழுவையக்காணப்
பதிதிகட்கு மிகன்றருளு மருளிதிப்பா
காதலுறி மேலெழுப்பார்த்தாலுநகான்
கரையென்ற முடிவதற்குக் கிடையாதப்பா
பேதமில்லை சடலத்தான் றொணிப்பார்க்கப்
பிரகாச சிற்றண்டம் வெளியாய்த்தோணும்
நீதமுட னிந்தவித மறிந்துகொண்டால்
நின்றசிற் சொரூபமதைத் தெரியலாமே. (2)

ஆமப்பா யிருவிழியின் மத்தியிற்றான்
அப்படியே மூன்குருதனி யடிவாரத்தில்
நேமப்பா யிசன்வீற் றிருக்கும்பீடம்
நிலையறிந்து கொண்டவர்க்கு நன்றுரைத்தோணும்
நாமப்பா கண்டல்லோ விபூதியோடு
நலமான சந்தனமும் பொட்டதாகத்
தாமப்பா குன்குமங்கஸ் தூரியிட்டுத்
தயவுபெறப் பூசிப்ப தறிந்துபாரே. (3)

பாடடா மானிடரின் சடலத்துள்ளே
பண்பான தலமதனைக் குறிப்பாய்க்கண்டு
நேடடாப் பொட்டிட்டுப் பார்க்கவேண்டும்
நிலையுணர்ந்த மேலவர்க்குத் தெரியுமப்பா
ஆடடா தெரிவார்கள் கற்றோர்தானும்
அத்தலத்தின் மகிமைதனை யறிந்துகொள்வார்
சீரடா பிர்மசொரூ பம்நிறைந்து
துலங்குமந்த நிலமதனி லென்றுசொல்லே. (4)

சொல்லவடி நடுவுமுடி வெங்குந்தாளுய்
சுடரிரவி மதியென்ற விரண்டுமாகி
வல்லதொரு காந்தியதாய் நிற்குஞ்சோதி
மாநிலமே லானதுவும் வன்னியாகும்
நல்லருளாந் தலமட்பு வெளியாம்வாய்வு
நற்பெருமை தேவுமண்டடம் இடமும்மண்ணு
ஒல்லென்ற அதிபதிதான் பஞ்சகர்த்தாள்
ஓங்காரச் சடாட்சரம்வாழ் மூலமாமே. (5)

மூலமென்ற ஓங்கார மொன்றேகோணம்
முழுதொடுங்குஞ் சுழியொன்று நடுவிகாரம்
நாலமென்ற இகாரவட்டந் தனிலேவாசி
நன்முகத் தீர்ந்தபின்பு சுவாசமுண்டாய்ச்
சீலமென்ற இடகலைபிங் கலையுமாகிச்
சிறப்பாக வனையம்போற் சுழன்றுபொங்கிக்
கோலமென்ற சுழினையில்ரே சகபூரகமுங்
கும்பகத்தி லமர்ந்துநின்று சுவாசமாச்சே. (6)

வாசமது கும்பகத்தி லொன்றுக்கொன்று
வளமாக வுதவியதா யிருந்துகொண்டு
நேசமுடன் கோடியென்ற வுகாந்தகாலம்
நேர்மையுட னுறுதிபெறச் செய்வாயாகில்
தேசமதி லுன்றனிட்டம்போற் சித்தனுண்டோ
தேசுடைய யோகதிஷ்டை செய்துபாரு
மாசற்ற முத்தர்களிம் முறையேசெய்து
மகத்தான யோகசித்தி பெற்றவாறே. (7)

யோகசித்தி யானதிர சகமும்வன்னி
யுறுதிபுள்ள பூரகமென் றதுவுமப்பு
தாகசித்தி ரேசகத்திற் கும்பித்தேதான்
சரியாகச் சுழன்றுமதி வகாரம்புக்கும்
மாகசித்தி யிவ்வகைதான் கூட்சமாகும்
வாசிநிலை சகலமுந்தா னடங்கிப்போச்சு
தேகசித்தி மாயைதனை யகற்றிநேர்க்குச்
சித்திக்குந் தொழிலெல்லாம் வாய்க்குந்தானே. (8)

தானென்ற நவக்கிரகந் தன்னுலாச்சு
தண்மனத்தா லனுக்கிரகந் தன்னைக்காணு
மானென்ற வனுக்கிரக மல்லிலாவிந்து
வளமான நவக்கிரக மென்றநாதம்
தேனென்ற வனுக்கிரக முடிவதாச்சு
தெவிட்டாத நவக்கிரகம் கற்பமாச்சு
கோனென்ற அனுக்கிரக மிரவுமாச்சு
குணமான நவக்கிரகம் பகல்தானுச்சே. (9)

பகலென்ற வுச்சத்தால் மோட்சமப்பா
பாலகனை யிதிலாச்சு கூட்சந்தானும்
இகலென்ற பரவெளியில் நின்றுகொண்டு
இருதயத்தைச் சுயமாக்கி யிருளைப்போக்கிச்
சகமென்ற மாயைதனை யகற்றிநீயும்
சத்திமுன் றெழுந்ததனைத் தியாணித்தேதான்
சுகமாகப் பூசைசெய்து வாலுதன்னைச்
சுந்தரம்போ லறிந்திடவே சித்தனுச்சே. (10)

சித்தனென்ற பெயர்படைத்தார் முத்தரெல்லாம்
சிறப்புடனே மலைகுகைகள் தனிலிருந்து
கத்தனைத்தான் வணங்கிபிகக் கருணைகூர்ந்து
காசினியி லொருவருக்கு முனாக்காவண்ணம்
புத்திமிகு மென்குருவாம் நந்திதானும்
புகன்றதொரு வல்லாதி லேகியத்தை
வெத்தியுடன் கற்றுணர்ந்தோர் தங்களுக்கு
விளம்புவா யென்றபடி சாற்றுவேனே. (11)

சாற்றுவேன் மெள்ளவுரு விவரஞ்சேம்பு
சாருஞ்சங் குப்பி நெத்துத்தேங்காய்
போற்றுமுழுக்கி லாகெருடன் சிறுங்குரா றும்
பொருந்திடவே குமிழும்வேர் வினாத்திசித்தி
ஆற்றுதலில லாதவெட் பாலியோடு
ஆதிசுக மினகரனை யானவேரும்
நாற்றிசையோர்க் கின்பமுறுஞ் செங்கத்தாரி
கல்லகுண்டு மணிவேம்பார் பலமாய்வாங்கே. (12)

வாங்குநீர் முள்ளிக்குஞ் சிரகந்தான்
மதிபிரப்புங் கிழங்குடனே சித்திமூலம்
தாங்குநற் சிரகமுங் கரப்பான்பட்டை
தயவான பூதவிருட் சத்தின்பட்டை
நிங்கில்லாக் கெதகமுந் துருசுதித்தம்
நிரமாகச் சுத்திசெய்த சூதமோடு
நீங்காம லிலைவகளெல்லாம் பலமதாக
நிருத்திடுவாய் பசுவெல்லம் பிசைபொன்றே. (13)

ஒன்றதுதான் படியெள்ளு மிதனிற்சேர்த்து
உற்றபரங் கிப்பட்டை பலந்தானந்து
குன்றுமஞ் சேங்கொட்டை யைட்பதாரும்
குணமாக வொன்றுகக் கூட்டியேதான்
மன்றுடி மீசர்பதம் வணங்கிப்போற்றி
மதிமயக்க மில்லாம லுரலிற்போட்டு
நன்றாக இருப்புலக்கை யாலிடித்து
நலமெறவே மைபோலே தூக்கிடாயே. (14)

ஆக்கியபின் லேகியத்தை வயணமாக
அன்பாகப் பாண்டத்தில் வைத்துமூடி
போக்கியமாய்ப் பாக்களவு உண்டபோது
யோகிக்காத சூலையதுங் கிரந்திப்புண்கள்
தாக்கியதோர் முடக்குழுதல் கபிப்புழுறல்
தனுர்வாதம் பிரமியதோய் சயகாசங்கள்
தேக்கியதோர் சொரிசிரங்கு புழுக்கள்வைட்டி
தெளிவில்லாக் கூட்டதோய் தீருந்தானே. (15)

வேறு

நடுக நடுக்கிடும் பிதற்பி னற்றலும்
விடுகினைவ்று மிடட்டிடம் விலதுப்பலனை
கடுக தத்திடும் கனைக்கற்ற சோலையும்
முடுமு டுக்கிடும் மூர்க்கமு தாகுமே. (16)

மூர்க்க மான கனவுநி னைவதூடம்
தீர்க்க முற்றுத் தெளிந்து யுகந்திடும்
ஆர்க்கு மிவ்வித லேகிய மாகுமாம்
எர்க்கு மோர்க்கு மிதுவுஞ் சுலபமே. (17)

சுலப மாகவே சொல்லிடும் பத்தியம்
வலு விராது வெகுவித மாகவே
தொலுமி னைறப்படி நீருமண்ணி யாதினன்
பலுக வேகுக பாகமீ தானதே. (18)

தானி தற்குமிம பத்திய நோயிலை
மேனி மிக்கச் சிறுகயி றெக்குபாடம்
ஏனி மோவினை மாமதீல சுருக்கீடு
கோணி டாதிது மூலிக ளாணதே. (19)


மூனி யானது சாத்துகு ணங்களும்
மேனி னுக்கு விசைகருகு னிர்க்கியாம்
பானி னுக்குள்ள மூக்குணம் போலவே
கோலி லுலல்லோ காண்பது நல்லதே. (20)

நல்ல லேகியந் சொல்லினென் யாணிதோ
மெல்ல மெல்ல விருந்துபோ னுண்பரால்
கல்ல கல்லக் கடடமும் போலவாம்
தொல்லை யெல்லாந் தொலைந்து போகுமே. (21)

தண்வந்திரி ஞானசாஸ்யம் உக.

மூற்றிற்று.

சுந்தரபாண்டியம், சாலிமதாரிகதி கோத்திரம் அண்ணுமலைச் சாமிகள் பலர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின் படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



குருமேவ துணை.

எண்பதாவது:

தன்வந்திரி திருவாய்மலர்ந்தருளிய

கலைக்கியானம் நூ.



சுத்தநிராமய சோதிமெய்ஞ்ஞான
ஆத்தனுமன்னையு மாகியவஸ்தாய்
நித்தியானந்த நிராலம்பமாகி
முத்திக்குவித்தாய் முனைத்தென்றண்ணை.

தென்றசொற்படி கூணைந்தன்னையே
நன்றதாகநவின் றிடக்கேள்மிக
ஒன்றதானதோர் வேம்பின்பட்டையும்
வென்றிடச்சத குப்பியுங்கூட்டிடே. (1)

கூட்டிடுந்திருத் தாளிசையோடுற
மாட்டிடும்யிது மூன்றையுமோரிடை
நாட்டிடும்உரலானதிலிட்டுமுன்
காட்டிடும்பல மாகயிடித்திடே. (2)

இடியதாக்கியே கேளிதிலோர்வகை
வடிவதாகவே வோர்படிநீரினில்
கொடியதாக யிடித்தைதப்போட்டிடு
படியதாகவே சுண்டவெரித்திடே. (3)

எரித்தநீரினி லேவதுசீரகம்
பிரித்துப்பத்துப் பலமதுசேர்மையாய்க்
குறித்துத்தேய்த்துக் குலாவிக்குலாவியே
விரித்தசொற்படி யாகவுலர்த்திடே. (4)

வேறு.

உலர்த்தியபின் சம்பழச்சார் தனிலேயோர்நாள்
ஒப்புரவாய் மூசுமுசுக்கை தனிலேயோர்நாள்
பெலத்திடப்பொன் னுங்காணிச் சாரிலோர்நாள்
பேசரிய கொடுப்பைச்சார் தன்னிலோர்நாள்
நிலைத்திடவே யிவ்விதமாய்ச் செய்தபின்பு
நிதானிக்கச் சூரண்ம தாக்கியேதான்
தலத்தினிலே வுள்ளபிணி யாளருக்குத்
தயவாகக் கொடுப்பதற்குத் திடஞ்சொல்வேனே. (5)

திடமான சூரணத்திற் பஞ்சதாரை
சிறக்கவே மூன்றுக்கு வொன்றுசேர்த்து
தடமான பித்தமுதல் வாய்வுக்கெல்லாம்
தயங்காமல் வெருகடியி னளவாய்க்கொள்ள
இடமான தலைசுழற்றல் கிறுகிறுப்பும்
இசையாத மயக்கமொடு வாந்திகாந்தல்
படபடத்த தியக்கமுதற் பித்தவாய்வும்
பகராமல் நீங்கிவிடும் பாருபாரே. (7)

பாரென்ற சொல்லதனை நம்பியேதான்
பண்புடனே செய்தவர்க்குப் பலிதமாகும்
சாரென்ற மூலிகையின் சமர்த்துமெத்த
சாற்றுதற்கு யிப்புவியிற் சலிகையாகும்
நாரென்ற நாராப்பா நடக்கைகண்டு
நாட்டிலுல் ரோகமெல்லாம் நடுக்கமாகும்
தேரென்ற வயித்தியத்திற் சொன்னேன் சொன்னேன்
தெவிட்டாத சூரணத்தைக் காணுகாணே. (8)

மணிபூரகம்.

காணுநீ தசையிரத்தங் கடுமூளை வுதிரம் விந்து
தோணுநீ அஞ்சு மல்லாற் றுலங்கிய பொருள்தா னப்பா
வேணுநீ யிதற்குட் டானும் விரைந்துநீ வாசி பூட்டில்
ஆணுநீ யறிவைக் கொண்டு அம்மம்மா வெளியாய்ப் போமே ()

போமிந்த யிடத்தின் பேரு பூரக மீடென் பார்கள்
ஆமிந்தத் தலமே லெட்டு அங்குலங் கடந்தா யாஞல்
சேமிந்தத் திரிகோ ணந்தான் சிறந்திதழ் பனிரெண் டப்பா
வாமிந்த வடலைவைத் தொட்டு வழங்கிய அளவு மட்டே. (10)

மாட்டான னதிமே தாவுந வழுக்கிய நிகாரம் நிற்கும்
வெட்டான னிறுத்தான் றெய்ப்பு மிவாளிகோடி பாலு வாகும்
மிருட்டான வநுபவ் காட்டுந் சிவலோடி சந்தி நிற்பாள்
அட்டான புனிப்புச் சோம்பல் அடவான பயமுங் தூங்கே. (11)

தூங்கலே யொழுப்பி மெள்ளச் சுகமாகப் பெண்ணினைச் சேர்க்கும்
ஆங்கலே அருந்தி யீரான் வுபகந்திய தொழிலைப் பாரு
வாங்கலே சிகார மீடி வாசனை கொண்டு ஜாலம்
ஓங்கலே பனிரண்ட டோகா துந்பனங் கேளுகேளே. (12)

விசுத்தி

கேளுநீ விசுத்தி யென்ற கெடியான தலத்தைப் பாரு
வாளுநீ சோகா மோறும் வகாரங்காங் கதிபவுண்டி
வேளுநீ யிருந்தா னப்பா வினங்கிற்று ஈரெட் டாக
ஆளுநீ அகாரந் தொட்டி ஆகாகா வரைக்கும் வையே. (13)

வைத்திட்ட நிறந்தான் கேளுந வயங்கிற்று கறுப்பே யாகக்
கைத்திட்ட மகேச ரேறு கன்னியும் யேகி நிற்பாள்
ஒய்த்திட்ட பரிசுந் சொல்வார் உத்தமத் தொழிலைக் கேளுந
மைத்திட்ட கடந்தல் வோட்டல் மயங்கிய கடந்தல் காணை. ()

காணைநு நிறுத்த லொதிக் கடங்காம லிருந்த வஞ்சு
கோணைநு தொழில நாகச் சொல்லுமந் தனைகளைக் கேளுந
பூணைநு புசிக்க லாரம் பொங்கிய கோபஞ் சண்டை
ஆணைநு சமயந் தார்க வாசாரங் காரம் கேளே. (15)

கேளுநீ பொசிப்பைக் கண்டாற் கெடியாகத் திறக்கும் வாயை
வாழுநீ ருசிக ளாறும் வாசனைக் கப்பா லில்லை
தாளுநீ பரந்தா னென்ற நனிக்குதோர் பிடை மையா
லேளுநீ படிதா னென்று விளம்புவார் பெரியோர் பாரே. (16)

பெரியோர்கள் சொல்லைக் கேட்டேடன் பிரட்டினை இனையை வாங்கி
அரியோர்கள் காலைற் றுள்ளி அழைத்தார் பாரு பாரு
தெரியோர்க ளாரு லம்மே சிக்கென அங்கென் றாளை
பரியோர்கள் காலுஞ் சேர்ந்து டாளிச்சனைத் தேடினும் பாரே.

தோணிய தனத்தின் மேலே சூழ்விரல் பதிறை றோற
ஆணியாம் அண்டம் போலே அகாரங்காண் நடுவே நிற்கும்
வேணியே வட்ட வீடு விளங்கிய யிதழ்தான் ரெண்டு
பேணிய அளவா வென்று பெலபொரு ளிருந்தவாறே. (18)

வாறதின் நிறத்தைக் சேரு மகத்தான படிக வர்ணம்
கூறிதிற் சதாசி வன்ரூன் கொள்கிய மணித்தா யோடு
தேறிலாச் சத்தி யப்பா செய்கின்ற தொழிலப்பாரு
வேறிது காமக் ரோதட் விளங்கிய லோப மாமே. (19)

ஆமினி மோகத் தோடு அடங்கிய மகத்தோ டஞ்சும்
ஓமினி யைந்துஞ் செய்வார் வுத்தமர் திக்கிற் கேரு
காமினி பிரமன் மாலுவ் கடுஞ்சிவமயேச ரைதும்
சாமினி காப்பா ராதி சதாசிவந் தளவா யாமே. (20)

தளவாயைக் கண்டா யாரூற் சச்சிதா னந்தங் காண்பாய்
தளவாயைக் கண்டா யாரூற் ரூயொடு சேர்ப்பார் பாரு
தளவாயைக் கண்டா யாரூற் சமூசயந் தீருந் தீரும்
தளவாயோ டேத்த கள்ளன் சாங்கமா யுறத்துப் பாரே. (21)

உறத்துநீ வாசி வைத்து ஆதிட விங்கைப் பாரு
நிறைத்துநீ வருண மஞ்சு நிலையாகத் தோணுந் தோணும்
இறைத்துநீ போகா வாசி யிழுத்தங்கே நாலைக் கட்டு
மறைத்துநீ வைத்தா லுந்தான் மறையாது மணித்தாய் காணே.

தாய்காணு மட்டு மப்பா சமூசய மாயை யாகும்
ஓய்காணத் தொழில்க ளோந்தும் ஓமென்ரூல் கூணைத்தில் லாகும்
காய்காணும் பிஞ்சுங் காணுங் கவனமும் விண்ணைத் தாண்டும்
தோய்காணுந் தமரிற் புக்குஞ் சூட்சதனை யுணைக்கக் கேளே. ()

கேளுநீ மணியைத் தூண்டிக் கெடிவீர மேட்டு மேலே
ஆளுநீ குருப தந்தான் அமமம்மா வெளியாய்த்தோணும்
வேளுநீ அதற்குள் நின்று வீசிடு வாசி கொண்டு
வாளுநீ கீழே நிறக வரிலைசபுந் தோணுமம்பாரே. (24)

தோணிதி மேலே யப்பா சுகமாகப் பதிலென் றேதான்
ஆணிடு பாரு ஆயிளி மணியோ டிடட்டுமே.

வேணிடு பனைய தோன்று விளங்கிய பரம தொன்று
காணிடு வதன்றிற் சாபங் காரணங் கண்டி லேனே. (25)

கண்டிடா மார்க்க மெல்லாங் கண்டிட வாசி நோக்கே
ஏணையுலா பிடாரிக் குள்ளே வுற்றுப்பார் காணுங் காணும்
மண்டிலா வருக தத்தில் வைத்துப்பார் தோணுந் தோணும்
தண்டுலா மூல மென்று தனிப்பது யொன்றுங் காணே. (29)

காணுமே மதிக்கு மேலே கலந்துபார் தினைசா தத்தைப்
பூணுமே நெஞ்சிற் பாரு புகழ்ரவி பனிரண்டப்பா
தோணுமே மூலம் பாரு சுடர்கோடி தீபுங் காற்றும்
ஆணுமே மூணும் பார்த்து அந்தந்த யிடத்தைக் கேளே. (27)

சேரநீ மூலத் தீழே கெடியான நிராதா ரந்தான்
வாருநீ மூல மப்பா வழுங்கிய துரியா தீதம்
வேருநீ சுவாதிஷ் டானம் விளங்கிய புனித நாதம்
ஆருநீ பூர கத்தை அழுத்தியே வறிந்து கொள்ளே. (28)

அறிந்துகொள் ளணுக தத்தை அப்பப்பா களித்த வீடு
கரிந்துகொள் விசுதி வீடு கனவெல்லாங் காணுங்காணும்
தெரிந்துகொள் மணித்தாய் வீட்டிற் சாக்கிரம் மெத்த வாகும்
பிரிந்துகொள துரியா தீதம் போகுரு பதந்தான் பாரே. (29)

பதத்தின்மேல் நிராதா ரந்தான் பார்க்கின்ற வல்லோர்க் கப்பா
திதத்தின்மேல் மூக்கு பின்பு இருதய முதலைப் பாரு
மதத்தினமேற் பார்த்தா யாலை வழியெல்லாந் தெரிந்துபோகும்
குதத்தின்மேற் குய்யங் கண்டு குலையாத சுணங்கர் கேளே. (30)

சுணங்கரே வாசி போலுற் சூட்டிய வாசி பொய்பொய்
சுணங்கரே பூசை போலுற் சூட்டின தனைதான் பொய்பொய்
சுணங்கரே ஞானம் போலுற் றாக்காது குளிகை பொய்
சுணங்கரே லையல் நீக்கிச் சூட்சமாய் மூலம் பாரே. (31)

மூலத்தைத் தொட்டுச் சொன்னேன் முடியொக்கும் வேத மப்பா
கோலத்தை விட்டுப் போட்டுக் குறிகாண வெல்லாஞ் சித்தி
ஜாலத்தை விட்டுப் போட்டுச் சச்சிதா னந்தங் கண்டு
சீலத்தை யுறவு தாக்கிச் செழித்திடப் பொறிசல் வீரே. ()

தன்வந்திரிகலைக்கியானம் ஈ உ

முற்றிற்று.

உ

குருதெய்வதுணை.

எண்பத்தேழாவது :

தண்டலத்திரி திருவாய்மலர்ந்தருளிய

நேரிசை வெண்பா,

வெண்பா.

ஓரெழுத்தைக் கொண்டே உசார மகாரமதாய்ப்
பேரெழுத்தைக் கொண்டே பிறைசூடிச்—சீரெழுத்தி
லுந்திக் கமலத் துதிக்கு மயன்மா லுந்
திந்திரன் வேலூர் சிவம். (1)

மாய்கிறீர் வீணை மனத்தி னிருக்கின்ற
தேய்வை யறிந்துடனே சேராமல்—வாயுலைத்தான்
கும்பித் திருந்தாற் குடலு முயிருமுடல்
வெம்பி யுடைந்தே விடும். (2)

பூசை யிதுவாய் புலம்பித் திரியாதே
பூசை கடந்த பொருளறியீர்—பூசைதா
னுந்தியோ அந்தமோ வுந்தெழுந் தென்பதுவோ
தீதில்லாச் சற்குருவாஞ் செப்பு. (3)

கவ்வினிடம் வாய்வுழுதற் காலாக் கினியெழுப்பி
அவ்வுதனை யுவ்வாக்க மாட்டாமல்—தெய்வ
மொருவனே யென்பர்மற் றொன்றுநூ றுகித்
திரிவரோ வீணை தினம். (4)

புற்றின்று பார்குடித்துப் போற்றிச் சருகுதின்று
சற்குணையி லேயிருந்து கண்டீரோ—சற்குருவைப்
போற்றியிரு மாண்டவிடம் போதிப்பா னின்பிறவி
மாற்றுவா னின்பமுடன் வந்து. (5)

பாலைக் குடித்தாலென் பற்களிகள் தின்றாலென்
நீலைச் சுழிமுனையைச் சேர்ந்தாலென்—மூலமதில்
ஒப்பனையாய் நின்றபொருள் உண்மையறி யாமூடர்
எப்படித்தா னீடேறு வீர். (6)

தன்வந்திரி ஞானம் கூ.

மூற்றிற்று

மதுரை பாத்திரக்கடை வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

எண்பத்திரண்டாவது.

தன்வந்திரி திருவாய்மலர்ந்தருளிய

கண்மணியே குன்றிப்போ லுண்டைசெய்யே. (127)

செய்பவே நிழல்தனில் உலர்த்திக் கொண்டு
செயலான பரணிதன் னலைடுத் துக்கொள்ளு
இப்பவே யிருவருண்ணை டிருதோ துண்டாவ்
ஒக்கைதனிற் சூலைபதி னெட்டும்போகும்
வைபவே கிரந்திபேழ் கெதிரிகட்டோடும்
வாமான புன்புனைகள் சிலைகளெல்லாம்
மைபவே மடிந்துவிடும் வியாதியெல்லாம்
மகத்தான நோயெல்லாம் மடிந்துபோமே. (128)

போமப்பா கடும்பகந்திபட் ரணைத்துக்கெல்லாம்
பொல்லாத வாகுசத்துங் கிச்சாபத்யம்
ஓமப்பா சயமொடுமக் தாரகாசம்
அப்பனே குஷ்டமுடன் பெருவியாதி
காமப்பா சூரம்பிளறி வாதமெல்லாம்
கலைமான சோகமிடோ வழிகாணுமல்
வாமப்பா மாந்தினையைப் பதனம்பண்ணு
வளமான மருந்திதுதான் வண்மைகாணே. (129)

காணப்பா வயித்தியற்கு யிரக்கம்வேணும்
கசடான பொய்யுடனே சூதாகாது
வாணப்பா போசமது அதர்மமாகா
வளமான் கண்ணழுடன் திருட்டுமாகா
மாணப்பா பெண்மாயை பொருளிணைசை
மயக்கமொரு யிதுவெல்லா மாகாதப்பா
ஆணப்பா ஒருவர்போ லபாண்டமாகா
அன்பாக யிதுவெல்லா மாகாதென்னே. (130)

ஆகாது வயித்தியர்க்கு யிதுவெல்லாந்தான்
ஆசையற்ற வயித்தியர்க்கு மனமோடாது
ஆகாது யிவ்வித்தமா யிருந்தோருக்கு
அழிப்பில்லை யொருநாளுந் தாழ்வுமில்லை
காகாது சிதம்பரத்தின் காட்சியெய்தும்
நலமான சிவயோக வாழ்க்கையெய்தும்
நீங்காது நிலைவிட்டு நிலைபேராது
நிலையாத பூரியட்டம் நிலைத்துப்போமே. (131)

போமப்பா பிற்றூலைத் தேடிவாங்கு
பூதலத்திற் கிட்டாது புகழோதகோடி
காமப்பா பிற்றூலார் கொடுக்கப்போனார்
கலமான பிற்றூலால் கண்மைபெயற்றும்
காமப்பா கசடருக்கு பிற்றூல்கிட்டா
கண்மணியே சிவயோகிக் கெய்துபம்பாரு
ஆமப்பா பிற்றூல் கொடுக்கமாட்டார்
ஆச்சரியங் கிடைத்தவர்க்கு மோகூமாமே. (132)

சிவசுலோணம்.

ஆமேதான் யேகசிவ சுண்ணைஞ்சொல்வேன்
ஆச்சரியம் ஆறிவார் சுண்ணைமார்க்கம்
காமேதான் கம்பியுப்பு கந்தனுப்பு
கண்மணியே கல்லுப்பு பிண்டமுப்பு
காமேதான் சொல்லுகிறேரும் சிவவாக்யத்தால்
கலமான வாக்யமடா சிவத்தின்கூறு
வாமேதான் வகைதனக்கோர் பலமும்வாங்கி
வளமான கல்வத்திற் போட்டுக்கேளே. (133)

கேளேதான் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
கெடியான பனிநீரை விட்டுஆட்டு
வாளேதான் விந்தாலே சாமமாட்டு
வளமான அண்டநீர் தன்னலாட்டு
மாளேதான் நாட்டியிதை வழித்துக்கொண்டு
மைந்தனே வில்லையதாய்ச் செய்துநீயும்
நாளேதான் ரவியுலத்தி லெடுத்துமைந்தா
கலமான விந்தாலே சீலைசெய்யே. (134)

செய்யவே மண்ணுலே சீலைசெய்து
செயம்பெறவே கெசபுடத்திற் போடுபோது
ஐயவே புடம்போட்டு லெடுத்துக்கொண்டு
அப்பனே சீலையைத்தான் கட்டிப்பாரு
கையவே காந்தியது லென்னசொல்வேன்
கலமான கடுங்காரச் சுண்ணமாச்சு
மையவே சுண்ணமிது மகத்தாஞ்சுண்ணம்
மனைடையரவர் காணுங்க மட்டிபாரே. (135)

மட்டியென்ற சுண்ணமதிற் கோடாகோடி
மகத்துவங்கள் காணுமடா மருவிப்பாரு
அட்டியென்ற ஞானமுடன் யோகமார்க்கம்
அப்பனே கிரிகையுடன் வாதமாகும்
நட்டியென்ற நால்துறையு மாடுஞ்சுண்ணம்
நலமான வழிக்கெல்லா மிச்சுண்ணாந்தான்
கட்டியென்ற கனகசபை யிதிலேதோற்றும்
கயிலாச முத்தியெய்துங் கண்டுகொள்ளே. (136)

கொள்ளவே யிந்நூலைக் காட்டவேண்டாம்
குகையில்வைத்துப் பூசைசெய்து குருவாயென்னு
ளள்ளவே யிந்நூலார் கொடுக்கபோறார்
அசடருக்குக் கிட்டாது யிந்நூலப்பா
மள்ளவே மடையருக்குக் கிட்டாதிந்நூல்
மகத்தான புத்தியுள்ள யோகிக்கெய்தும்
வள்ளவே நந்தியவர் யெனக்குச்சொன்னார்
வளமாகக் கேட்டுத்தண் டகஞ்சொன்னேனே. (137)

சொன்னனடா நூற்றுநாற் பதுக்குள்ளைமந்தா
சொற்பெரிய சூக்குமெல்லாஞ் சூட்டினென்பார்
வன்னனடா வகையாக யிந்நூல்சொன்னேன்
வளமான சூக்குமெண் டகமாமிந்நூல்
கன்னனடா நான்சொன்ன நூலுக்கெல்லாம்
கருக்கடையாங் கலிக்யான தண்டக்கந்தான்
மன்னனடா யிந்நூலிற் பூட்டைச்சொன்னேன்
மைந்தனே திறக்குநிற விதஞ்சொன்னேனே. (138)

சொன்னேனே மிந்நூல்போ லாருஞ்சொல்லார்
சொற்பெரிய கடல்நூலென் பதையும்பாரு
வன்னேனே வழிகளது நன்றுபத்தோற்றும்
வகையான நூலதுதான் வண்மைபாரு
மன்னேனே யிந்நூலைப் பார்த்தோருக்கு
மகத்தான குருடருக்கு வெளிச்சம்போலாம்
அன்னேனே தண்டகத்தை அரையில்வைத்து
அனுதினமு மடிபணிந்தே னன்பாய்முத்தே. (139)

தன்வந்திரி தண்டகம் ஈசம்.

முற்றிற்று.

குருவேதுணை.

எண்பத்திநான்காவது:

கோதக்கர் திருவாய்மலர்ந்தருளிய

பிர்மஞான தரிசனம் ஏன.

ஐம்பொன்மலர் மிசைநடனக் காட்சியாகி
அண்டபுவ னதாரஞ் ஜீவனாகி
செம்மணிபோற் றிரண்டுலகுந் தீபமாகிச்
சித்தரியும் பேரரியு மிரண்டுமாகி
கம்பவொளி வாகிநின்ற மோனமாகிக்
கண்வாக்கு மனதினிற்கு மெட்டாதாகி
உம்பர்பணிந் தேத்றுகின்ற சோலரூபமாகி
யுலவுகின்ற பரம்பொருளின் பாதங்காப்பே. (1)

பேராம்பிர் மானந்த மடைந்தோன்சித்தன்
பிர்மவுப்பைக் கண்டவனே தவசிரேஷ்டன்
கூரான வாசிமறித் தவனேசித்தன்
குறிகண்டு மாயைவென் றவனேமுத்தன்
பூராயந் தெரிந்தவனே கிரியைபெற்றோன்
பூவுலகில் வசித்தவனே சரியைமார்க்கன்
நேரான தீட்சைபெற்றோன் சிவமுத்தன்
நிலைசிவயோ கம்புரிந்தோன் ஞானியாமே. (2)

யோகபிரு திவிராலு ரெண்டுமாகும்
ஓடுங்கிநின்ற யிடபிரண்டும் பூமியாகும்
ஏகமல்லோ வாதிசத்தி சிவமுமாகும்
இயல்பான பூமியதும் வாயுவாகும்
தாகமென்ற வாயுவல்லோ விருகாலண்டஞ்
சதிராக வதன்மீது பிரமனண்டம்
தேகமதற் குள்பிரமா சனத்திலப்பாத்
திரமாகப் பிரமனுமவிற் றிருப்பான்டாரே. (3)

பாரோனீ சதிர்முகவன் சிருஷ்டிகாவுப்
பரிவான வாசல்மேற் சுழியின்கீழே
நேரோதா னவ்வெண்ட வகையுமாகும்
நெடியதொரு முயலவனென்ற பிரமன்முனும்
கூரோதான் வேள்வியதை குயத்தியாகும்
குறிப்பான சிருஷ்டிப்பால் வாணியாகும்
ஓரோரின் னைவரிருவர் சேர்ந்துகொண்டு
நிறப்பாக வுலகத்தை சிருஷ்டித்தாரே. (4)

சிருஷ்டித்த பிரமனுக்கு அண்ணந்தன்னை
சிவதலங்க டோறும்வா கனமாய்ச்செய்தார்
குருதிகின்ற பிரமனுக்குப் பிழைந்தாலுங்
கருவாழுக் கோணைநாற் கோணமாகும்
திருவென்ற சிகாரமொடு சகாரம்போட்டுச்
சிறப்பாக மம்மென்று சுத்திநல்ல
குருவான ஈந்திதனைத் தெரிசித்தேதான்
குணமாகச் சிவாயவென்று மகாரம்போடே. (5)

போடப்பா உகாரமிட்டு வூதும்போது
புகழ்பெரிய பிரமனண்டங் கண்ணிற்றோன்றும்
நாடப்பா வுன்னமது பிரமன்றன்னை
நன்றாகச் சுமந்ததென்ன வுகாரத்தாலே
கூடப்பா சலங்கலந்த பாலையன்னங்
குறிப்பாக வெவ்வேறாய்ப் பிரித்துவைக்கும்
தேடப்பா பிர்மாவின் லோகந்தன்னிற்
றிடமான தேவதைகள் மூப்படதாமே. (6)

மூப்பதுவா மதன்மேலா லங்குலந்தான்
மூன்னதுனுள் ளேயிருந்து சுத்தியாகும்
செப்பமுள்ள பிர்மாவ்தா பிதமேயாகும்
திறமாக வெட்டிருபோ சுணைவில்தாரம்
தப்பாமற் கதிருதிக்கு மிடமேயாகும்
தயவாகப் பண்பொன்றிப் பாரின்மீது
அப்பனே நீகேளா திந்தவென்றும்
அடைவான பரப்பின்கீ ழிருகால்பாதே. (7)

பார்க்கனைவங் கோணமைந் திதழுமாகும்
பரிவாக வதனுடலே முக்கோணந்தான்
கோர்மையுடன் வம்மென்ற வெழுத்துமாகும்
நிர்ணயமா யைந்துமுன் றெட்டுமாகும்
சேர்க்கவே யெட்டிதழு மட்டசத்தி
நிரமான பிருதிவியு மப்புரென்றிங்
கோர்வையா மிந்தெடுகந் தன்னிலேதான்
குறிப்புடனே கம்பமிரண் டொன்றுரைத்தானே. (8)

தானென்ற வுருவமாங் கம்பந்தானுந்
தலமதிலே யஞ்சுருவ தானவாணி
தேனென்ற வாணுருவி பாய்ந்துநிற்குந்
செம்மையுடன் காணுத சாகாக்காலும்
வானென்ற சத்திசிவம் நின்றகால்தான்
வளம்பொருந்துஞ் சத்திகால் கீழேகாட்டி
கோனென்ற சிவத்தின்கால் மேலேகாட்டிக்
குணமாகக் கண்டதொரு மார்க்கங்தானே. (9)

மார்க்கமப்பா மாபலித்துக் காட்டியேதான்
மைந்தனே மகாரத்தால் யுழிதெரிந்தேன்
ஏர்க்கையுள்ள குண்டலிதா னிருக்குந்தானம்
இயலான பிர்மாவும் விட்டிலுந்தான்
பார்க்கருத் திரண்மகேஸ் வரனைத்தானும்
பரிவாக நாற்காலாய் நிறுத்திக்கொண்டு
சேர்க்கையாய்க் கீழ்மேலுஞ் சதாசிவத்தைச்
சிறப்பான பலகையாய் நாட்டிக்கொண்டே. (10)

நாட்டியே யீஸ்பரியுந் தனித்திருந்து
நன்மைபெற சிருஷ்டிப்பா ளண்டகந்தன்னை
ஆட்டியே யுகமதுதான் முடிந்தகாலம்
அப்பனே பரமசக்தி யழியாள்பாரு
நாட்டிகமாய்ச் சக்திக்கு ளொளாமடங்கும்
தன்மையுள்ள வல்லசக்தி தரிக்கும்வீடு
மூடடியம்தார் குண்டலித்தாய் வாசஞ்செய்யும்
மூலமதை யறிந்துநீ குருவைவக்காணே. (11)

குருகண்டு கால்பிடித் தேறும்போது
குபீரென்று தள்ளுமடா வேகத்தாலே
திருகண்டு வாயுவுக்கு மேலதாகத்
திகழொளியு மெத்தவடா சப்தமேகம்
இருட்கொண்டு மழைபொழியு மிருட்டுங்கம்மும்
இயற்கைதனை யறியாமல் மாண்டார்கோடி
அருட்கொண்டு மதைக்கடந் தப்பாற்சென்றால்
அப்படனே வொளிவீசுங் கண்கொள்ளாதே. (12)

கொள்ளாத சோதிதனைக் கண்டுகொண்டால்
குவலயத்தி லுனக்கீடு வுண்டோவப்பா
தள்ளாதே சித்தரெல்லா மகிழ்ந்துவுன்னைத்
தானெடுத்து முத்தமது கொடுப்பாரப்பா
விள்ளாதே யொருவருக்கும் வெளிவிடாதே
விந்தைபுள்ள யெனதுநூல் நூற்றியைந்தில்
கள்ளமன தள்ளவணைச் சங்கரிக்கக்
கருச்சொல்லீ யிருக்கிறேன் கருத்தாய்ப்பாரே. (13)

பாரேநீ யென்னால்கா ணநூற்றன்னைப்
பரிவான கலைக்கியான மென்றுர்சித்தர்
நேரேதா னைதத்திரட்டி யிந்நூலில
நீயறியச் சொல்லினைவத்தேன் மைந்தாவின்னம்
கூரேதா வில்லாத நூல்கடன்னைக்
குறிப்பாகப் பாராய விந்நூல்பாரு
வேறேநா லொருவருக்கு முரைத்திடாமல்
வேண்டுமுன் றனக்காகச் சொல்லினேனே. (14)

சொல்லுகிறேன் சதுரகிரி தன்னிலப்பாச்
சுகமான வாற்றோர மென்குகைக்குள்
வல்லசித்த ரனந்தம்பே ராகக்கூடி
வாழ்ந்திருப்ப ரதனருகே குண்டாதன்னில்
கல்லதொரு கஞ்சாவை நான்கசக்கி
கபம்பெறவே யவர்களுக்குக் கொடுத்தகாலே
எல்லவரும் பயன்பெற்றார் குகையிற்றங்கி
இயற்றினேன் கயிலங்க ளனேகந்தானே. (15

தானென்ற தயிலவர்க்க மனந்தமாகச்
சமைத்தெதாரு சுவர்னங்க ளனந்தங்கோடி
நானென்ற வாதமுறை யமைத்துசெய்த
நலமாக ஓவ்வொருவர் தனக்குமீய்ந்தேன்
வேனென்ற சுண்ணத்தைதக் குகைக்குள்வைத்தேன்
வித்தைதமிகுங் குருவறிந்தோர் தனக்கேகிட்டும்
வானென்ற மடையருக்குத் தோணுதப்பா
மறைப்பான மைதன்னுல் மறைத்திட்டேனே. (16)

மறைத்திட்டே னென்குகையி லனேகசித்தை
மைந்தனே வுன்றனக்காய்ச் சொல்லிவைத்தேன்
துறையதனைக் கண்டுநீ யெதிர்த்துக்கொள்ளு
சொல்லாதே யொருவருக்குந் தோசந்தோசம்
முறையாக விதைபறிந்து நடந்தாயாலுல்
முனிவர்களுநுந் சித்தர்களுநும் புகழுவார்கள்
நிறையாகத் தெரிந்துகொள் மைந்தாநீயும்
நீடூழி காலம்வரை வாழ்குவாயே. (17)

கோரக்கர், பிர்ம ஞானதெரிசனம் 1ன.

முற்றிற்று.

1697/2

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த மகம்மது சாயபுபுரம் திருவேங்க
டத்தேவர் அவர்கள் குமாரர் போத்துலிங்கத்தேவர் அவர்களிடமிரு
ந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி. இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருவே துணை.

எண்பத்தைந்தாவது:

கோரக்கர் திருவாய்மலர்ந்தருளிய

கற்ப சூஸ்திரம் 85.

கோரக்கர் மூலி குருவி னுபதேசம்
கேரொக்கக் கொண்டு நிலையறி வாரில்லை
கேரொக்கக் கொண்டு நிலையறி வாளர்க்குச்
சிரொத்துப் பாயும் சிவபதந்தானே. (1)

சீர்பெருங் கோரக்கர் சிறந்தநல் மூலிகை
னர்பெருந் தம்பனம் யெழில்சேர் வசீகரம்
சார்பெரு ஞானம் சகல கலைதரும்
நேர்பதிங் கற்ப நிலைமை யியும்புவாம். (2)

நிலைமை யியும்ப நெறியவேர்க் கொம்பு
கலைமுறு திப்பிலி கல்ல மிளகுடன்
சூலஞ்சேர் நிராம்பு கூட்டிசா நிக்காய்
கலம்புகழ் பத்திரி சடாமாஞ்சி நெல்லியே. (3)

நெல்லி மதுரம் நிசமுள்ள யேலமும்
மல்லிகற் சீரகம் வங்க மதுநிறை
கல்ல அபின்சிறு நாகங் கசகசா
மெல்லிய தானிசை பிக்கான மூலியே. (4)

பிக்கான ஓமம் மேவுவா லுழுலைவத்
தக்க மிளகது சார்ந்த அரத்தையும்
அக்கிராக் காரமும் ஆனகற் கோஷ்டமும்
நக்க வகைகக்கலா மோர்நிறை சேருமே. (5)

சேரும் வகையதிற் சிறந்த அபின்நிறை
சாரும் மருந்தெலாந் தனித்தனிப் பாகமாய்

வீரருங் கெடாமல் வெதுப்பிப் பொடிசெய்து
பாரப்புகழ் நீறுபோற் பதமாய் வடிகொளே. (6)

வடிகொண்ட சூரணம் வகையாய்ச் சமைந்தபின்
படிகொண்ட கோரக்கர் பகருநல் மூலிகை
நெடியவன் மேனிபோல் நிலவாய் நவபுடம்
கடிய பதமெனைக் கருதிநீ செய்திடே. (7)

செய்தநற் சூரணஞ் சேர்ந்த பிடைதனிலை
உய்தமாய் நெல்லிடம் உகந்துடன் சார்ந்து
தூய்மையல் வாசிலைபத் துவக்கியுண் ணுக்கிடில்
ஐயன் குருபரன் அருளினாற் கொண்டிடே. (8)

கொண்டிடு சூரணங் கூறும் பணவிடை
உண்டிடு மந்தி யுதயாதி தன்னிலும்
மண்டிய வாதமும் வளர்ந்திடும் பித்தமும்
கண்டித்த ஐயமுங் கடவாது நிற்குமே. (9)

நிற்குமே விந்துவும் நிகரில்மன் மதன்போல்
பொற்கொடி மாரெலாம் புகழ்ந்து விரும்புவார்
தக்க வசீகரம் சகல அறிவுடன்
மிக்க தவம்சிவம் மேவும் இனைமையே. (10)

இனைமைய தாகும் இயல்சடம் பித்தமும்
வளைமையாஞ் சீனிவாதம் பசீனவெல்லம்
உளமகிழ் தேனி லுற்றசி லேற்பனம்
தளமது செய்திடிற் சார்ந்திடுங் கற்பமே. (11)

சார்ந்திடுங் கற்பந் தனித்து அருந்திடிற்
போர்ந்திடும் வல்பிணி பெண்கள்நல் லாருடன்
சேர்ந்திடி லாவின் செப்பால் பசீனவெலம்
கோர்ந்து கொதித்தபின் நிசமாக ஊற்றிடே. (12)

ஆறிய பருவத் தளவாய்ப் பணவிடை
கூறிய கற்பங் கூட்டி யிருநிறை
மீறிய வண்ணம் விரும்பி யருந்திடிற்
சீறிய லேகியம் செலுத்து மனந்தமே. (18)

அனைந்த விதந்தரும் ஆனைந்த கற்பம்
டனைந்தனி லன்பாய் வளர்த்து மதின்முறை
தினைந்தொறும் தூசை பிரமிக்குச் செப்திடில்
தனைந்தரு செல்வமுஞ் சகலமுஞ் சித்தியே. (14)

சகலமுஞ் சித்தியாந் தரணியி லொருமுறை
புகலும் வகைகேள் பூரண லேகியம்
பகரும் மருந்தெலாம் பதிவகைக் கஞ்சு
நிகருங் கழஞ்சதாய் நிறுத்துரீ கூட்டிடே. (15)

கூட்டு மருந்தெ லாங் குணமாய்ப் பொடிசெய்
தீட்டுங் கற்பஞ் சிறந்த நிறையிடை
காட்டுறை தூதளை கருதிலா மிச்சுவேர்
நாட்டுறை கூவிளம் நவிலிரு மூவியே. (16)

நவிலு மமுக்கிரா நறுமணஞ் சந்தனம்
புவியி னறுகுவேர் புகழ்பெரு சீந்தியும்
தவந்தரு மூவினை தனித்தேதார் பலமதாய்ச்
சிவந்தகற் பாணையிற் சேர வரிந்திடே. (17)

சேர வரிந்துமே செலம்படி ஒன்பதில்
வாரமாய் விட்டு மகிழ்ந்திரு நாள்வரை
காரங் கெடாமற் காய்ந்து குறுகியே
சாருந் திரிபடி தண்ணியாக் கொள்ளுமே. (18)

கொள்ளுங் கசாயங் குறித்திடா வின்பால்
தெள்ளியே வடித்துச் சேர்படி யொன்று
வின்னருஞ் சர்க்கரை மேற்பலம் பத்து
உள்ளிய பாகுபோ லுடன்கிண்டிக் காச்சுமே. (19)

காச்சிக் குழம்புபோற் கலந்தெழு நேரம்
தாச்சியில் லாமற் சமைந்த பொடியதைப்
பாச்சியுட் கிண்டிப் பதங்கண் டிரக்கிட
வாச்சு கரிமுகன் மலரடி போற்றுமே. (20)

போற்றுங் குருபரன் பொன்னிரு பதத்தைப்
போற்றுந் தவஞ்சீலு புகழ்பெருஞ் சேவடி

போற்றுஞ் சிவசித்தர் பொற்பத மன்பதாய்ப்
போற்றும் பராபரை பூரணி தன்னையே. (21)

பூரணி பாதத்தைப் போற்றி விதியுடன்
காரண வாசியைக் கடவாதுள் விட்டுத்
தாரணி யன்பர்கள் தரிக்கு முறையதாய்ச்
சீரணி லேகியந் தினந்தோறுஞ் சாதியே. (22)

சாதித் தலுதினம் தவம்பெருங் காலம்
நீதிச் சதாசிவம் நிலைதனை நோக்கிடும்
ஆதித்தன் மாமதி அங்கியின் மண்டலம்
நாதிப் பெரும்வழி நடனமுந் தோன்றுமே. (23)

தோற்றும் புலன்பொறி தூடாது நீங்கிடும்
மாற்றும் நரைதிரை வசப்படும் வாசியும்
சீற்ற மவிந்திடுந் தோன்றறி வுண்டாம்
போற்றும் வசீகரம் பொன்னிறந் தேகமே. (24)

பொன்னிற மேனி பொருந்திடி லேபனம்
மின்னலை யாருடன் விரும்பிலை யன்றி
மன்னுநீ ராழ்நிலை வளம்பெரு பாண்டிடன்
உன்னிய காசமோ டுறும்பிணி தீருமே. (25)

தீரும் பயித்தியந் தோன்றரி குன்மம்
தீரும் சயமூதற் சோபித மேகம்
தீருங் கிராணி சோகலி வாயுவும்
தீருந் சடத்துள தீவினை போகுமே. (26)

தீவினை நீங்கிடுந் சித்திக்கு மன்னெறி
தாவிய நெல்வியுந் சார்ந்த மிளகது
மேவிய மஞ்சளும் வேப்பம் பருப்புடன்
பூவிற் கடுக்காய் பொருந்து வகை யஞ்சே. (27)

வகையஞ்சு தூக்கி மகிழ்வா யறைத்திடு
பகையன்றி யாவின் பாலிற் கொதித்தபின்
சுகமுறத் தேய்த்துச் சுடு செலம் வார்த்திடி
மிகவில்லை காயம் விளங்கிடு முண்மையே. (28)

விளங்குசூல் லெண்ணெய் விளங்கிடும் புரிமுதல்
வழங்கும் வகையெலாம் மாற்றி யறிவுடன்
களங்கமில் கோரக்கர் கருதிடுங் கற்பத்தைக்
உளங்களி கூர்ந்து யுகந்திடுஞ் சித்தியே. (29)

சித்தான மூலியே சிந்தையுள் நேசமாய்
நித்தமுஞ் சாதித்தே யெல்லா மிகந்தருஞ்
பத்திசெய் யாமற் பழுத்தே யிழுத்தவர்
எத்தனை நாளுஞ் இடராகு மூற்றே. (30)

உன்னி யுணர்வித்தும் ஓங்காரத் துட்பொருளாம்
கன்னியைக் கூடிக் கலவிக்கும்—பின்னுமது
தாதத்தை வென்றதது தான்சிவமாய் நிற்குமது
கோரக்கர் செய்யுங் குணம். (31)

கோரக்கர் கற்பசூஸ்திரம் முடிந்தது.

முற்றிற்று.

பூரீவில்லிபுத்தூர் வித்துவான் பொன்னைக் கூடஞ் செட்டியார் அவர்கள் சுமாராய் சுப்பிரமணியபுர செட்டியார் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

குருவேதுணை.

எனபதற்கருத்து:

கோகக்கர் திருவாய்மலர்ந்தருளிய

குருஜூயநீர்மை.

போக்கெனைச் சொல்லேவன் கேளுரு புளிரண்டி சாரமொன்று
தாக்கென இந்தப் பொன்று தருவெடி யுப்பு ரெண்டு
வாக்கினைச் சூட னெனன்று வளர்மின்ற கல்லுப் பொன்று
பாக்கினைப் பூரீர் நாலு பண்புட னைசைத்துக் கூட்டே. (1)

கூட்டியே வில்லை யாக்கிக் குக்குடப் புடமிட் டாலே
தீட்டிய சுண்ணை மாகும் பீங்கானில் வைக்கச் சேரீர்
ஆட்டபில் வாத யிந்த அறுவகைச் செயரீ ரென்பார்
மூட்டிய போக்குக் கெல்லாம் முழுக்கட்டிச் சேரீர் தானே. (2)

தானென்ற சேரீர் தன்னைச் சகலனன் முறைக்குங் கூட்டு
மனனென்ற சேரீ ரொன்று உரைக்கிறேன் சுண்ணம் புக்கு
வானென்ற கடல்நு ரையை மயமுடன் கூட்டி நீற்றிச்
சீனசீனக் கூட்டி யாட்டிச் சிறுபுடம் போடச் சுண்ணம். (3)

சுண்ணந்தா னெட்டுச் சூத்தி முப்பது வெட்டு உப்பு
அண்ணலே கல்லுப்பு மிடான்மு அரைத்துநற் புடமே போடச்
சுண்ணமா மிதுதன் னேரிட முடிவெடி யுப்பு நாலு
கண்ணிய ரூடன் ரண்டு கதிப்புடன் குமரிச் சாத்தால். (4)

சாத்தைதவிட் டாட்டிச் சுட்டு தருசுண்ணத் தோடே சேர்க்குங்
காத்திடு யுனிதா னுலுவ் கல்வத்தி லாட்டு தற்கு
மாத்திர முலிலப்பால் விட்டு வகையதா யரைத்துக்கொண்டு
நீத்திடப் புடத்திற் போட நிசமது வகைசுண் ணும்பே. (5)

சுண்ணும்பைப் பீங்கா னிற்றுன் வைத்திடச் சேனீ ராகுஞ்
சுண்ணும்புப் போக்குக் கெல்லா மிந்தநீர் சொல்லி யாயிம்

எண்ணமாம் சுவுக்கா ரத்தைக் கிசைகின்ற மெழுகுக்குந்தான்
வண்ணமா முன்னி ரட்டபா வகையது கண்டு பாரே. (5)

பாரப்பா கோச பீசம் பரிவுகோ ரோசு னையுந்
சேரப்பாத் தேனு லாட்டிச் சிறுமயற் றளவு செய்து
பாரப்பா வீரங் கூட்டிப் பண்புடன் பார்க்கவேவை
தூரப்பா யிதை யறிந்தோ னதிசய வேவை காண்பான். (7)

காண்பது காரீ யந்தான் கடியதோர் சூத மப்பா
வீண்பாடென் றெண்ண வேண்டாம் வீரங்கற் பூரங்கூட்டி
யாண்டவன் சத்தி கெங்கை பரிதாரங் குருவண் டோடு
வாண்டகைப் பூநா கத்தின் மணமறு நீரு கூட்டே. (8)

கூட்டியே மெழுகு நீராற் கொண்டரை யெழு சாமம்
ஆட்டிப்பின் வெள்ளி பத்தி லரைத்திட மாற்ற முருகுந்
தீட்டிய ரோம நீறுஞ் சேரப்பா பொடியும் வண்டுங்
கூட்டியே வீர யிட்டுக் கொடுக்கவே ரசமுங் கூட்டே. (9)

ரசமுடனெழுதுங் கூட்டி நல்லதோர் மெழுகு நீரால்
வெயிலிலே யாட்டிச் செம்பில் வளமுடன் பத்துக் கொன்று
நிசமுடன் கொடுக்க வெள்ளி யெழுக்கு மூன்று சேர்க்க
நிசமுறு மஞ்ச மாற்று நிச்சயந் தப்பா தென்னே. (10)

கோரக்கர் குருஜெயநீர் ய.

மூற்றிற்று.

ஸ்ரீ வில்லி புத்தூர் கண்மாய்ப்பட்டி வித்துவான் அருணகிரிநாடார் அவர்கள் குமாரர் தெய்வசிகாமணி நாடாரவர்களிட மிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடவானது.

குமரகுருபரர்.

எண்பத்தேழாவது:

கோமக்கர் திருவாய் மலர்ந்தனிய

வைகாசிவிசாகத் திருப்பா.

அருள்பெற்ற நந்தி ஆசா னெனைக்குப்
பொருள்பெற்ற மூலர் போக ரெனக்குத்
தருவொத்த தோளர் சட்டை முனியும்
பாமுளைக் கொங்கணர் பச்ச மிகுதியே. (1)

மிகுதிய தாக விட்ட குரு நந்தி
தொகுதி யுரைத்தச் சொற்படி கேட்கத்
தகுதியின் வாத் தற்பரம் விள்ளப்
பகுதியின் பூதப் பஞ்சாட் சரமே. (2)

தாமேவு மூச்சை தண்ணை நிறுத்தவும்
வைமே விருத்தி மகுடம்போற் கட்டவும்
புரமட்ட காசப் புரத்தி லடக்கவும்
சமமிட்ட நந்தி கைகாட்டி னாரே. (3)

எல்லோருங் காணு திருக்கும் பொருளொன்று
வல்லார் மகத்துவம் வாய்கொண்டு சொல்லாற்
கல்லாத வற்கு கருச்சொல்லப் போமோ
சொல்லக் கொளுவிஞ்சித் திரட்டிய காயுள்ளே. (4)

காயி லிருக்குங் கயிலாச பொற்குரு
தோய்கின்ற மீன்மினித் தோகைபார் பெண்டாம்
ஆயி வொருடெண் அலங்காரச் செல்வி
கோயி லிருக்கக் கூர்மணக் குலாவுமே (5)

குலாவிய தொன்று மகத்தாங் குருவாம்
உலாவுஞ் சிருநீர் உட்சாடச் சத்தியாம்

பலாபல மொண்ணுண்டு பாரி லறியார்
கலாவிப் பாராளுல் கைமுறைத் தப்பே. (6)

தப்பாமற் சொன்னேன் சந்திர ணுலே
மெய்ப்பான மேகக் குருவாம் நிலவுப்புப்
கைப்பான உவரில் கதிற்போலே நிகக்கும்
அப்பொரு ளப்பா அரியா ரகசீம. (7)

அகமான திவ்வுடல் அட்டமக் கூறு
மகமான யோனியின் பச்ச மறிந்தால்
அகமற யிவ்வுடல் அடக்க மறிவார்
சொற்குரு வாகும் சிதறிவிட் டாரே. (8)

சிதறியச் சத்தப் பனிக்கெங் கைப்பின்னே
உதறிய பூப்போல் உணர்குரு வாகும்
பதறிடாப் பூவின் பாக மிளவற
அதறிய தாக நிறைசத்தி அஞ்சே. (9)

அஞ்சு கறந்தான் அமுறியிற் காய்ச்சி
மிஞ்ச விடாதே நீரண்டு உப்போரண்டு
அஞ்சுங் தெளிய அறியார்கள் கைமுறை
யெஞ்சில் நிலைவாய் நிலைத்திடும் பூவே. (10)

பூவே தெளிக்கபின் பொற்குரு வாகும்
நாவிற் கைமுறை நன்றியு ரைத்தார்
தேவே யுலாவும் சுலத்தினுட் கூறு
பூவே யடிக்கப் புகழ்ந்திருப் பாரே. (11)

இருப்பா ரிவரை யாரு மறியார்
அறுப்பா யறிந்தாலுங் கைமுறை யாகார்
வருப்பே யிதுப்பென்றும் வகையு மறியார்
கருத்தாலுக் காகப் பிள்ளாகளில்லையே. (12)

இல்லாத் தாள்க்கெங்ங்க யிவருட பெண்டாம்
சொல்லக்கேள் கல்லுப்புத் தோணியுங் காணும்
கல்லகல் லுப்பு நயம்பெறக் கங்கை
அல்லக் கதிரவனுகு முகத்திலே. (13)

முகத்திற் றெளிந்த முற்குரு வப்பா
செகத்தி லடங்காத் தெளிந்த கல்லுப்பாம்
மகத்துவ மான வளர்நீல உப்பாம்
அகத்தி லடங்கும் ஆதியின் சத்தியே. (14)

சத்தி உவர்ப்பூத் தையலி மேவ
அத்த சலந்தான் உருதி நிலவுப்பாம்
சித்திக்கப் பெண் திடமங்க ளாறியார்
சத்தியுஞ் சிவமும் தான்சேரு தற்கே. (15)

பூநாகத் சுண்ணம்.

சேரும் வகைதான் செப்புவேன் பின்பு
பாருள் கிடக்கும் பூநாகம் பண்பாக
காருச லமுதால் தொளியில் நிறுக்குமேல்
தாருக்கும் பொன்போ லக்கரி போலே. (16)

பொன்போ லுலாவியப் பூநாகம் பாலிலே
தன்பா லுரையத் தனிச்சுத்திப் பூநாகம்
இன்ப முடனே யிதைத்தா னடக்கத்
தன்பாக் கரியார்ச் சதுருடன் சொல்வேன். (17)

சொல்லக்கே ளப்பா துடிநில உப்பொன்று
சொல்லு மடியொன்று சூட்டினன் றுகவும்
நல்ல கல்லுப்பு சுண்ணம் ஒருகாசிடை
வல்ல கறியுப்புச் சுண்ணமு மவ்விடை. (18)

அவ்விடைச் சினம் மாட்டி அறுநீரால்
செவ்வுள வீரஞ் சேர்பத்துக் கொள்ளுப்
கவ்வவும் பூநாகம் கதித்தஞ்சு கூட்டி
சேவற் புடமே செல்லநற் சுண்ணமே. (19)

சுண்ணம்பூ நாகந் தூலியாக் கவர்கோடி.
னன்னனைச் சாக்கு மிதிலேதான் மாண்டிடும்
அண்ணை நல்லொரு குருசொல்லக் கேளடம்
வண்ணக் குருவண்டு மாகுரு வாமே. (20)

குருவாம் குருவண்டு கூறுடம் வீகைகேள்
பொருளாங் கறியுப்புப் போடி மகிலமையைக்

கருவாஞ் சலத்தி லேமுதற் காய்ச்சி
திருவாம் பெருமைச் சேதிவின் னாதே. (21)

விள்ளக்கே ளப்பா மிருப்பஞ் சிலமிரண்டும்
தெள்ளப்பா உப்பொன்று சித்திய தாகும்
கொள்ளப்பா ணைதக் கொடியதற் சுண்ணம்
கள்ளிடும் வீரம் சேர்த்திடச் சோதியே. (22)

சோதனை செய்யச் சுருக்கொன்று சொல்வேன்
நீதி நிலவுப்புச் சுண்ண நிலவுப்பு
ஆதியடியடி அறுநீர் வகையால்
ஓதிடுஞ் சூட னைடன்சரி கூட்டியே. (23)

சரிகூட்டி வீரன் தனைப்பத்துக் கொன்று
குருவண்டு நாலும் கூட்டி யரைத்து
மருவிய தோளா மடங்காத பேரில்லை
ஒருபுடம் கோழி உயரத்திற் சுண்ணமே. (24)

சுண்ணங் குருவண்டைச் சொல்லவொண் ணாது
எண்ண மறுபத்து நாலு பேறுந்தான்
சுண்ணத்தைக் காட்டச் சேர்ந்து மடிவார்
வண்ணங் குருவண்டு கூட்டாத வாதியே. (25)

வாதியா யிந்த மாகுரு விட்டவர்
நீதி நிலவுப்புச் சுண்ணத்தை விட்டவர்
கோதி வடிகின்ற கோரோசனை தேனை
ஆதி கறியுப்பு அடிசத்தி விட்டவர். (26)

உதித்த தருசின் சுண்ணத்தை விட்டவர்
துதித்த சவுக்காரம் வழுலை விட்டவர்
மதித்த காரண வகைதனை விட்டவர்
பதித்த செய்கையின் பாகத்தை விட்டவர். (27)

விட்டவர் கெட்டார் வேதையுங் காணாற்
சட்டை முனிக்கிச் சவுக்கார மேகுரு
கட்டிய கொங்கணர் தமக்குக் கறியுப்பு
பட்டனங் குருவண்டு பையற்குத் தானிதாம். (28)

துருசுசுன்னம்.

துருசு முகிந்த குருவகை சொல்வேன்
வினையின்ற பாகல் தயிலத் தடனே
பொருள்நில உப்படி சூடனுங் கூட்டி
அருள்வீரன் மேவு மாதிக் கவசமே. (29)

கவசங் கதிரவன் காண வுலர்ந்தபின்
அவசம் வராமல் ஒருபுதுச் சட்டியில்
சிவசத்தி யான உவர்மண் ணெருபடிக்
கவசம் நடுவைத்துக் கட்டி யெரிக்கவே. (30)

எரிகின்ற சட்டிக்கி மேற்சட்டி மூடியே
தெரியாமல் மூன்று சேலைமண் செய்து
ஒருசாமந் தீயிட ஓர்கம லாக்கினி
துருசு முடிந்தது சொல்லவொண் ணாதே. (31)

சொல்லவொண் ணாத துருசிது சுண்ணம்
எல்லாச் சரக்கையும் பெதிரிட்டுக் கொல்லும்
வல்லதோ ரோமமும் குருமுடிப்பாமே
கல்லதோ ருப்பு கண்ணநில உப்பே. (32)

ரோமச்சுண்ணம்.

நிலஉப்பு அடியும் நிறைசூடன் வீரமும்
கல்கிய ரோமமும் நன்முயனைக்கையில்
விலைபெத்த கண்ணீர் விசைகொண்டூட்டி
அலகிய வில்லைக் கவசம் புடம்போடே. (33)

போட்டபின் ரோமம் புகழ்கல்ல சுண்ணம்
வாட்டங்க ளில்லை மடக்குச் சரக்கெல்லாம்
காட்டங் கடல்நுரை நற்குரு வாக
சுட்டினிற் கேளுந யெடுத்துரைப் பேனே. (34)

கடல் நுரைச்சுண்ணம்.

உரைப்பேன் உரையொன்று உத்தமி யுப்பு
நிறைந்த கறியுப்பு நிதிவீர சூடனும்
துரைக்கிடை யாக நுணுக்கி யரைக்கத்
தரைக்கடங் காத நீர்விட் டாட்டே. (35)

ஊட்டிய கோழிப் புடமிடச் சுண்ணம்
அதட்டியே கொல்லும் கருசு வெருக்க
சட்டங் கடல்நுரை சுண்ணத்தை விட்டவர்
ஊட்டி முடம்போல அதரிடும் வாதமே. (36)

வாதங்கள் காண வகையொன்று விள்ளுவேன்
காத லெனுங்கிரு மூலர்கை யாடிய
நீதிய கல்லுப்புச் சுண்ணத்தை விட்டவர்
வேதனைகள் காணர் மிதமிஞ்சிப் போமே. (37)

மிஞ்சிய கல்லுப்பு வீசாயும் சமுத்திரம்
கொஞ்சிய பாறைத் தூருக்கீழ் விசாயும்
தஞ்சமீ தென்று தானறி யார்கள்
வஞ்சனை யாக மயக்கிடும் கல்லுப்பே. (38)

கறியுப்புக் கட்டு.

கல்லுப்பு மாகும் கட்டை வகைகேள்
கல்லதோர் சினம் நற்கறி யுப்பு
மெல்லடி சுத்தி விசேந்த நிலவுப்பு
கொல்லும் வெண்காரம் கூறுஞ்சவ் வீரமே. (39)

வீரமும் பூரமும் விளங்குபூ காகமும்
வளரோமச் சுண்ணமும் வளர்கல்லுச் சுண்ணமும்
பண்பா யணைக்கச் சாரநீ ராலேத்
தன்மைய தாகத் தானெட்டிக் கொள்வதே. (40)

ஊட்டி யொருமுழப் புடமிடச் சுண்ணம்
காட்டமா யெந்தச் சாரக்குமே லச்சுண்ணம்
வாட்டிட வெல்லாச் சாரக்கு மெழுகாம்
காட்டிய தீயி லுருக்கண மாமே. (41)

உருக்கினஞ் சுட்டுக் குலோகமும் பேதிக்கும்
பருக்கிய சூதத்தைப் பற்றிகொள்ளுநம் பச்சை
பெருக்கிய சுண்ணம் பேசிய சிங்கிக்
கருக்குள்ள செய்திக் கபடில்லைச் சொன்னேனே. (42)

சொன்னேனே கருக்கள் தொழில்பாரு வாதிகாள்
சொன்னேன் குருக்கள் சொற்றவ ழுதே

சொன்னேனண் ணைகண்ட செய்திக ளெல்லாம்
சொன்னேனுண் வாதத் தொழிலின் விபரமே. (43)

விபரமாய் விண்டேன் வேதையைப் பாரு
உபரச் சத்துக் களங்கத் தொழிலும்
சுபரசக் கட்டுஞ் சோதிசெந் தூரமும்
சபதமும் வந்தாலே தான்போடு வேதையே. (44)

வேதையி தேதுக் காண்பது யேது
வேதைகள் பொய்யென்று விள்ளவொண் ணாது
சோதி மயமே தொழில்கரு வெல்லாம்
நீதியா யின்னஞ் சலக்குரு செய்தியே. (45)

திரிவங்கச் சுண்ணம்.

செய்திகள் சொல்வேன் குருக்குத் துரையாய்
தொய்தகா ரீயமும் மஞ்சிடை யாக
வெய்திடைச் சூதம் மாறிடை யாகக்
கொய்திடும் ஈகம் யேழிடைக் கூட்டே. (46)

கூட்டிடு சூடன் ஒன்றுகால் வீரன்
நீட்டடி யும்கறி யுப்புச் சுண்ணமும்
வாட்டமில் லாதே நிலவுப் போரிடை
நாட்டிய கடல்நுரைச் சுண்ணம் ரசமுடன் (47)

ரசமுடன் பூநாகச் சுண்ணமும் கூட்டி
நிசமுடன் கள்ளு யெருக்கலம் பால்விட்டு
வசிய அலரத்து வளர்துரு சொன்றுக்கு
வசமுடன் பொத்தி வளமுடனே செய்வாய். (48)

செய்திடு சட்டியிற்றான் திருவா மண்ணைவைத்து
தொய்திடு கடுவேயிந்தத் துருசணிக் கவசம்வைத்து
வெய்திடு மேற்சட்டித்தான் விரிவது தெரியாமற்றான்
செய்திடு நீதான்மூன்று சேலைமண் செய்துகொள்ளே. (49)

சேலைசெய் சட்டிதன்னைத் தீயெரி கமலமாக
நீலங்கள் பொங்கியந்தத் துருசது நீரதாகும்
ஆலங்க ளுண்டகண்டன் அநிலனை தப்பாதிந்த
கோலமூட் குருத்தருசிற் கோடிதான் வேதைதானே. (50)

வேகையபாம் அண்டகண்ணீர் விளாங்கிய லிங்கந்தன்னை
சீதியா மெழுகதாகும் நிசமுள்ள வேகையாகும்
வாதியாள் நந்தி ஆட்டம் வளமுடன் தண்ணீருண்டாம்
சூதத்தைதக் கட்டிவைக்கும் சுருக்கிடக் காயிலாகும். (51)

ஆட்டிய சூதந்தன்னை யாவிதே ரைத்துப்பூசி
சேடிய புடமேமூன்று புடமிடச் செந்தூரந்தான்
நீடிய வெள்ளிநூறு நிதிபெற வுருகும்போது
வாட்டிய ரசசெந்தூரம் மூன்றிடப் பத்துமாத்தாம் (52)

காந்தசத்தூது.

மாற்றிது புடத்துக்கேதான் வளர்தங்க மிறங்குமப்பா
பாற்றது சொன்னேனின்னம் பழமையாய்க் குருவொன்றேகேள்
நீற்றிய காந்தமஞ்சு நிலைபொரி காரமொன்று
காத்தரி தாரசாரம் பாஷாணஞ் சூதமொன்றே. (53)

ஒன்றிதோர் வகைக்கித்தப்பா தொக்கவே கூட்டித்தட்டி
நன்றிகொ ளண்டடம்வெள்ளைக் கருவிலே யெருக்கலம்பால்
தன்றிட விட்டபின்பு சூழநற் சுலிமேயாகும்
அண்டது விட்டரைத்து உலர்ந்தபின் பிசின்பதத்தில். (54)

பதத்திலே யெடுத்துவச் சிரக்குகையி லிட்டுநன்றாய்
விதத்துடன் குகைபழுக்க மீரவே யூதிப்பின்பு
இதத்துடன் மூன்றுதாரம் இன்பமாய்க் குகையழுக
பதட்டமில் லாமலாறிப் பின்னெடுத் தெத்தானீயம். (55)

சுயந்தான் காந்தமீய மிதனுடன் தங்கம்கூட்டி
மாய்ந்தமேதார் நாகங்கூட்டி மயனமாய் அயமுங்கூட்டி
வாய்ந்தமேதார் கிண்ணாங்கட்ட வளமுடன் சூதங்கட்டும்
ஆய்ந்திடுந் சாக்கையெல்லாம் அதட்டியே கொன்றுபோடும். ()

நவசீசாரக்கட்டு.

போடுவ தல்லால்வேறை போக்கினி சொல்லமாட்டேன்
கீட்டிய சவுக்காரத்தின் நீருடன் உமிழ்நீர்கூட்டி
ஆட்டிய சுவச்சாரத்துக் கப்பியோர் கலசத்தன்னில்
வாடிய புனிச்சிராயை வளமுடன் சுட்டுப்போடே. (57)

கட்டிடும் சாம்பல்தன்னை சூழ்புதுக் கலசத்தன்னில்
இட்டமாய் நடுவே வைத்து இதமுட னெடுத்துக்கொண்டு

திட்டமாய் ஓடுமுடி சீலடண் செய்துகொண்டு
சட்டமாய்க் கசபுடத்திற் சாதந்தான் கட்டிப்போச்சே. (58)

கட்டின சாரந்தன்னைக் கதிர்த்தகோர் நீரதாக
விட்டிடு புசுசூழலம் வேண்டிய சாம்பல்பண்ணி
ஓட்டிய கழுதைநீரால் உசிதமாய்ப் பிசைந்து அந்தக்
கட்டின சாரத்துக்குக் கவசமாய்ப் பொதிந்துபோடே. (59)

போட்டபின் காட்டையொன்று புடமிட நீரதாகும்
சீட்டிய அடியும்சூடன் நிலஉப்பு வீரங்கூட்டி
ஓட்டிடு சாரநீரால் அதுகாடைப் புடமேபோட
வாட்டமில் லாதசாரச் சுண்ணமாங் குருவுமாகும். (60)

குருவிது தாரத்துக்குக் கூட்டியே கவசம்பூட்டி
வருந்தியிற் காட்டக்கட்டும் வளமாலின் தேவிகட்டும்
தருவீங்கந் தன்னைக்கொல்லுந் தயவுடன் கறியிலாடும்
இருபது கழஞ்சுவெள்ளி யியலவே ஆருமாத்தே. (61)

நாகக்கட்டு.

மாத்தது ஆறுகாணும் வளர்கின்ற புடத்துக்கேதான்
மாத்ததது யிறங்குந்தங்கம் வசியில்லைப் பசும்பொன்னாகும்
நீற்றுள்ள சாரக்கட்டு நீதியா யொருமஞ்சாடி
ஏற்றுள்ள காந்தமீயம் மஞ்சாடி அரையுங்கூட்டே. (62)

அரைத்திடும் உமிழ்நீராலே அரியதா கக்கட்டிக்கும்
நிறைத்ததிற் றடவியேதான் நிசமுட னுலர்த்திப்பின்பு
வரைகொள்முத் திருக்கஞ்சி கடல்நுரை ரெண்டும்கூட்டி
அரசம் பழுத்தின்சாத்தா லரைத்துப்பின் பொதிந்துபோடே ()

பொதிந்தது உலர்ந்தபின்பு புகழ்நல்லகுகைக் குள்ளேதான்
இதஞ்சிறு செருப்படி யிலையது தலைவைத்து
பதிவுடன் நாகக்கட்டி பரிவுடன் நடுவேவைத்துச்
சிதமுமற் சில்லுபோட்டுச் சீலமண் செய்துபோடே. (64)

போட்டபின் காடைகாலு புடமிடக் கவுதாரிக்கி
நீட்டியப் புடந்தான்மூன்று நிசமுள்ள குக்குடந்தான்
நாட்டிய புடமேமூன்று நலமிதார் குசமுண்டாக
மூட்டிடு புடந்துக்கெல்லாம் வகையதாய் மூட்டச்சொல்லே. ()

சேந்தூரம்.

சொல்லுந்த நாகக்கட்டும் சென்றிடச் சூதங்கட்டும்
கல்லதோர் கறியிலாடும் ரசமணிக் குளிகையப்பா
வல்லதோர் சேந்தூரந்தான் வளர்கெந்தித் தயிலந்தாக்கச்
சொல்லிவாண் ணுமுருக்கம் பூநிறஞ் சேந்தூரந்தான். (66)

சேந்தூரம் ஒன்றுவெள்ளி யிருபதிற் சேர்க்கவேதான்
வந்திடு மாற்றுப்பத்து வளர்நாகங் கட்டினத்தை
சேந்தூர மாகக்கெந்தித் தயிலத்திற் சிவப்புமீறும்
மந்திரச் செம்புஒன்றில் மஞ்சாடி கொடுக்கமாத்து. (67)

சவுக்கார எண்ணெய்வாங்க.

மாற்றுபத் தாணிக்கேதான் வளரெட்டு மாத்தேயாகும்
நீற்றுள்ள சவுக்காரத்தை நிசமுடன் சுண்ணம்பாக்க
னத்தகோர் நுதுவாகாப்பெண் ணின்நீர் படிரெண்டிற்றான்
காத்திடும் சுண்ணம்புக்கல் பாதியும் மடியும்பாதி. (68)

பாதியாய் நீத்தித்தானே பண்புட னதனுமுன்னே
நீதியாய் நீரைவாங்கு யிருந்ததைத் தெளியவைத்து
ஓதிடும் பீங்கானிற்றான் ஒளியுடன் விட்டுக்கொண்டு
சாதினை சவுக்காரத்தை உரைத்திடத் தண்ணிவிட்டே. (69)

தண்ணியை விட்டுமூடித் தான்பத்து நாழிகைதான்
எண்ணைமா யிருக்கவெண்ணெய் இளகியே தண்ணிமேலே [க்க
ளண்ணெய்யெல்லா மிதக்குமப்பா யிருத்தப்பின் னுள்ளேபார்
வண்ணமா யுரைந்திருக்கும் வெயினில் வைக்கப்பின்டு. (70)

வைக்கப்பின் வழலியப்பாச் சுத்தனப் பொடிபோலாச்சு
குக்குடம் வெள்ளைதன்னில் யெருக்கலம் பாலிலிட்டு
வைக்கவே தெளியுமந்த தெளிவிட்டுச் சவுக்காரத்தை
சிக்கென்ன வுரைத்துவில்லைத் திடமுடன் பிடித்துக்கொண்டே

கொண்டபின் னுலர்த்திப்பின்டு கூறுவேன் கவசமப்பா
ரெண்டிடச் சினச்சுண்ணம் உவராட்டில் நிலவுப்புந்தான்
கண்டதோர் கறியுப்புந்தான் கதிருரு வண்டுங்கூட்டி
மூண்டிடு நீத்துக்கல்லு யுவருமாய் நீத்தினத்தே. (72)

நீற்றுடன் சம்பளத்தால் நீசத்தோ டரைத்துக்கொண்டு
நீத்திய வழலைக்கப்பி நிசமொரு புடமேபோட
நீற்றென்ன சுண்ணும்பப்பா நிலையில்லைக் கவரோகோடி
பார்த்தது கண்கண்டேன்றான் பண்புடன் செயநீர்போக்கே. ()

போக்கென்ன சொல்லக்கேளு புளிரண்டு சாரமொன்று
தாக்கென்ன இந்துப்பொன்று தருவெடி யுப்புரண்டு
வாக்கென்ன சூடலென்று வளர்கின்ற கல்லுப்பொன்று
பாக்கடி நிலஉப்பாலே பண்புட னரைத்துக்கூட்டே. (74)

கூட்டிய வில்லையாக்கி குருபுட மெரியிட்டேதான்
தீட்டிய சுண்ணமாகும் திங்களில் வைக்கச்செயநீர்
வாட்டமில் லாததிந்த அறுவகைச் செயநீர்தானே
மூட்டிய போக்கெல்லாந்தான் முழுக்கட்டு செயநீர்தானே.(75)

தானென்ற செயநீர்தன்னை சகலதோர் முறைக்குங்கூட்டு
ஊனென்ற செயநீரொன்று உரைக்கின்ற சுண்ணும்புக்கு
வானென்ற கடல்நுரையை மயமூடன் சுட்டுநீத்தி
சீனனைக் கட்டிஆட்டிச் சிறுபுடம்போடச் சுண்ணம். (76)

சுண்ணாந்தா னெட்டுச்சத்தி தாயது யெட்டுஉப்பு
அண்ணலே கல்லுப்பொன்று அரைத்துமே நிறப்பிப்பின்பு
வண்ணமா யிவைகளெல்லாம் வகையுடன் சேர்த்துக்கொண்டு
விண்ணைமில் லாமல்செய்தால் விகசிதந் தெரியுமப்பா. (77)

எப்பாரி லுள்ளோர்க ளியல்பைநான் சொல்லவில்லை
ஒப்பாக உனக்குயா னும் உண்மையாய்ச் சொல்லிவிட்டேன்
துப்பாகச் சுண்ணச்செயநீர் சுருக்கிட்டு ஆட்டிக்கொண்டு
மெய்ப்புடன் மால்தேனிக்கு விருப்புமாய்க் கவசங்கட்டே. (78)

கட்டியே இரவிகாணக் கண்டபின் அஞ்சுசுண்ணம்
கெட்டியே குகையில்வைத்துக் கெசபுடமூதச் சுண்ணம்
மட்டில்லா தாரச்சுண்ணம் வங்கத்துக் கப்பியூதத்
திட்டமாய் நிமிளைக்கப்பி சிறந்தூத சுண்ணமாமே. (79)

சுண்ணாந்தான் சாரமப்பா தூநுசது வெந்துநீறும்
சுண்ணாந்தான் சூதமப்பா துடிதங்கம் நல்லசுண்ணம்

சுண்ணமாந் தங்கத்தோடே துடிவீரன் விங்கங்கூட்டி
திண்ணவே வழலிற்கூட்டிப் புடமிடச் செந்தூரந்தான். (80

செந்தூர வீராக னொன்று வெள்ளி இருநூறுக்குச்
செந்தூரம் கொடுக்கவேவதை மாத்திருபத் தேழுயாகும்
வந்தேதார் செந்தூரத்தை வளர்கின்ற மெழுகுநீரால்
தொந்திக்கச் சுண்ணநீரால் தொய்ந்தரை மெழுகதாமே. (81)

மெழுகுடன் சாரங்கூட்டிப் பீங்கானில் வைக்கநீராம்
ஒழுகிய சங்குவீரம் உரம்வெள்ளை யப்பிரேகம்
வளமுடன் மலையுந்தண்ணீர் வளர்கின்ற லோகந்தண்ணீர்
இளகிய நாகந்தண்ணீர் இதில்ரசந் தண்ணீராமே. (82

ரசத்தண்ணீ ருடனேவீரம் மாட்டியே தருசிற்பூசிப்
பசையுடன் தியிலாட்டப் பசுப்பில்லாச் சிங்கிக்காச்சு
நிசமொரு புதுக்குடத்தில் நிறையமேவ ரசத்தைவிட்டு
வசியில்லாக் குடத்தின்வாயில் வளமதாய்ச் சிங்கிபூட்டே (83)

கோரக்கர் வகார சூஸ்திரம் ஈ.

முற்றிற்று.

கோரக்கர் வகாரசூஸ்திரம் நூறு யென்று பேற்பட்டிருக்கிறது என்னிடத்திலிருந்த பேட்டில் 83-பாட்டுமட்டிலிருந்தது. அடியில் கண்டவரிட மிருந்த பேட்டில் 70-பாட்டுபட்டுமிருந்தது. மீதம் 17 பாட்டு அகப்படவில்லை. ஆகையால் இந்த பேடி நூறு பாட்டுவைத் திருக்கிற புண்ணியவானகள் மீதம் 17 பாட்டுஷோடும் பழுதி அனுப்பினல் அதையுஞ் சேர்த்து அச்சிட்டு அவருடைய பேரும் போட்டு ஒரு புத்தகம் இலவமாயனுப்பக்கூடும்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மகம்மதுசாயபுபுரம் அருளானந்தப் பிடகர் அவர்கள் குமாரர் சுந்தரலிங்கபண்டிதர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

குருவேதுணை.

எண்பத்தெட்டாவது:

திலோர்த்தமை திருவாய்மலர்ந்தருளிய

ஞானச் சுருக்கம் உசு.



ஆதி யந்தமொன் றான பராபரம்
சோதி செஞ்சுட ரான நிராதரம்
நாத கீதமுண் டானசி தம்பரம்
வேத மாமணி பாதம் பணிகுவாம். (1)

மூத்தப் போல மூளைக்கின்ற யோகமும்
வெத்தி யாக விளங்குமெய்ஞ் ஞானமும்
சித்தி யாகச் சடம்பொன்போ லாகவும்
சித்தம் வைத்துத் திலோர்த்தமை செப்புவாள்: (2)

செப்பும் நாசிப் புருவ நடுவதில்
சிந்தை வைத்து வங்கென்று வாங்கிடு
மூப்பத்திரண்டு தரம்மே சிக்கவே
மூனைந்த திற்பாதி சிங்கென் றேறத்திடு
தப்பி தங்கள்வ ராமலைப் போதும்நீ
சாதித் தேவர யோகம்நி லைத்திடும்
அற்ப மென்று மனதிலெண் ணுமலே
அழுதித்திப் பார்க்க அமுதம் பொழியுமே. (3)

வெண்பா.

பொழியு மமுதத்தைப் புத்தியுட னேபுசிக்க
வழிதுணையாய் வாலை வசனிப்பாள்—பழியும்வரா
தெண்ணெல் மதியின் இருதயத் தீபம்வைத்து
அண்ணு தமருள் ளடை: (4)

வேறு.

அடைக்கவே உபாயமொன்று சொல்லக்கேளு
அரகரா கழுஞ்சிடைதான் சுண்ணம்பூநீர்
விடுத்தவுமி நீராலே விரவிற்கொண்டு
விளங்கியதோர் நாவடியி லொட்டாற்சுண்டு
தடுத்துநின்ற சல்லிவே ரறுத்துபுண்ணுக்
கனையாத்தம் பழவெண்ணீர் கொப்பளிக்க
நடுத்தமருண் ணுவுநுனி நலுவாதேகும்
நாகசர வாசியதை நடிவொண்ணுதே- 5)

ஒண்ணுன வாசியது மூவியாகும்
உத்தமனே விந்ததுவும் வாசியாகும்
பண்ணுன லோகத்து மாண்பர்கூடி
பலபலவா யலங்காரம் பண்பாய்வார
மூண்ணுன மூவிதனை அறியாமற்றான்
மூனைந்துசுட்டுக் கண்கெட்டுக் குரலுங்கெட்டு
மண்ணுன மக்கள்மனை பனைங்கள்தோத்து
மயக்கவெறி கொண்டலைந்து வாணப்பாற்தே. (6)

வேறு.

வாண மாகி வளர்ந்த புருவத்தை
ஊணிப் பார்க்கத் தலங்கள் தெரிந்திடும்
வேணு மென்றுமெய்ஞ் ஞானப் பெருவெளி
ஊணிப் பார்க்க ஒருபேத மில்லையே. (7)

பேத மில்லை திரணியென் சொல்வது
வாது மில்லை மணிவிளக் கானது
நாத வோமமும் மேருவுஞ் சிக்கிலல்
பாத கங்க ளெறிந்து பறக்குமே. (8)

வெண்பா.

பறக்குமே பாதகங்கள் பாழ்வினைகள் மந்திரங்கள்
தறக்குமே நின்சமுகங் கண்டால்—திறப்படுத்தத்
தன்னுக்குட் டானே தலைவன் றனையறிந்தால்
என்றைக்கும் சித்தா மியல். (9)

வேறு.

சித்தனை யாவதற்கு வகையைபக்கேளுந்
சிவசிவா பஞ்சகணை மென்றஞ்சண்டி
அத்தனடா அகாரமதை ஆண்டுசேவி
அரகரா உகாரசத்தி அன்பாய்ச்சேவி
முத்திபெறச் சத்திசிவம் முடித்தபின்பு
மோனமுடன் மகாரமதை முனைந்துசேவி
வெத்திபெற வேணுமென்றுற் சிகாரந்தன்னை
விரும்பிமன பூரணத்தைத் தினமுங்கொள்ளே. (10)

கொள்ளவே பூரணமும் ஆண்டுசென்றுற்
குடிலமென்ற சடத்திற்கு அழிவேபில்லை
வள்ளலை வங்கன்று வாசிவாங்கி
மீமல்வாசல் தனக்குள்ளே சிங்கென்றேத்து
அள்ளவே கண்டத்தில் அங்கென்றேட்ட
அரகரா யிராறும் அடங்கும்வீட்டில்
விள்ளவே வில்வநாத்த சரம்பெலத்தால்
மெய்ஞ்ஞான தீபத்துக் கழுதான்பாரே. (11)

வெண்பா.

பாரே நயனத்தைப் பத்திரில் தொட்டதிது
நேரே நடுமையம்நீபாரு—ஊரெல்லாம்
ஒன்றுகத தோணுமத னுண்மை பரவெளிதான்
நின்றுடுங் சோதி நினை. (12)

வேறு.

நினைத்தேவொரு புனற்போலவே சித்தாலனை மறைத்து
வனத்தேபொறி கனற்போலவே மலர்ப்பாவையை கிறுத்தி
நினைத்தேவொரு கலைமூக்கினிற் புகைபோலவே சிவக்கும்
கணைப்போதுநீ மறக்காமலே நினைத்தாலொளி காட்டும். (13)

வெண்பா.

காட்டிங் கனகசுனை கண்டவர்கள் விண்டதுண்டோ
ஆட்டுங்கால் மூல மறிவாரோ—ஏட்டுடைய
விண்டவர்கள் கண்டதில்லை மேதினியி லெயொருவர்
கண்டவர்கள் விண்டதில்லை காண். (14)

காட்டுங் கனகசபை கண்டவுட னேதனக்குத்
தேட்டுந் திரவிய ஞ்சம் பொன்னென் கான்—கூட்டமென்ன
கண்டவிட மெல்லாங் கனகஞ் சொரிந்துவிடும்
அண்டபரன் சொன்ன தறி. (15

வேறு.

அறியவே உண்மையுனக் குள்ளேகேளு
ஆழிம்புபொய் கொலைகளவு அகலத்தள்ளி
நிறையாக யெக்காலும் குருவின்பாதம்
நிச்சயமாய் மனதிலெண்ணி சரஸவீசத்து
முறையோடே குருசொன்ன படியேசெய்தால்
மூவுலகு முனதுவசம கைகுளளாகும
கறையேற மாட்டாத படியாவ்வைமக்தா
காணுவதும் அளிவதுவுங் கணங்கள்தானே. (16)

வேறு.

கணங்க ளான பெரும்பூதக் காட்டினிற்
சுணங்க ணைப்போற் சுருங்கி யிருந்தகை
மணங்கு விந்து வணங்கியே தானடிணல்
இணங்க னெஞ்சத் திருந்தது சோதியே (17)

சோதி யாகச் சுருக்கத்தைச் சொல்லுவேன்
வாதி யானகண் ணுக்குச் செவிமூக்கு
நீதி யான மனமொன்றைப் புக்கிறற்
சோதி யெல்லாம் கூணத்திற் றெரியுமே. (18)

தெரியு மென்று நினைத்தலுந் தானென்ன
அறிவு கொண்டகண் டத்தினி லேறியே
புரிய மாகப்பொற் கம்பம் பிடிபட்டாற்
சிறிய வண்போல் கூணத்தே அகத்திடே. (19)

வெண்பா.

அகத்திலே கோபமதை ஐம்புலனைக் கண்டும்
வகையாகச் சென்றுல் வழங்கும்—சகமுழுதும்
பேசாதும் பேசுமது பேய்மக்கள் வாய்க்குமே
ஆகாயந் தானேயென் றறி. (20)

வேறு.

அறிந் திந்த மதியுப் பதனிலை
நிறைந் தினிப்பு நிவசமதா கிடும்
தெரிந்த வானந் தெளிந்திடும் பூவினற்
கறைந்த சூதமுங் கட்டினின் முடுமே. (21)

ஆடும் லிங்கம் அரிதார வீரமும்
வாடும் வங்கம் வலுவான நாகமும்
நாடு மேரு தனில்ரசம் சிக்கிலை
காடுங் கலலுங் கனகம் விளையுமே. (22)

வேறு.

விளையுமென்று வேலைசெய்தால் விளைந்திதபோகும்
விளையாதென் றேநினைத்தா லாகாதப்பா
களையெடுக்கா விட்டாக்கால் பயிர்தானேது
கருத்துடனே கண்டறிந்தால் களையுமாகும்
கிளையாக நீயிருந்து சூட்சங்கண்டால்
கிட்டாத பொருளெல்லாங் கிட்டிப்போகும்
துளைவிழுந்த மாமதுவுந் தளிர்த்தாப்போல
தோற்றத்தி லண்டமதிற் பிண்டமாச்சே. (23)

அண்டபிண்டம் ரெண்டையுமே சமமாயாக்கி
அசத்திதுசத் திதுவென்றே யறியாமற்றான்
பண்டுவந்த தேகமதை யின்னதென்று
பார்த்தறிய வகைதெரியா பரமஞானி
கண்டுகொண்ட சாஸ்திரத்தி னுட்பந்தன்னை
கருத்துடன்கண் டறிந்துதிரு மூலர்தம்மைத்
தொண்டுசெய்து யிதையறிந்து வந்தேனப்பா
தொகுப்பாகச் சாஸ்திரத்தி னுண்மைபாரே. (24)

பாரப்பா கட்டுனீதார் உப்பைச்சேர்த்தால்
பண்பாக யெழும்பலாம் மதியின்மட்டும்
நேரப்பா அயனெழுத்தை மாற்றிவைக்கும்
நேர்மையாய் தேகமதின் சட்டைபோக்கும்
சீரப்பா இத்தேகம் வயிர்மாகும்
திரமான ஒளிதீசும் நாதங்கேட்கும்

கூரப்பா நித்திரைதான் வரமாட்டாது
குருவான உப்பரிந்தால் நிரமதாச்சே. (25

ஆச்சுதிந்த பச்சையுப்பை தின்றுயாகில்
ஆகாது உப்பாலே நரையுண்டாகும்
பேச்சப்பா புளியாலே நிரையுண்டாகும்
பெலமாக வேணுமென்றால் வகையைக்கேளு
வாச்சுதிந்த கட்டுப்பு சோத்தாயானால்
வகையுண்டு பலமுண்டு நரையுமாறும்
ஏச்சிதுவென் றேநினைத்து விட்டாயாகில்
எப்பொழுதுங் கண்டறிய நிலையோயில்லை (26

வேறு.

நிலைமையாக ரிஷிசித்தர் கல்கிறார்
தலைமையாக அறிந்தவர் ஞானியே
புலைமையானயென் புன்சொல்லை நம்பினால்
வலுமையானதோர் ஞானமும் வாய்க்குமே. (27

திலோர்த்தமை ஞானச் சுருக்கம் உசு

மூற்றிற்று.

திருச்சி மேட்டு சிந்தாமணி வைத்தியம், தி. க. சுப்பிரமணிய பிள்ளையவர்களிடமிருந்து வாங்கியச் சுட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் முச்சிடலானது.

குருதேவதுணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்
இருவாய்மலர்ந்தருளிய
யோக ஞான சாஸ்திரத் திரட்டின்
ஏழாம் பாகத்திற் சொல்லியிருக்கிற
முக்கியவிஷயங்கள்.

ஐயா! இதற்கடுத்த ஏழாம்பாகத்தில் சட்டைமுனி, காலாங்கி நாதர், இராமதேவர், ஈஸ்வரன், பிண்ணாக்கீசர், காசிபமுனி, ஜனகர், அகப்பேய்ச்சித்தர், விளையாட்டிச்சித்தர் முதலிய மகரிஷிகளால் அருளிச்செய்யப்பெற்ற இருபத்தைந்து சாஸ்திரங்களில் அடங்கிய விஷயங்களை இதனடியிற் காணலாம். அவையாவன:—

முதலாவது: சட்டைமுனி ஞான சாஸ்திரம் நூறில், மூலமுதல் ஆறுதலம் மேலாறுதலம் பராபரமூர்த்தி விபரங்களையும், பிரிதிவி அப்பு தேயுவு வாயுவு ஆகாச விபரங்களையும், அகார உகார மகார காரணம், சுழிமுனை விபரங்களையும், பகலிரவு அற்ற இடத்தின் விபரங்களையும், யோக ஞான கேசரி சத்தி விபரங்களையும், ஆதியனாதிவஸ்து குளிகை மும்மூலஞானி விபரங்களையும், ஆகாயம் பிராணயவாசி ஆதி குருவருள் அஞ்ஞானி விபரங்களையும்;

2-வது: சட்டமுனி ஞானவிளக்கம் ஐம்பத்தொன்றில், வேதாந்தம் சித்தாந்தம் பராசத்தி தெரிசனம் மவுனாசக் குளிகை மவுனதீட்சை நிராமய விபரங்களையும், வாசி வசப்படும் விபரங்களையும், நடுவணை காட்டம் தயிலமுறை அடிநடுமுடி விபரங்களையும், சூரணம் சத்திபூசை காமப்பால் கானற்பால் நாற்பத்தி முக்கோண சக்கரம் பூஜாவிதி சித்தி விபரங்களையும்;

3-வது: சட்டமுனி தீட்சை கற்பம் ஒன்பதில், கற்பமுறை குருமுறை தசதீட்சை காகிமுனி நாட்ட விபரங்களையும்;

4-வது: சட்டமுனி சூதகற்பம் ஏழில், சூதசூரண கற்பமுறை விபரங்களையும், பத்தியபாகம் கைபாகம் செய்பாகத்துக்குரிய விபரங்களையும்;

5-வது: சட்டமுனி திருஷ்டி ஸ்தாபனமாதி பன்னிரண்டில், திருஷ்டி சமாதி தியான லட்சண விபரங்களையும், ஞானகற்பமுறை ஞாதங்கட்டி முறை, சோதிப்பா லருந்துமுறை, கெவுனம் பாயுமுறை, இவை முதலிய விபரங்களையும்;

6-வது: சட்டமுனி பரிபூரணம் பதினொன்றில், மூச்சுந்தி செல்லும் வழி, மூலம்பார்க்கும் வழி, நந்தி கணேசன் சந்திக லெட்டினன் விபரங்களையும், மதியமுத யோக ஞானசித்தி, வாசிமூலம் காயசித்தி குண்டலிசத்தி முதலிய விபரங்களையும்;

7-வது: சட்டமுனி வேதாந்த சூஸ்திரம் எட்டில், வேதாந்த மூடிவும் சோதி தெரிசன காட்டம் அஷ்டபந்தி பிராணைய விபரம் அஷ்டமாசித்தி வகையராமூலமந்திரம் சொந்தர முறை பரகதிக்குரிய முதலிய விபரங்களையும்;

8-வது: சட்டமுனி நிகண்டு சூஸ்திரம் ஐம்பத்தொன்றில், குரு மூடிக்கும் பாகம் சுண்ணம் நவகோண அட்சர விபரங்களையும்;

9-வது: சட்டமுனி வாதசூஸ்திரம் இருநூறில், சமுக்காரம் குரு மூடிக்கும் பாகம், சுண்ணமுறை சொந்தர முறை செயநீர் வகை முறை காயசித்தி முறைக்குரிய விபரங்களையும், வாசிவசப்படும் விபரங்களையும், பிராணைய விபரங்களையும், சுந்தர சமாதி விபரங்களையும், சொரூபமணிக்குளிகை காந்தக் கிண்ணம் கற்பமுறை முதலிய விபரங்களையும்;

10-வது: சட்டமுனி ஆத்மரத்ன ஞானம் இரண்டில், அஷ்டபிண்டமொன்றொன்றும், அண்டர்கோன் பதும் முதலிய விபரங்களையும்;

11-வது: சட்டமுனி குருசூஸ்திரம் இருபதில், மூப்பூவினால் குருமூடிக்கும் முறையும், அக்குருவினால் வகை சித்தியும, யோக ஞான சித்தியும், கற்பகோடிகாலம்வரையாழும் வகை விபரங்களையும்;

12-வது: சட்டமுனி சூஸ்திரம் ஆறில், அஷ்டாட்சரம், சரிகை கிரிகை யோகம் ஞானசித்தி விபரங்களையும், ரவிமதி விபரங்களையும், சிவயோக சித்தி விபரங்களையும்;

13-வது: சட்டமுனி வாதசூஸ்திரம் இருபத்தைந்தில், லிங்க மெழுகு வகை முதலிய விபரங்களையும், குருமூடிக்கும் பாகவிபரங்களையும்;

14-வது: சட்டமுனி கண்டகபட்சனி எண்பத்தொன்றில், பாச சத்தி தூணை, நிருமூர்த்தி ஸ்தானம், சிவயோகதூணை, மநோன்மணி கப், நிவ்வி நிருகடனசித்தி, பஞ்சகர்த்தாள் குருவுத்தி சித்தி, அஷ்ட கர்மசித்தி, அஷ்டபிஸ்டம் செவுனமஸ்ரீகுளிகை நிலதலவகை நிருஷி கற்பசுமாதி அஷ்டாங்கயோக விபரங்களையும்;

15-வது: காலாக்கினிருத்தர் கற்பவித்தி சூஷ்மதிரம் எண்பத்திநான்கில் அண்டர்பதங் காசுறும்மித்தம், சிவயோக ஞான விபரங்களையும், மூல மூதல் ஆறுதார விபரங்களையும், மேலாதார விபரங்களையும், நடுமனை சமஸ்டி விபரங்களையும், வாசிசித்தி விபரங்களையும், கற்பபூரை சித்தி விபரங்களையும், சூருவழலை கருவழலை விபரங்களையும், செவுனைசித்தி விபரங்களையும், மனோன்மணி சித்தி அஷ்டமாசித்தி, அஷ்டாங்கயோக சித்தி விபரங்களையும், ரசத பூரக கும்பக பூரை விபரங்களையும்;

16-வது: இராமதேவர் கண்டக பட்சனி நூற்றியொன்பதில், சவுக்கார குருமுறை, மைமுறை, மெழுகுமுறை, சொர்ணாரம் தாயில வகை விபரங்களையும், அஷ்டமாசித்து விபரங்களையும், சிவதீட்சை சத்திதீட்சை சிவயோக ஞான நிஷ்டை சகலசித்துக்கும் கருமானம் முதலிய சகல விபரங்களையும்;

17-வது: இராமதேவர் பரஞானகேசரி தாறில், பரஞான கேசரி சித்தி விபரங்களையும், சிவஞானயோகசித்தி ரவிமதி சுடர்சித்தி தேக சித்தி ரசகபூரக கும்பக பூரைசித்தி குரு உபதேச மார்க்கம் ஜல நீர் குருவேலை அஷ்டகர்ம வோம விபரங்களையும், கற்பசித்தி காய சித்தி ரசமணி விபரங்களையும், வாசியைக்கட்டி செவுனம் பாயும் வழி யும், சஞ்சாரசமாதி சித்தியும், நேத்திர சிந்தாமணிக் குளிகை விப ரங்களையும்;

18-வது: சுவ்வரன் வாக்கியசூஸ்திரம் அறுபத்தாறுமன்றில், சகல கலைக்கியானம், நந்திதேவருக்குபதேசம், மவுனஅட்சரம், பாசத்தி சதாசிவ தெரிசனம் மூலமுத வாறுதார தேவதை சித்தி விபரங்களை யும்;

19-வது: சுவ்வரன் வாக்கியப் பதினெண்ணில், நவக்கிரக சக்கரம் அதன் அட்சரங்கள் பூஜாவிதி முதலிய விபரங்களையும், சத்தி சித்திக் குரு விபரங்களையும்;

1697/2

4 சைவசித்தாந்தங்களின் முக்கிய விஷயங்கள்.

20-வது: காஞ்சிபுரஞானம் இருபதில், யோகசாதன கற்பமுறை நோன முதலிய விஷயங்களையும்;

21-வது: ஜனகர்ஞானம் இருபதில், அண்டபிண்டம் ரவி-மதி சுழி முதல விபரங்களையும்;

22-வது: அகப்பேய்ச்சித்தர் பூரணஞானம் பதினைந்தில், ஏகநி ராமயம்-சோதி-பூரணமெய்ஞ்ஞானம்-வாசி சிவயோகம் இடகலைபிங் கல சுழிமுனைமார்க்கம்-பஞ்சாட்சர விபரங்களையும், பரிசம் எட்டின் விபரங்களையும், நவவீணஞான விபரங்களையும், கலைமாறுதல்விபரங் களும்;

23-வது: அகப்பேய்ச்சித்தர் பாடல் தொண்ணூற்றில், பராபர வித்து நாதமனை தராதலமுற்பத்தி-பஞ்சபூதம்-தசநாடி விபரங்களை யும், தத்துவத்தின் விபரங்களையும், ஆட்சரம்-சோதிசொரூப தெரிச னம் முத்திமோட்சவிபரங்களையும்;

24-வது: விளையாட்டுச்சித்தர் ஞானசூஸ்திரம் பதினேட்டில், அண்டபிண்டம்-சத்திசிவம்-பரமாத்மா-பூரணமுத்தி மோட்சநிலை-ஏக பராபரவஸ்து வாசிசுழிமுனையிற் செல்லுமார்க்க விபரங்களையும், மெய்ஞ்ஞானயோகம் மூதண்டகோசாயம் லேகியம் குண்டலிசத்தி-பூர ணமதியமுதமார்க்கம் முதலிய விபரங்களையும்;

25-வது: விளையாட்டுச்சித்தர் பாடல் முப்பத்திரண்டில், ஆதிச த்திசிவம்-சோதிசொரூபவிபரங்களையும் பிரபஞ்சத்துள் இடம்பொரு ள்ஏவல் இவைமுதலியது பொய்ப்பொருள்-விளையாட்டென்றும், மெய் ஞ்ஞானமொன்றே மெய்ப்பொருள் என்றும், அதற்குரியவிபரங்களை யும் தெளிவாய்ச்சொல்லப்பெற்றிருக்கின்றன;

முன்னர்சொன்ன ஆறுபாகங்களிலும் ஒளியாயுலாத்துள்ளதை கண்ணுய்த்தெரியவேண்டுமாதலால், ஏழாம்பாகத்தை வாங்கிவாசிக்க கண் ணு வினவுகும். தவசிரோமணிகளின் சாதுரியமதுர வாக்கியத்தன்மை களை இதனால் அறியலாம். ஆகையால் யாவரும் ஏழாம்வாசியத்தை யும் சேர்த்துப்பார்க்கும்படி கோருகிறேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

பூஸ்தசஞ்சாப் புதூர்மண்டபம் மதுரை.